கிராம நலம்

10 MAY

தமிழ் நாட்டில்
படிப்படியாக உருவாகிவரும்
பஞ்சாயத்து ஆட்சி

2-10-60 முதல் 75 பஞ்சாயத்து யூனியன்கள் (முதல் தொகுதி) செயல்படத் தொடங்கி விட்டன.

13-4-61 முதல் 131 பஞ்சாயத்து யூனியன்கள் (2-வது தொகுதி) துவக்கம்..

2-10-61 முதல் 169 (3-வது தொகுதி) பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப் பட்டு விடும்...

மொத்தம் சுமார் **375 பஞ்சாயத்து யூனியன்கள்**

ஏப்ரல் '61

பிலவ ஆண்டு
சித்திரை மீ 1உ

13 ந.பை



"பஞ்சாயத்து ஆட்சி முறை என்ற கனவு நனவாகும் பொழுது, உண்மையான ஜனநாயகம் மலரக் காண்கிறோம். அந்த நிலையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதம் அடிபட்டுப் போய்விடுகிறது. எல்லோரும் தூய உள்ளம் படைத்தவர்களாக இருப்பதைக் காணமுடியும். மனத்தூய்மை, மனிதனின் அறிவுத்திறனுடன் இரண்டறக் கலந்து விடவேண்டும். அந்த நிலை வரும் பொழுது, மனித சமுதாயத்திலே நிலவி நிற்கும் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வு, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற உளுத்துப்போன மனப்பாங்கு இருக்கவே இருக்காது. தன் கையால் பாடுபட்டு, பிறரை ஏமாற்றுமல், நேர்மையான முறையில் உழைத்து, தூய வாழ்வு நடத்த ஒவ்வொருவனும் விழைவான்."

—மகாத்மாவின் மணிமொழி.



கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 6 | ஏப்ரல் 1961 | படி 7

பொருளடக்கம்

பக்கம்.

முதல் அமைச்சரின் புத்தாண்டுச் செய்தி 2
"புத்தாண்டு பிறந்தது" (கவிதை)— "அழகனார்" 3
தமிழ் நாட்டின் ஜனத்தொகை விவரம் 4
பசும்பாலூர் அழைக்கிறது 5
கேள்வியும் பதிலும் 7
"ஒற்றுமை ஓங்குக" (கவிதை) திருச்சி வாசுதேவன் 8
புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும் .. 9
முத்துக்குளித்தல்—மீன் அளத்துறை அமைச்சரின் பேச்சு 11
ஆசிரியர்களுக்குத் தேசிய விருதுகள் 12
காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்— திரு. வெ. சாமிநாத சர்மா .. 13
முதியோர் கல்விக் கூடங்கள்—திரு ரகுராம்சிங் எம். ஏ. பி. டி., .. 15
வானொலி நிகழ்ச்சிகள் 17
"உயிர்த்தொழில்" (கவிதை)—கவிஞர் சு. மு. சொக்கலிங்கன் .. 18
நிலவளம் காத்தல்—திரு கே. எஸ். சுப்பிரமணியம் 19
கடிதக்கருத்தரங்கு 21
சிறிய கிராமத்தின் பெரிய உதாரணம் 22
வேலை வசதித் தகவல் ஆராய்ச்சி 22
"ஒன்றே குலம்" ஓரங்க நாடகம்—திரு எஸ். பூமிநாதன் .. 27
"ஜப்பானின் பிறப்பு வீதம் பத்தாண்டுகளில் பாதியாகக் குறைந்தது எப்படி?" திரு ஆர். ஏ. கோபாலசாமி ஐ. ஸி. எஸ். 31

பகுதி-2

கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, அரசாங்க ஆணைகள் .. (i to xii)

அட்டைப்படம் :—2-வது தொகுதி, 3-வது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் 131, 169 என்றிருப்பது பிழை. அதை, முறையே 129, 171 என்று திருத்தி வாசிக்கவும்.

[விவரம் 18-ம் பக்கம் பார்க்க]

'கிராம நல' இதழ் ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்.,
பிரதமச் செயலாளர்.

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி
கிராம அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ எஸ் கிருஷ்ணசாமி பிள்ளை
துணைக் காரியதரிசி [பஞ்சாயத்து]

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [பயிற்சி]

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [வேலைமுறை]

ஸ்ரீ எஸ். வேங்கடரமணன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி, நிதித்துறை [திட்டம்

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி-
ஆசிரியர்.

"கிராம நலம்" பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் "ஆசிரியர், "கிராம நலம்", கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கிராம நலம்–சந்தா விவரம்

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் "கிராம நலம்" பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் 'பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டா. வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது.

“பஞ்சாயத்து ஆட்சி வளர ஒற்றுமையுடன் பாடுபடுவோம்”

[முதல் அமைச்சரின் உருக்கமான வேண்டுகோள்]



புது வருடப் பிறப்பாகிய, இந்த நல்ல நாளில், மேலும் 129 புதிய பஞ்சாயத்து யூனியன்கள், தமிழ் நாட்டில் ஆரம்பமாகின்றன.

சென்ற ஆறு மாதங்களுக்கு முன், 75 பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பமாயின. அவை நல்ல முறையில் நடைபெற்று வருவதாகவும், யூனியன் தலைவர்களும் அங்கத்தினர்களும் அந்தந்த வட்டாரங்களின் வளர்ச்சியில் போதிய கவனம் செலுத்தி வருகிறார்கள் என்றும், தெரிய வருகிறது. அதேபோல, இன்று ஆரம்பமாகும் இந்த 129 பஞ்சாயத்து யூனியன்களும் சிறந்த முறையில் வேலை செய்யுமென்றே நம்புகிறேன். மீதமுள்ள 171 பஞ்சாயத்து யூனியன்கள், இந்த வருடம் காந்தி ஜெயந்தி விழாவின்போது ஆரம்பமாகிவிடும்.

நான் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது, கிராமத் தலைவர்கள் தங்களுடைய கிராமங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துகொள்வதில் விசேஷ சிரத்தை காட்டி, பெரு முயற்சிகள் செய்து வருவதைப் பார்க்கிறேன். கிராம மக்களிடையே சுய முயற்சியும், பொறுப்புணர்ச்சியும், பொது நல ஆர்வமும் வளர்ந்து வருவதை, இதன் மூலம் அறியமுடிகிறது. இவையெல்லாம், நம்முடைய கிராமங்களின் முன்னேற்றத்துக்கான நல்ல அறிகுறிகளாகும்.

அடுத்த ஐந்தாண்டுகளில் நாட்டின் அபிவிருத்திக்காக அரசாங்கம், நல்ல திட்டம் வகுத்துள்ளது. அதன் நோக்கம், நாட்டு மக்கள் எல்லோருக்கும் போதுமான நல்ல உணவும், உடையும், குடியிருப்பு வசதியும் கிடைப்பதுடன், படிக்க வேண்டிய வயதுள்ள பிள்ளைகள் எல்லோருடைய படிப்புக்கும் வசதி செய்தாக வேண்டும். எல்லோருக்கும் வேலையும், வருமானமும் கிடைப்பதற்கு வேண்டிய சிறு கைத்தொழில்கள் பெருக வேண்டும். கிராம மக்களின் பொருளாதார வசதி உயர்வதோடு, கிராமத்தில் உள்ளவர்கள் எல்லோரும் சாதி, மத வித்தியாசமின்றி, ஒருவருக்கொருவர் அன்போடு பழகி, ஊருக்குச் செய்யவேண்டிய அபிவிருத்திவேலைகளை நல்ல முறையில் செய்தாக வேண்டும்.

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் இவ்வருடம் தொடங்கப்போகும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கும், முக்கியமான வித்தியாசம் உண்டு. அதாவது, கிராம அபிவிருத்திக்கான திட்டங்கள்பற்றிய எல்லாப் பொறுப்புக்களும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படும். இந்தப் புதிய பொறுப்பை ஏற்க முன்வந்திருக்கும் பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லோரும், ஒன்றுபட்டு, உற்சாகத்தோடு இந்தக் கடமையை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் தங்களுடைய அலுவல்களைத் தாமதமின்றிச் செய்வதற்கான வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அரசாங்க இலாகாக்கள் பஞ்சாயத்துக்களுடன் ஒத்துழைத்து அவைகளுக்கு உதவி செய்வதற்கும் ஏற்பாடாகி இருக்கிறது.

முக்கியமாக, உணவு உற்பத்தியைப் பெருக்கும் விஷயத்தில் பஞ்சாயத்துக்கள் அதிகப் பொறுப்பை ஏற்க வேண்டும். இதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து, பஞ்சாயத்துத் தலைவர்களின் ஒத்துழைப்பின் மூலம் வெற்றிகரமாக நிறைவேற்ற எண்ணியிருக்கிறோம். பொறுக்கு விதைகள், நவீன கருவிகள், பசுந்தாள் உரம் தயாரிப்பு, புதிய சாகுபடி முறைகள், பயிர்ப் பாதுகாப்பு, முதலியவற்றின் மூலம் உணவுப் பெருக்கத்தை அதிகரிக்க ஒவ்வொரு பஞ்சாயத்தும் முன்வர வேண்டும். இதற்கான எல்லா வசதிகளையும் செய்து தர அரசாங்கம் தயாராய் இருக்கிறது.

பஞ்சாயத்து ஆட்சிக்கான சட்டங்களை எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு நமது சட்டசபைகளில் நிறைவேற்றினர். கிராமங்களுக்குத் தேவையான நிதி வசதிகளைப்பற்றி, அவர்கள் அனுபவத்தால் அறிந்து சொன்ன ஆலோசனைகளையொட்டியே, ஈட்டு மானியம் அளிக்கும் புதிய கொள்கை உருவாக்கப்பட்டது. அதாவது, பொதுநலப்

பணிகளுக்குத் தேவையான செலவில் ஒரு பகுதியை, அந்தந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பொது ஜனங்களே வசூலிக்க முன்வந்தால், அதற்கு ஈடான தொகையை அரசாங்கம் மானியமாகக் கொடுத்து உதவும். இந்தப் புதிய கொள்கையின் விளைவாக, பஞ்சாயத்துத் தலைவர்கள், தம்முடைய பொதுநல ஆர்வத்தைச் செயலில் காட்டி, கிராம ஜனங்களுக்கு நல்ல முறையில் சேவை புரிவதற்கு, சிறந்த சந்தர்ப்பம் இப்போது அளிக்கப்பட்டிருக்கிறது.

மக்களிடம் பொறுப்புணர்ச்சி வளருவதின் மூலம்தான் நாட்டில் ஜனநாயக அமைப்பு வலுப்பெறும். பஞ்சாயத்து ஆட்சி முறை எந்த அளவுக்குச் சிறப்பாக நடைபெறுகிறதோ, அந்த அளவுக்கு தேசத்தில் ஜனநாயக ஆட்சி சிறந்து விளங்கும்.

கிராமங்களில் உள்ள எல்லோரும் ஏழை, பணக்காரர்கள் என்ற வித்தியாசம் இல்லாமல், வாழ்க்கைக்கு அவசியமான வசதிகள் எல்லாம் கிடைக்கப்பெற்று, மக்கள் சுதந்திர உணர்ச்சியுடன் வாழ வேண்டுமென்று காந்தியடிகள் விரும்பினார். அதற்காகவே, அவர் அல்லும் பகலும் பாடு பட்டார். "எல்லோரும் ஒன்றுபட்டால்தான் இந்த நாட்டுக்கு விமோசனம் உண்டு" என்ற உண்மையை நமக்கு உணர்த்தினார்.

காந்தியடிகள் காட்டிய வழியில் கிராமம் முழுவதும் ஒரு குடும்பத்தைப் போல வாழ்ந்து, ஒரே குடும்பத்தைப் போல சிந்தனை செய்து, ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும். பஞ்சாயத்துக்கள் மூலம் கிராமங்கள் உயர்வதற்காகச் செய்யப்படும் எல்லா முயற்சிகளும் வெற்றியடையும் என்று நம்புகிறேன்.

கிராமங்களை உயர்த்துவதற்கான இந்த முயற்சியில் ஈடுபடப் புது வருடம் பிறக்கும் இன்று உறுதி செய்து கொள்ளுவோம்.

(தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று (13-4-61) முதலமைச்சர் திரு காமராஜ் அவர்கள் வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு.)

புத்தாண்டு பிறந்தது!

"அழகனார்"

நோக்கிடும் திக்கி லெல்லாம்
நறுமலர்க் காட்சி; மக்கள்
ஆக்கிடும் பொருளி லெல்லாம்
அளப்பரு மேன்மை; மாந்தர்
வாக்கினில் பொதுமை; பேசும்
வார்த்தையில் இனிமை; போகும்
போக்கினில் வீரம்; அந்தப்
பாதையில் தனித்த மாட்சி!

பாரினில் எந்தத் திக்கும்
பார்த்தது பொலிவு; கூடும்
காரிருள் விலகி னாற்போல்
கலகலப் போசை; வீசும்
வாரிதம் அடங்கி, மேலாம்
வளம்பல ஈயும்; தூறும்
மாரியின் வரவி னாலே
மாநிலம் செழித்த தம்மா!

பெரும்புவி முழுதும் மக்கள்
பேசுவர் சீர்சி றப்பை;
தரும்பல மேன்மை யாலே
தரணியே உயரும்; வாழ்வு
கரும்பென இனிக்கும்; யாரும்
கவலையே காணார்; இங்கே
வரும்பல உயர்வி னாலே
வளர்புகழ் பிலவ கொள்ளும்!

வேண்டிடும் நலங்கள் யாவும்
விரும்பியே தந்து, நெஞ்சைத்
தோண்டிடும் துயரம் உண்டேல்
தூர்த்தியே இனித்து, அன்பைத்
தூண்டியே அருளை வீசி
தேனிதழ் தந்தே, பாரில்
நீண்டிடும் ஆண்டி லெல்லாம்
நிகரிலை எனும்பேர் கொள்ளும்!

தமிழ்நாட்டில் மக்கள் எண்ணிக்கை

மூன்று கோடி நாற்பது லட்சம்

பதின்மூன்று மாவட்டங்களடங்கிய தமிழ்நாட்டில் மக்கள் எண்ணிக்கை 1961 மார்ச் மாதம் 33,650,917 ஆக இருந்ததாக, தாற்காலிகமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அவர்களில் 16,915,454 ஆண்களும், 16,735,463 பெண்களும் இருந்தனர். 1951–61 வரை பத்து வருட காலத்தில் ஜனத் தொகை 11·73 சத வீதம் அல்லது வருடமொன்றுக்கு 1.17 சத வீதம் அதிகரித்திருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் ஜனத் தொகைப் பெருக்க விகிதம் மிகவும் அதிகமாக 31.34 சத வீதமாக இருக்கிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இது மிகவும் குறைவாக 7.67 சத வீதமாக இருக்கிறது.

தமிழ் நாட்டில் ஆண், பெண் விகிதம் நூறு ஆண்களுக்கு 99 பெண்களாகும். இராமனுதபுரம் மாவட்டத்தில் இவ்விகிதம் 100 ஆண்களுக்கு 106 பெண்கள் ஆகும். தமிழ் நாட்டில் சதுர மைல் ஒன்றுக்கு 671 பேர் இருக்கின்றனர். சென்னை நகரத்தில் சதுர மைல் ஒன்றுக்கு 35,208 பேரும் நீலகிரி மாவட்டத்தில் 416 பேரும் இருக்கின்றனர்.

ஆயிரம் பேரில் 302 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். ஆயிரம் ஆண்களில் 430 ஆண்களும், ஆயிரம் பெண்களில் 173 பெண்களும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் அதிகபட்ச விகிதம் சென்னை நகரத்திலும், குறைந்தபட்ச விகிதம் சேலம் மாவட்டத்திலும் காணப்படுகின்றன.

தமிழ் நாட்டு மாவட்டங்களின் ஜனத்தொகை

தமிழ் நாடு: 50,132 சதுர மைல்.

பெயர்.	1961-ல் ஜனத்தொகை. மொத்தம்.	ஆண்கள்.	பெண்கள்.	எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். சதவீதம். மொத்தம்.	(ஆண்களில்) ஆண்கள்.	(பெண்களில்) பெண்கள்.
	33,650,917	16,915,454	16,735,463	30·22	42·98	17·32
சென்னை (மாநகராட்சி) ..	1,725,216	907,269	817,947	58·84	68·96	47·62
செங்கற்பட்டு	2,193,721	1,120,146	1,073,575	26·82	38 78	14·35
வட ஆர்க்காடு	3,141,983	1,580,023	1,561,960	23·69	33·74	14·51
தென் ஆர்க்காடு	3,041,120	1,533,815	1,507,305	24·18	37·54	10·58
சேலம்	3,826,349	1,946,374	1,879,975	18·42	27·52	8·99
கோயமுத்தூர்	3,541,401	1,802,585	1,738,816	29·36	42·07	16·19
நீலகிரி	409,440	213,926	195,514	34·39	46·66	20·96
மதுரை	3,204,866	1,606,809	1,598,057	32·26	46·60	17·84
திருச்சிராப்பள்ளி	3,169,599	1,580,243	1,589,356	28·56	42·92	14·28
தஞ்சாவூர்	3,249,960	1,612,973	1,363,987	32·56	47·40	17·93
இராமனுதபுரம்	2,420,943	1,176,371	1,244,572	31·27	47·15	16 26
திருநெல்வேலி	2,729,467	1,330,907	1,398,560	35·39	48·75	22·67
கன்னியாகுமரி	996,852	504,013	492,839	48·08	55·61	40·39

பிற ராஜ்யங்களின் ஜனத்தொகை விவரம்

ராஜ்யங்கள்.	மொத்த ஜனத்தொகை.	ஆண்கள்.	பெண்கள்.	எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். சதவீதம்.
கேரளா	16,875,199	8,345,897	8,529,302	46·22
ஒரிஸ்ஸா	17,565,645	8,772,194	8,793,451	21·52
மகாராஷ்டிரம்	39,504,294	20,419,059	19,085,235	29·70
மத்தியப் பிரதேசம் ..	32,394,375	16,598,526	15,795,849	16·89
பஞ்சாப்	20,298,151	10,866,910	9,431,241	23·72
மேற்கு வங்காளம் ..	34,967,634	18,611,085	16,356,549	29·11

பசும்பாலூர் அழைக்கிறது!

[திருச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 130 நிலக் குடியேற்றங்களுள் (Land-colony) ஒன்று பசும்பாலூர். நம் அரசாங்கப் பிரதம காரியதரிசி திரு. ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ். அவர்கள், 7–3–61 அன்று இந்தக் குடியேற்றங்களுள் சிலவற்றைப் பார்வையிட்டு, கிராம மக்களின் முயற்சியினையும், அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் கண்டு மகிழ்ந்தார்கள். அவர் பார்வையிட்டுப் பாராட்டிய குடியேற்றங்களுள் ஒன்றான, "பசும்பாலூர் நிலக் குடியேற்றம்" பிறந்த கதையைக் கூறுகிறது இக்கட்டுரை.

—ஆசிரியர்.]

நம் நாட்டுக் கிராம மக்களின் சமுதாய வாழ்வில் விழிப்புணர்ச்சியும், பொருளாதார மறுமலர்ச்சியும் ஏற்பட, அரசாங்கம் மேற் கொண்டுள்ள திட்டங்கள் பலவாகும். அவற்றுள் ஒன்று, நிலமற்ற ஏழை உழவர்க்கு நில மளித்துக் குடியேற்றங்களை அமைத்து, அவர்கள் வாழ்வில் வளம் பெருகச் செய்வதாகும். அதன் ஒரு பகுதியாக, இப்பொழுது திருச்சி மாவட்டத்தில் கன்னுகுடி, வேப்பந்தட்டை, மங்களமேடு, நெற்குணம் முதலான 130 நிலக் குடியேற்றங்கள் இயங்கிவருகின்றன. அவற்றுள் ஒன்றுதான், பெரம்பலூர் வட்டத்தைச் சேர்ந்த பசும்பாலூர் நிலக் குடியேற்றம்.

1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திருச்சி மாவட்டக் கலெக்டர் திரு. குலாம் மகம்மது, ஐ.ஏ.எஸ். அவர்களால் அமைக்கப்பட்டது பசும்பாலூர் நிலக் குடியேற்றம். பெரம்பலூர் வட்டத்தைச் சேர்ந்த பாதங்கி என்ற ஊரில் சமுதாயத்தின் கடைநிலையில்கிடந்து, வாழ வகையறியாமல் உழன்று கொண்டிருந்த, நிலமற்ற ஏழை உழவர்களின் வாழ்வில் ஒளியை ஏற்றி வைத்தது பசும்பாலூர் நிலக் குடியேற்றம். பிறர் நிலங்களில் கூலிக்கு



நிலச் சீர்திருத்தம்.

உழைத்து வந்த பதினாறு ஏழை உழவர்களின் குடும்பங்கள் பசும்பாலூரை நோக்கித் தம் புது வாழ்வுப் பயணத்தைத் துவக்கின. இரவு பகல் பாராமல் உழைத்த போதிலும், கால் வயிற்றுக் கஞ்சிக்கும் வழியற்றஅவல நிலையை—

இப்பொழுது வசிக்கும் குடிசை காலனி, மாடுகள் ஆடுகள், வெள்ளை போந்தா கோழிகள்.

கூலிப் பிழைப்பை நடத்தி வந்தன இந்தக் குடும்பங்கள். அவர்கள் வாழ்வில் புத்துணர்வும், புது எழிலும் சேர—அவர்கள் முழுமனிதர்களாய் வாழ வழி வகுத்தது அரசாங்கம். சுமார் 134 ஏக்கர் பரப்பளவுள்ள அரசாங்க நிலம் இக்குடியேற்றத்துக்கென அளிக்கப்பட்டது. இதற்கு முன் ஏர் முனை பட்டறியா அந்த நிலப் பரப்பு தன்னிடம் வந்து அடைக்கலம் புகுந்த அந்த ஏழைகளை அணைத்துக் கொண்டது.

பண்படாத அந்த நிலமும் உழவர்களின் உற்சாகமான உழைப்பினால் புத்துணர்வு பெற்றது போலும்! சுமார் 60 ஏகர் நிலம் திருத்தப்பட்டது. ஒரே வறண்ட பூமி. குடி தண்ணீர் கிடைப்பது குதிரைக் கொம்பு. சில ஆண்டுகளுக்கு முன் இதே இடத்தில் சுட்டெரிக்கும் வெயிலில் குடிக்க ஒரு வாய் தண்ணீர் கிடைக்காமல், சுருண்டு

விழுந்து உயிர் விட்டாராம் ஓர் அம்மையார்! அப்படிப் பட்ட வறண்ட பகுதியில் ஒரு பருகு நீர்க்கிணறும், நீர்க் கிணறுகள் (நீர்ப்பாசனக் கிணறுகள்) மூன்றும் வெட்டப் பட்டன. அரசாங்கம் அவர்களுக்குக் கிணறு வெட்டவும், வீடுகளைக் கட்டிக் கொள்ளவும் பணம் அளித்ததுடன், மூன்று ஜோடி உழவு மாடுகளையும் அளித்துதவியது. அரசாங்கம் அளித்த பணத்தில், செலவு போக, மீதம் இருந்த பணத்தில் விவசாயக் கருவிகளையும், விதைக்கு வேண்டிய தானியங்களையும், எரு முதலானவற்றைக் கொண்டு செல்ல வண்டிகளையும் வாங்கிக் கொண்டனர்.

முயற்சியின் திருவினை

பசும்பாலூர் உழவர், தங்கள் முயற்சியின் முதற்படியாகச் சுமார் மூன்று ஏக்கர் திருந்திய நிலத்தில் நஞ்சைப் பயிர் செய்தனர். அந்த விளைவில் கிடைத்த நெல்லில் மறு பட்டத்துக்கு வேண்டிய விதை நெல்லை எடுத்து வைத்து விட்டு மீதியை ஒவ்வொரு குடும்பமும் சம அளவில் பங்கிட்டுக் கொண்டனர். மற்றும், பண்படுத்திய 50 ஏக்கர் நிலத்தில் வரகு, துவரை, ஆமணக்கு, கடலை, கம்பு, சோளம் முதலான புஞ்சைப் பயிர்களும், வளர்ந்து வந்த அவர்களின் ஊக்கத்தைப் போன்றே வளர்ந்தன. இவையன்றி வாழை, எலுமிச்சை, தென்னை, சர்க்கரை வள்ளி, மிளகாய், கத்தரி, முதலான தோட்டப் பயிர்களும் பெருகின. தன்னை நம்பி வந்த உழவர் குடிகளுக்குத் தாயினும் சாலப் பரிந்து, வளத்தினைச் சொரிந்தாள் நில மகள். அவர்கள் சிந்திய வியர்வைத்துளிகள், பொன் மணிகளாக மாறி, அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின.

ஓய்வு நேரத் துணைத் தொழில்கள்

பசும்பாலூர் நிலக் குடியேற்றத்துப் பெண்கள் ஆண்களுடன் சரி நிகர் சமானமாக நின்று உழவுத் தொழில் செய்ய உதவுவதுடன், தங்களுடைய ஓய்வு நேரத்தைப் பயனுள்ள நேரமாகக் கழிக்கின்றனர். வீட்டில் இருக்கும் பொழுது வீண் பேச்சில் காலத்தைக் கழிக்காமல் ராட்டை கொண்டு நூல் நூற்கின்றனர். சிட்டங்களை விற்றுக் கிடைக்கும் சிறு சேமிப்பினால் பயனடைகின்றனர். கோழி வளர்க்கின்றனர். உழவு மாடுகளையும் நன்கு பராமரித்துக்கொள்கின்றனர். அவர்களுடைய கண் காணிப்பினால், இன்று பத்துஜோடி உழவு மாடுகளும், நூற்றுக்கு மேற்பட்ட கோழிகளும், அவர்களுக்கு மிகுந்த பயனை அளித்து வருகின்றன.

வீடு கட்டுதல்

சிறுவர் முன்னேற்றம்

கண்ணிருந்தும் குருடராய் வாழ்ந்த பழைமை மறைந்து, வருங்காலம் ஒளி பெறச் செய்ய, பசும்பாலூர்க் குடியேற்றத்தின் பெற்றோர், தம் பிள்ளைகளைப் பக்கத்தில் உள்ள களத்தூர்ப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைக்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கை ஒரு நிறைவுடைய வாழ்க்கையாக விளங்கக் கல்வியறிவும் அச்சிறுவர் பெற்றுச் சிறக்கின்றனர்.

ஒரே குடும்பம்

பசும்பாலூரில் வந்து தங்கிய போது பதினாறு குடும்பங்களில் பத்துக் குடும்பங்கள் அரிஜனக் குடும்பங்கள்; ஆறு குறவர் குடும்பங்கள். ஆனால் இன்று அவை "பசும்பாலூர் நிலக் குடியேற்றம்" என்ற ஒரே குடும்பம்.

வீடுகள் கட்டப்படுகின்றன

அவர்களுடைய இன்பமும், துன்பமும் தனி மனிதருக்கு—தனிக் குடும்பத்துக்கு என்றில்லை. அவர்களுடைய வரவும்—செலவும் அப்படியே. இத்தகையதொரு கூட்டு முயற்சியை, சமுதாய ஒருமையை, சாதி பேதமற்ற—ஏற்றத் தாழ்வற்ற ஒரு தன்மையை உடைய புதிய சமுதாயத்தைக் கண்ட பெருமை, பசும்பாலூர் நிலக் குடியேற்றத்துக்கும் உண்டு. ஒவ்வொரு குடியேற்றத்துக்கும் உண்டு. அந்தக் குடியேற்றத்து மக்களின் மனத்தில் ஏற்பட்டிருக்கும் 'உழைப்பு அனைவருக்கும் ஒன்று—அதன் பயன் நம் அனைவருக்கும் உண்டு; நம்முள் வேறு எந்த வேற்றுமையும், சாதிப் பிரிவும், பிறவும் இல்லை' என்ற எண்ணம்—மனப்புரட்சி நம் நாட்டுக் கிராம மக்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவதாகும்.

அவர்கள் தங்களுக்கென்று ஒரு தலைவரையும், இரண்டு துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவர்களுடைய ஒழுங்கு முறைக்கு உட்பட்டுப் பணியாற்றுகின்ற கட்டுப்பாடு வியந்து பாராட்டுதற்குரியதொன்றாகும். இது ஜன நாயக முறையில் அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையையும் பயிற்சியையும் எடுத்துக் காட்டுகின்றது.

"தன் கையே தனக்குதவி" என்று தங்கள் உழைப்பை நம்பி வந்து பசும்பாலூரில் குடியேறிய உழவர் குடி, இன்று சமுதாயக் கூட்டுறவு உணர்வும், பொருளாதாரத்தில் தன்னிறைவும், உலகியல் தெளிவும் கொண்டு முன்னேறி வருகின்ற காட்சி, அரசாங்கத்தின் கிராமப் புனரமைப்புப் பணியின் வெற்றிக்குச் சாட்சியாகும்.

கேள்வியும் பதிலும்

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும் செஸ் வரி விதித்தலும்

கேள்வி.—1—பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் 'செஸ் வரி' விதிக்க வேண்டிய விகிதம் என்ன ? இந்த விஷயத்தில் அரசாங்கத்தின் கருத்து என்ன?

பதில்.—(அ) பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் விதிக்க வேண்டிய "செஸ் வரி"யின் உச்சவரம்பை அரசாங்கம் நிர்ணயிக்கவில்லை. என்ற போதிலும், கிராமஅபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை 444, 3-வது பாராவில், ஒரு ரூபாய் நில வரியில் 25 ந.பை. வரையில், செஸ் வரியாக விதிக்கலாம் என்று வரைமுறை செய்யப் பட்டிருக்கிறது. இந்த 25 ந.பை. வரையறை நம் நாட்டின் சராசரி நிலையை உத்தேசித்து அமைக்கப் பட்டது. இப்பொழுது பல பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் 25 ந.பைக்கு மேலும் செஸ் வரிவிகிதத்தை உயர்த்தி, தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. எனவே, 25 ந.பை. என்று உச்சவரம்பு விகிதத்தை நிர்ணயிப்பது அத்தகைய பஞ்சாயத்துக்கள் தல வரி விதிப்பு வகையில் செலுத்தும் ஊக்கத்தைப் பாதிப்பதாகவும், அந்த யூனியன்களின் வரவு-செலவுத் திட்டத்தை சரிக்கட்டுவதில் மிகுந்த தொல்லையை அளிக்கும் என்றும், சொல்லப்படுகிறது. 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்படி, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், அரசாங்கம் நிர்ணயிக்கும் உச்சவரம்பு வரிவிகிதத்துக்குட்பட்டு, வரிவிதிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றன.

(ஆ) பஞ்சாயத்து யூனியன்கள் தங்களுக்களிக்கப்பட்டுள்ள தல வரி விதிப்பு அதிகாரங்களைச் செயல்படுத்துவதன் வாயிலாக, அவற்றின் வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான், அரசாங்கத்தின் நோக்கமே தவிர, இப்போதைக்கு செஸ் வரி விதிப்புக்கு உச்சவரம்பு ஏற்படுத்திச் செயல்படுத்த வேண்டும் என்பதல்ல. ஆகவே, இவ்வரி விதிப்பில், முழு அதிகாரமும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கே அளிக்கப் பட்டுள்ளன. இதைப் பற்றிய அரசாங்கத்தின் நோக்கம் கலெக்டர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் எந்த விகிதாச்சாரத்திலும் வரியை விதிக்கலாம். ஆனால் இப்படி அதிகப் படியாக விதிக்கப்படுவதின் விளைவினால், மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கலெக்டர் கருதுவாரேயானால், அவர் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு வரியைக் குறைத்து விதிக்க, யோசனை கூறலாம்.

கேள்வி 2.—1960 ஜூன் மாதத்திலிருந்து, தமிழ்நாடு அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட புதிய சம்பள விகிதங்களை, பஞ்சாயத்தில் பணிபுரியும் சிப்பந்திகளுக்கும் உண்டா ?
(ஜகந்நாதன், தலைவர், பஞ்சாயத்துபோர்டு, குத்தாலம்)

பதில்.—முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களில் வேலைசெய்யும் சிப்பந்திகளைப் பொறுத்த மட்டிலும், அரசாங்கம் ஓர் ஆணை பிறப்பித்துள்ளது. அந்த ஆணையின்படி, ஊதியக் குழுவின் சிபாரிசுகளின் (Pay Commission Recommendations) அடிப்படையில், முதல் வகுப்புப் பஞ்சாயத்துக் களில் பணி புரிவோருக்குத் திருத்தச் சம்பள விகிதங் களின்படி, ஊதியம் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை, 1961 பிப்ரவரி 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 471). கிராமப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தமட்டில், இது சம்பந்தமாக, தனியாக, உத்தரவு பிறப்பிக்கத் தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது. ஏனெனில் கிராம அதிகாரிகளுக்கு ஏற்கெனவே "பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ்" அளிக்க உத்தரவாகியுள்ளது. (கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத்துறை, 1960 ஆகஸ்ட் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 644).

[இதைப்பற்றி தமிழ்நாடு சட்டசபையிலே, 1961 மார்ச் 24-ம் தேதியன்று நிதிநிலை அறிக்கை பற்றி நடந்த விவாதத் திற்குப் பதிலளித்தபோது நிதி அமைச்சர் அவர்கள் விளக்கிப்பேசினர்.]

கேள்வி 3—கிராமப் பஞ்சாயத்து அங்கத்தினர் தேர்தல் நடந்து, தலைவர் தேர்தல் நடைபெறுவதற்கு முன் உள்ள இடைக்காலத்தில், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அங் கத்தினர் ஒருவர் ராஜிநாமா செய்வதாயின், அவர், தம் ராஜிநாமாவை யாரிடம் கொடுக்கவேண்டும் ?
(வை. சுப்பிரமணியன், பி.எஸ்.ஸி., வளையாம்பட்டு, விழுப்புரம் ஆர்.எம்.எஸ்.)

பதில்.—தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 34 (3) பிரிவின்படி, அந்த இடைக்காலத்திற்கென ஒரு 'தற்காலிகத் தலைவர்' இருப்பார். அவரிடம், மேற்சொன்ன நிலையில், ராஜினாமாவைக் கொடுக்கலாம்.

கேள்வி 4.—வட்டார ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் கொண்டுவரப்படும் தீர்மானங்களைப் பற்றி, அங்கத்தினர்களுக்கு முன் அறிவிப்பு அனுப்பாமல், தீர்மானங்கள் கொண்டுவரலாமா ? அத்தீர்மானங்களை நிறைவேற்றலாமா? அவை செல்லுபடி ஆகுமா ? (தலைவர், ஊராட்சிமன்றம், பண்ணை மூன்றடைப்பு).

பதில்.—இதுவரை வட்டார ஆலோசனைக் குழுவின் கூட்ட நிகழ்ச்சிகள் தயாரித்தல்பற்றி அரசாங்கத்திடமிருந்து, எந்தவிதமான அறிவிப்புக்களும் அனுப்பப்படவில்லை. இருப்பினும், சில வட்டாரங்களில் கூட்ட நிகழ்ச்சி விவரங்கள், குறிப்புக்கள் தமிழில் அச்சடிக்கப்பட்டு அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படுகின்றன. வட்டார ஆலோசனைக் குழுவின் அலுவல்கள் முழுக்க முழுக்க ஆலோசனை கூறும் வகையைச் சேர்ந்தவைகளே தவிர, பஞ்சாயத்து மன்றங்களையோ, வட்டாரங்களையோ, அத்தீர்மானங்களின்படி நடக்குமாறு கட்டுப்படுத்தா. ஆகவே, அங்கத்தினர்களுக்கு முன் அறிவிப்பு செய்யாமல் வட்டார ஆலோசனைக் குழுவின் கூட்டங்களில், தீர்மானங்களைக் கொண்டுவந்து விவாதிப்பதில், தடை ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

பெருவாரியான அங்கத்தினர்களின் ஆதரவைப் பெறும் போதுதான், பொதுவாக, தீர்மானங்கள் நிறைவேறுகின்றன. அவ்வாறு நிறைவேறிய தீர்மானங்கள் செல்லுபடியானவை என்று கருதப்படலாம்.

1959 நவம்பர் 27-ம் தேதியிட்ட கிராம அபிவிருத்தித் துறை அரசாங்க ஆணை எண் 281-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி, வட்டார ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள், அவ்வப்போது கூட்டப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, நான்கு மாதங்களுக்குள் தொடர்ந்து இரண்டு கூட்டங்கள் கூட்டப்படவேண்டும். மேலும், வட்டார ஆலோசனைக் குழுக்களை ரத்துசெய்வது குறித்து, தேதி அட்டவணையும் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையின்படி, வட்டார ஆலோசனைக் குழுக்கள் 1962ஆ ஜனவரி மாதம் 1-ம் தேதிக்கு மேல் இருக்க மாட்டா. வட்டார ஆலோசனைக்குழுக்கள் அதிகபட்சம் மூன்று கூட்டங்களாவது நடத்தும் என்று எதிர்பார்க்கப்படலாம்.

ஒற்றுமை ஓங்குக

திருச்சி வாசுதேவன்

(அம்மானை)

தாமரை : ஒற்றுமை நாட்டினில் ஓங்கிவரின் இன்பம்
பெற்றிட லாகுமே அம்மானை—வாழ்வில்
பெருமைகள் சேருமாம் அம்மானை !

அல்லி : தீட்டிடும் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றிக்
காட்ட முயல்வோமே அம்மானை—வளம்
காணப் பணிசெய்வோம் அம்மானை !

தாமரை : கால்நடைச் செல்வத்தைக் கருத்தாய் வளர்த்திடில்
பால் நலம் ஓங்குமாம் அம்மானை—பயன்
பலவும் சுரக்குமாம் அம்மானை !

அல்லி : தானியங்கள் நன்கு மேனியாய்க் காண, அமோனியம் போடுவோம் அம்மானை—புது
முயற்சியால் நன்மையாம் அம்மானை !

தாமரை : தழையுரம் கூடவே தகுதியாய்ச் சேர்த்திடில்
கழனி சிறக்குமாம்அம்மானை—சத்தும்
கணிசமாய் உண்டாமே அம்மானை !

அல்லி : வாட்டும் வறுமையாம் கேட்டை யகற்றவே
கூட்டுறவு கண்டோம் அம்மானை—விதியின்
கொடுமையைச் சாடுவோம் அம்மானை !

இருவரும் : ஒற்றுமை நாட்டினில் ஓங்கிவரின் இன்பம்
பெற்றிட லாகுமே அம்மானை—இது
முற்றிலும் உண்மையே அம்மானை !

“புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும்”

[தஞ்சை மாவட்டத்தில் பிரதமச் செயலாளரின் சுற்றுப்பயணம்]

சென்ற 8—3—1961 அன்று தமிழ்நாடு பிரதமச் செயலாளர், ஸ்ரீ ஆர். எ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்., அவர்கள் தஞ்சை மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் இயங்குவதைப் பார்வையிடுவதற்காக திருச்சியிலிருந்து தஞ்சை வந்தார். தஞ்சையில் உள்ள மராமத்து இலாகா முசாபரி பங்களாவில், மாவட்ட அலுவலர்களால் வரவேற்கப்பட்டார். அன்று காலை 11 மணிக்குத் தஞ்சை மாவட்டக் கழக அலுவலகத்தில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்தில் நடைபெற்ற, மேலத்தஞ்சை அபிவிருத்தி மன்ற சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அச் சமயம் மன்ற உறுப்பினர்களின் சார்பாக ஸ்ரீ ஆர். சீனிவாசய்யர், எம். எல். எ., அவர்களால் மாலையிட்டு வரவேற்கப்பட்டார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு, புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் அம்சங்களைப்பற்றியும், பஞ்சாயத்துக்களின் ஐந்தாண்டு வரவு செலவுத் திட்டம், குடும்பக் கட்டுப்பாடு முதலியவைகளைப்பற்றியும் உறுப்பினர்களுக்கு விளக்கினார். “மத்திய அரசாங்கம், பாராளுமன்றம் அதன்கீழ் இராஜ்ய அரசாங்கங்கள், சட்டசபைகள் இயங்குவது போல், தமிழ் நாட்டில் சுமார் 12,000 பஞ்சாயத்துக்களும், ஒவ்வொன்றும் சுமார் 40 முதல் 50 பஞ்சாயத்துக்களைக் கொண்ட 374 பஞ்சாயத்து யூனியன்களும், ஒவ்வொன்றும் சுமார் 15 முதல் 20 பஞ்சாயத்து யூனியன்களைக் கொண்ட 21 மாவட்ட அபிவிருத்தி மன்றங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை முழுவதும் 2—10—1961-ல் பூர்வாங்கமாக நிலைநாட்டப்பட்டுவிடும்” என்று கூறினார். “இந்தியா சுதந்திரமடைந்த நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, முதல் ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டு, நிறைவேறிக்கொண்டு வருகிறது. ஏப்ரல் மாதம் முதல் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட ஆரம்ப காலத்திலேயே, ஷ திட்ட நடைமுறை வேலைகளில் கிராம மக்கள் பெருவாரியாகக் கலந்துகொள்ளும் முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி தயாரிக்கப்பட்ட திட்டங்கள், ஐந்தாண்டுத்திட்டத்தின் நோக்கத்தைக் கிராம மக்கள் புரிந்து கொள்ளப் பயன் பட்டாலும், ஷ திட்டங்களை அமுல் நடத்தக் கிராமங்களில் பிரதிநிதித்துவம் வாய்ந்த, பலமான நிறுவனங்கள் இல்லாததால், அமுல் நடத்த இயலவில்லை. இந்தக் குறையை புதிய பஞ்சாயத்துச் சட்டம் நிவர்த்தி செய்ய வழி வகுத்திருக்கிறது. இந்தியா சம்பந்தப்பட்ட வரையில், ஒரு திட்டக்கமிஷன் ஏற்பட்டு, இந்திய அரசாங்கம் செய்ய வேண்டியதென்ன, இராஜ்ஜிய அரசாங்கம் செய்ய வேண்டியதென்ன என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதேபோல ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களும் ஒரு ஐந்தாண்டு வரவு செலவுத்திட்டம் தயாரிக்க வேண்டும். அதில் பஞ்சாயத்துக்கள் என்னென்ன செய்ய வேண்டும், யூனியனில் என்னென்ன செய்ய வேண்டும் என வழி வகுத்துக் கொள்ள வேண்டும்” என்று கூறினார். நாட்டின் ஜனப் பெருக்கமும், அதனால் ஏற்படும் தீமைகளையும் விளக்கி, அதைக் கட்டுப்படுத்த வேண்டியதற்காக குடும்பக்கட்டுப்பாடு திட்டம் அவசியமென வலியுறுத்திக் கூறினார்.

நண்பகல் உணவிற்குப் பிறகு, மாவட்டக் கழகத்தில் நடைபெற்ற கீழத்தஞ்சை மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலும் பிரதம காரியதரிசி கலந்து கொண்டார்.

அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும்

அன்று மாலை, முசாபரி பங்களாவில் மாவட்ட அதிகாரிகளைச் சந்தித்து, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றியும், அவைகளில் இதுவரை ஏற்பட்ட சாதனைகளைப் பற்றியும், மேற்கொண்டு செயல் படுத்த வேண்டியவைகளைப்பற்றியும் விவாதித்தார். குறிப்பாக கிராமங்களில் நீண்ட நாட்களாகச் செய்யாமல் விட்டுப்போன குடிமராமத்து வேலைகளைப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் நிறைவேற்ற வேண்டுமென்றும், அதை நிறைவேற்றுவதற்கு முன்னோடியாக, மேலத்தஞ்சை அபிவிருத்தி மாவட்டத்தில், பாபநாசம் வட்டாரத்திலும், கீழத்தஞ்சையில் கீவளூர் வட்டாரத்திலும், சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சித் தலைவர்களும், பொறி இயல் இயக்குநர்களும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுடன் கலந்தாலோசித்து, எவ்வளவு தூரம் குடி மராமத்து வேலை செய்ய வேண்டும், அதற்கு எவ்வளவு வேலை நேரம் ஆகும் என்று கணக்கிட்டுப் பஞ்சாயத்து யூனியன் மன்றத்துக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றும், அதை நடைமுறை ஆண்டிலேயே, மே மாத இறுதிக்குள், பஞ்சாயத்துக்களும் யூனியன்களும் நிலை நிறுத்த வேண்டுமென்றும், இதற்கு உதவியாக, வட்டார உதவிப் பொறி இயல் இயக்குநர் இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

தஞ்சையை விட்டுப் புறப்பாடு

மறுநாள் 9—3—1961 அன்று காலை தஞ்சையிலிருந்து புறப்பட்டு, பாபநாசம் பஞ்சாயத்து யூனியனுக்கு விஜயம் செய்தார். அங்கு கோட்ட ஆட்சித் தலைவர்,

வட்டார அலுவலர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர், உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டார். அங்கு விவசாய கண்காட்சியைச் சுற்றிப் பார்வையிட்டார். பலதரப்பட்ட விவசாயக் கருவிகள், அவை வேலை செய்யும் முறைகளைப் பற்றி விவசாய அலுவலர்கள் விளக்கினார்கள். பிறகு அங்கு கூட்டப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டார். பிரதம செயலாளர், சுற்றுப் பயணம் செய்வது இயலாத காரியம்; ஆனால், புதிய பஞ்சாயத்துச் சட்டத்தையும், அதனால் ஏற்பட்டு இருக்கும் மாறுதல்களையும், ஏற்படவிருக்கும் மாறுதல்களையும், எல்லோரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இல்லையேல் புரிந்துகொள்ளவைப்பதற்காக இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருப்பதாகக் கூறினார். யானையை நான்கு குருடர்கள் தடவிப் பார்த்து, யானை முறம்போல் இருக்கும் என்று ஒருவனும், தூண்போல் இருக்கும் என்று ஒருவனும் கூறுவதுபோல அல்லாமல், புதிய சட்டத்தினால் ஏற்படும் மாறுதல்களைப் பொதுமக்கள், சம்பந்தப்பட்ட அலுவலர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், அங்கத்தினர்கள் யாவரும் முழுவதும் புரிந்து செயலாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தாம் வந்திருப்பதாகக் கூறினார். பாபநாசம் பஞ்சாயத்து யூனியன் மன்றச் சார்பில் ஒரு வரவேற்புரை பிரதம காரியதரிசிக்கு வாசித்தளிக்கப்பட்டது.

சிறப்புக் கூட்டம் முடிந்த பின்னர், முசாபரி பங்களாவில், பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்களைச் சந்தித்து, குடி மாரமத்து வேலையைத் தீவிரமான முறையில் நிறைவேற்றுவதற்காக, பாபநாசம் வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்றும் அதைப் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றம், கிராம அதிகாரிகள், எல்லோரும் நிறைவேற்றவேண்டுமென்றும் எடுத்துரைத்தார். புறம்போக்குகளில் ஏற்பட்டிருக்கும் ஆக்ரமிப்புகளைக் காலி செய்வதற்கு, நியாயமான முறையில், நியாயமான உதவிகளைப் பஞ்சாயத்துகளுக்கும், யூனியனுக்கும், அரசாங்கம் கொடுக்கும் என்றும் கூறினார்.

பிறகு வழுத்தூரில் சுமார் ரூ. 10,000 செலவில் தானே இயங்கும் மின் விசைக் குடி தண்ணீர் விநியோக நிலையத்தைத் திறந்து வைத்து, அங்கு கூட்டப்பட்டிருந்த பஞ்சாயத்துக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அவ்வமயம், பஞ்சாயத்தின் சார்பாக ஒரு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. பிரதம செயலாளர் சுற்றுப்பயணம் செய்யும் பொழுது பலதரப்பட்ட புதிய அனுபவங்கள் பெறலாம் எனத் தான் தெரிந்துகொண்டதாகவும், வழுத்தூரில் ஏற்படுத்தப்பட்டிருந்ததுபோல், ஒரு சொற்பொழிவை பல பள்ளிச்சிறுவர் சிறுமியர்களைக் கொண்டு, பகுதி பகுதியாகப் பிரித்து, சொற்பொழிவாற்றச்செய்யலாம் என்பதைதான் புதிதாக அறிந்துகொண்டதாகவும் மகிழ்வுடன் கூறினார். அங்கு கருத்தடை அறுவை செய்து கொண்ட நபர்களைச் சந்தித்த பின்னர், கபிஸ்தலம் சென்றார். வழுத்தூர் பஞ்சாயத்துச் சார்பில் பிரதம காரியதரிசிக்கு ஒரு வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது.

கிராம உணவு உற்பத்தித் திட்டம்

இடைவேளை உணவிற்குப் பின் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், யூனியன் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன், பஞ்சாயத்து யூனியன் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி விவாதித்தார். பின்னர், விவசாய அலுவலர்களுடன் கிராம உணவு உற்பத்தித் திட்டம், அதி தீவிர சாகுபடித் திட்டம், இவைகள் தயாரிப்பதைப்பற்றி விவாதித்தார். இரண்டிலும், மூன்று பகுதிகள் உள்ளன. அவை முறையே 1. கிராம எரு உபயோகத்தை அதிகப்படுத்தித் தேவையை சரிக்கட்டுதல், 2. பொறுக்கு விதைகளை உபயோகப்படுத்துதல் ; மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றுதல், 3. பயிர்ப் பாதுகாப்பு முறைகள் ஆகும். இவை, இரண்டு திட்டத்திலும் ஒன்றாய் இருப்பதால் இரண்டு திட்டங்களையும் இணைத்து விடலாம் என்றும், எல்லாக் கிராமங்களுக்கும் உணவு உற்பத்தித் திட்டம் தயாரிக்க வேண்டுமென்றும் கூறினர்.

பிறகு அந்தக் கிராமத்திலுள்ள கம்போஸ்ட் குழிகளைப் பார்வையிட்டார். அங்கு, தென்னங்கன்று ஒன்றும், அவர்களால் நடப்பட்டது.

பின்னர், மாயூரம் வட்டாரத்திற்குச் சென்றார். அங்கு பஞ்சாயத்து யூனியன் தலைவர், அங்கத்தினர்கள், நகர சபைத் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரால், யானை முதலிய விசேஷ வைபவங்களுடன் வரவேற்கப்பட்டார். அங்கு, அலங்கரிக்கப்பட்ட பந்தலில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு, பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் சார்பாக ஒரு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

பின்னர், தலைநாயர் கிராமத்தில், புதிதாகக் கப்பி போடப்பட்டு பிரதம செயலாளர் பெயர் சூட்டப்பட்ட 'ஸ்ரீ ஆர்.எ. கோபாலசாமிசாலை' தஞ்சை மாவட்டக் கலெக்டர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்தச் சாலையின் வழியே சென்று, தலைநாயர் பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடத்தை, விளக்கு ஏற்றித் திறந்து வைத்தார். பின்னர் அங்கு ஏற்படுத்தியிருக்கும் செங்கல் சூளையைப் பார்வையிட்டு, செங்கல்சூளை சொசைட்டியினர் அளித்த வரவேற்பைப் பெற்றுக்கொண்டு, மணல்மேடு சென்று, அங்கு மாதர் சங்கத்தினரால் ஏற்படுத்தப்பட்ட கண்காட்சியைப் பார்வையிட்டு, பின்னர், பஞ்சாயத்துக் கூட்டத்தில் கலந்து கொண்டார். மாதர் சங்கத்தினரால் ஏற்படுத்தப்பட்ட கலா நிகழ்ச்சியைக் கண்டுகளித்தபின் சென்னை திரும்பினார்.

முத்துக் குளித்தல்

[22—3—'61 அன்று, தூத்துக்குடியில் நடைபெற்ற முத்துக்குளிப்புத் துவக்க விழாவில் மீன் அளத்துறை அமைச்சர் கனம் திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள் ஆற்றிய தலைமையுரை]

இன்று தொடங்க இருக்கும் இந்த முத்துச்சிலாபம், 1955ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடைபெற்று வரும் சிலாபங்களில் ஏழாவது என்று நமக்கெல்லாம் தெரியும். இந்த முத்துச்சிலாபம் இது வரை நடைபெற்றுள்ள மற்ற எல்லாச் சிலாபங்களையும் விட மிகவும் சிறப்பு வாய்ந்துள்ளது. ஏனென்றால் நமது கவர்னர் அவர்கள், அன்புடன், இந்தச் சிலாபத்தை ஆரம்பித்து வைக்க வந்துள்ளார்கள். அவர்களுடைய வருகை நமக்கெல்லாம் பெருமையையும், மகிழ்ச்சியையும் அளிக்கின்றது.

கவர்னர் அவர்கள், பல வேலைகளுக்கிடையே எங்களுடைய அழைப்பிற்கு இணங்கி, இந்த முத்துச் சிலாபத்தை தொடங்கி வைக்க அன்போடு வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு தூத்துக்குடி மக்கள் சார்பாகவும், மீன் அளத்துறையினரின் சார்பாகவும் நல்வரவு கூறுகின்றேன்.

"புகழ் மண்டிக்கிடந்த தமிழகம்"

சேர, சோழ, பாண்டிய அரசர்களின் ஆட்சிக் காலத்திற்கு முன்பிருந்தே நம் நாட்டின் தென் கோடியிலுள்ள கடற்கரைப் பட்டினங்களாகிய, கொற்கை, தொண்டி, தூத்துக்குடி முதலான பல இடங்களில் முத்துக் குளிப்பு நடந்து வந்துள்ளது. நமது தென் கடல் முத்துக்கள், ரோமாபுரி எகிப்து முதலான இடங்களில் நல்ல வரவேற்பைப் பெற்று வந்திருக்கின்றன. பிளினி, மார்க்கோபோலோ முதலான அயல் நாட்டு அறிஞர்கள் பலர் நமது நாட்டு முத்துக்களைப்பற்றி மிகவும் புகழ்ந்து எழுதியுள்ளார்கள். கிறித்தவ வேதமாகிய பைபிளில் கூட இந்த முத்துக்களைப்பற்றிய குறிப்பு உள்ளது. நமது நாட்டின் பழம் பெருமை பெற்றுள்ள, இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம், காளிதாஸரின் இரகுவம்சம், முதலானபல நூல்களில் நம் தென்கடல் முத்துக்களைப் பற்றியும், அவற்றின் சிறப்பைப்பற்றியும் நாம் காணலாம். பத்துப்பாட்டில் ஒன்பதாவதாகக் கருதப்படும் பட்டினப்பாலை என்னும் நூலில் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைப்பற்றி கூறும்பொழுது அப்பட்டினத்தில்,

> "வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
> குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
> தென்கடல் முத்தும்.........."

குவிந்துகிடநதன என்று கூறப்பட்டுள்ளது. இத்தகைய பழம்பெருமை பெற்றுள்ள நமது தென் கடல் முத்துக்கள் அழகிற்கும், தரத்திற்கும், மதிப்பிற்கும், பெருமைக்கும் பிரசித்தமானவை. பாரசீக வளைகுடா, இலங்கை, ஜப்பான் முதலான பல இடங்களில் முத்துக்கள் கிடைத்தாலும் நமது நாட்டுத்தென்கடல் முத்துக்களுக்குத்தான் "பூர்வீக முத்துக்கள்" என்ற பெருமை உண்டு.

நமது நாட்டிற்கே பெருமை தரும் இந்த முத்துச் சிலாபம் 1955-லிருந்து தொடர்ந்து ஆண்டு தோறும் நல்ல இலாபத்தோடு நடந்து வருவதற்கு காரணமாயிருப்பவர்கள் நமது மீன் அளத்துறையினர் ஆவார்கள். அவர்கள் நடத்திய ஆராய்ச்சியின் மூலம் இந்த ஆண்டு சுமார் 187 லட்சம் முதிர்ந்த சிப்பிகள் தூத்துக்குடி கடலிலே கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த முத்துக்களை யெல்லாம் எடுத்து வந்து மக்களுக்கு அளிக்கும் பெருமை முத்துக்குளிப்போரைச் சார்ந்ததாகும். ஆழ்கடலில் பதுங்கியுள்ள முத்துச் சிப்பிகளை மூழ்கி எடுத்து வரும் நமது குளியாட்கள் மிகவும் திறமையுடையவர்கள். அவர்களுடைய வேலை மிகவும் கடினமானது. முத்துக்குளிப்பவர்களுடைய நலனைக் கருதி நமது அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கிறது. முத்துக்குளிப்போருடைய படகுகளை முத்துக்குளிக்கும் இடத்திற்குக் கொண்டு செல்ல, விசைப்படகுகளை ஏற்பாடு செய்கிறது. தற்சமயம், இந்த வேலைக்குத் தகுந்த படகுகள் அரசாங்கத்தாரிடம் இல்லை. ஆகவே, அரசாங்கம் சுமார் 4 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு பெரிய விசைப் படகைக் கட்ட உத்திரவு பிறப்பித்துள்ளது. அந்தக் படகு கட்டப்படும் வேலை கொச்சியில் தொடங்கப்பட்டுள்ளது. இதே மதிப்புள்ள இன்னொரு படகையும் கட்ட அரசாங்கம் கருதியுள்ளது. அடுத்த ஆண்டில் இந்த இரண்டு படகுகளும் தூத்துக்குடிக் கடலில் தங்களது வேலையைத் தொடங்கும் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு உடனடியாக முத்துக்குளிப்போருக்கு வசதி அளிக்கப் பணச் செலவையும் பாராமல் தனிப்பட்டோரிடமிருந்தும், தூத்துக்குடித் துறைமுக நிர்வாகத்திடமிருந்தும், நல்ல பெரிய விசைப்படகுகளை வாடகைக்கு எடுக்க மீன் அளத்துறையினர் முயற்சி செய்து கொண்டுள்ளார்கள். திறமைசாலிகள் என்று பெருமை பெற்றுள்ள நமது குளியாட்கள் இவைகளையெல்லாம் பயன் படுத்திக்கொண்டு ஊக்கமுடன் உழைத்துத் தங்களால் இயன்ற அளவு முத்துச் சிப்பிகளை ஆழ்கடலில் மூழ்கி எடுத்து வந்து மக்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இதனால் நமது நாட்டிற்கு மட்டுமின்றி குளியாட்களுக்கும் நல்ல வருவாய் கிடைக்கும்.

நாட்டிற்குத் தனிச்சிறப்பு

நமது நாட்டிற்குத் தனிச் சிறப்பை அளிக்கும் இந்த முத்துச் சிலாபம் ஆண்டு தோறும் இங்கு நடக்க வேண்டுமென்று நமது அரசாங்கம் கருதுகின்றது. முத்துச் சிப்பிகள் நமது கடலில் எங்கெங்கெல்லாம் கிடைக்கும், அவற்றை நவீன முறையில் எவ்வாறு சுலப மாக எடுக்க முடியும் என்பவற்றையெல்லாம் அறிய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உணவு விவசாயத்துறையினரின் உதவியினால் டாக்டர் எப். பி. சால்வடோரி என்ற நிபுணரை அழைத்து வந்து ஆராய்ச்சி நடத்தியது. அந்த ஆராய்ச்சியின் பயனாகப் பல புதிய இடங்கள் மன்னார்குடாக் கடலில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. அந்த இடங்களிலெல்லாம் முத்துக்குளிப்பு நடத்த மீன் அளத்துறையினர் தகுந்த முயற்சி எடுப் பார்கள் என்று நம்புகிறேன். மீன் அளத்துறையின் நிர்வாகத்தில் உள்ளவர்களெல்லாம் வாலிபர்களாகவே இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் ஆர்வத்தையும் வலிமையையும் காட்டி மேலும் கடினமாக உழைத்துப் பல ஆராய்ச்சிகளையும் நடத்தி இந்தச் சிலாபத்தை ஆண்டு தோறும் நடத்திக் காட்ட வேண்டும்.

நேர்மையான வியாபார முறை

இந்தச் சிலாபம் நல்ல முறையில் நடக்க, மீன் அளத் துறையினருக்கும் குளியாட்களுக்கும் மட்டுமின்றி, பொது மக்கள், பத்திரிகைககாரர்கள், முத்து வியாபாரிகள் ஆகிய எல்லோருக்கும் பெரும் பொறுப்புண்டு. நான் முன்பு குறிப்பிட்டபடி பட்டினப்பாலையிலே நமது நாட்டு வியாபாரி களைப் பற்றி மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. அவர்கள்,

> " நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
> வடுவஞ்சி வாய் மொழிந்து
> தமவும் பிறவு மொப்ப நாடிக்
> கொள்வது மிகை கொளாது
> கொடுப்பதும் குறை கொடாது "

வாழ்ந்து வந்துள்ளார்கள். அதாவது நமது வணிகர்கள் நியாயத்தோடு, உண்மை பேசி, தமது பொருள் போலவே பிறர் பொருள்களையும் கருதி, தாம் பொருள், வாங்கும் பொழுதும் பிறரை ஏமாற்றாது, விற்கும் பொழுதும் பிறரை ஏமாற்றாது வெளிப்படையாகவே தமது இலாபத் தைக் கூறிப் பண்டங்களை விற்று மிகுந்த செல்வந்தர் களாகச் சிறப்பாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர்கள், அன்று நடத்திய அந்த வியாபாரத்தைப்போல் இன்றும் இங்கு தொடங்கும் இந்தச் சிலாபத்தில் நடக்கவிருக்கும் வியாபாரம் நல்ல முத்துக்களுடன் போலி முத்துக்களைக் கலவாமல் நேர்மையுடன் நமது நாட்டின் பண்பாட் டிற்குப் பெருமையளிக்கும் வகையில் நடக்கவேண்டு மென்று விரும்புகின்றேன். இந்த ஆரம்ப விழாவில் பொது மக்களும் பெரிய வியாபாரிகளும் முத்துக்குளிப் போரும் திரளாகக் கூடி ஊக்கத்துடன் பங்கு கொண்டி ருப்பதைக் காணும்பொழுது, இந்த முத்துச் சிலாபம் நல்ல முறையில் வெற்றியோடு நடைபெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டாகின்றது.

கவர்னர் அவர்களை நமது நாட்டிற்குப்பெருமை தரக் கூடிய இந்த முத்துச் சிலாபத்தைத் தொடங்கி வைக்கும் படி, தமிழ் நாட்டு மக்கள் சார்பாகவும், மீன்அளத் துறையினரின் சார்பாகவும் என் சார்பகவும் வேண்டிக் கொள்கின்றேன்.

ஆசிரியர்களுக்குத் தேசிய விருதுகள்

ஆசிரியப் பெருமக்களின் சேவையைப் பாராட்டி, அவர்களை மேலும் ஊக்குவிக்கும் முறையில், மத்திய அரசாங்கம், அந்தத்துறை யில் பெரும் சேவை புரிந்துள்ள சில ஆசிரியர் களுக்குத் தேசியவிருதுகள் அளித்து அவர்களைக் கௌரவித்து வருகிறது. 1960-61-ம் ஆண் டிற்கு நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் கீழ்க்கண்ட நான்கு ஆசிரியர்கள் இந்த விருது களைப் பெற்றனர் :—

(1) திரு. எம். அருணாசலம்,
தலைமை ஆசிரியர்,
பி. கே. நாடார் உயர்நிலைப்பள்ளி,
திருமங்கலம், மதுரை மாவட்டம்.

(2) திரு. ஏ. சண்பகநாதன்.
தலைமை ஆசிரியர்,
நகராட்சி மன்ற ஆரம்பப் பள்ளி,
ஆனந்தகிரி, கோடைக்கானல்.

(3) திரு. ஆர். கந்தசாமி,
தலைமை ஆசிரியர்,
வடக்கு வரகநேரி நகராட்சி
மன்றப் பள்ளி,
திருச்சிராப்பள்ளி.

(4) திரு. ஆர். எம். கணபதி,
ஆசிரியர்,
பண்டாரசிவன் செந்தில் ஆறுமுகம்
நினைவு ஆதார உயர்நிலைப் பள்ளி,
குலசேகரப் பட்டினம்,
(உடங்குடி வட்டம்),
திருநெல்வேலி மாவட்டம்.

விருது பெற்ற ஆசிரியப் பெருமக்களை மன மாரப் பாராட்டுகிறோம்.

ஆசிரியர்,
"கிராம நலம்"

[இந்திய தேசிய இயக்கத்தின வரலாற்றைச் சுருக்கமாகவும் அழகாகவும் சென்ற இரு இதழ்களிலும் சொன்ன ஆசிரியர், இந்த இதழில், மகாத்மாவின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியுள்ளார்—ஆசிரியர்]

மகாத்மா காந்தி என்று அனைவராலும் கொண்டாடப் படுகின்ற மோகனதாஸ் கரம் சந்திர காந்தி, தற்போதைய குஜராத் மாகாணத்திலுள்ள போர்பந்தர் என்னும் நகரத்தில் 1869 ம் வருடம் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி பிறந்தார். இவர் தகப்பனுர் பெயர் கரம் சந்திர உத்தம சந்திர காந்தி ; தாயார் பெயர் புத்திரிபாய்.

போர்பந்தர், முந்தி ஒரு சிறிய சமஸ்தானமாயிருந்தது. இதில் காந்தியடிகளின் முன்னோர்கள், மந்திரிகளாகப் பணியாற்றி நல்ல பெயரெடுத்தவர்கள். தகப்பனுர் கரம் சந்திரகாந்தி திவானுக அலுவல் பார்த்தவர் ; நீதி நெறியில் சென்றவர் ; பிறருக்கு உபகாரம் செய்து மகிழ்ச்சியடையும் சுபாவமுடையவர் ; ஒழுங்கான பள்ளிக் கூடப்படிப்பு படித்தவரில்லை யென்றுலும் உலக மென்னும் பெரிய பள்ளிக்கூடத்தில் நிறையப்படித்தவர். இவை காரணமாக அக்கம் பக்கத்திலிருந்த சமஸ்தானுதிபதிகளின் நன் மதிப்பையும் பெற்றிருந்தார். இவருடைய கடைசி காலத்தில் ராஜ் கோட் மன்னர், இவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து ஆதரித்துவந்தார்.

காந்தியடிகளின் தாயார் புத்திரிபாய், தெய்வ பக்தி மிக்கவர் ; தமது குலதர்மப்படி எல்லா வித விரதங்களையும் தவருமல் அனுஷ்டித்து வந்தார். உபவாசமிருப்பதில் சலிப்புக் கொள்ளமாட்டார் ! கணவனுரைப் போல உலகியலறிவு நிறையப்பெற்றிருந்தபடியால், அரச குடும்பத்து ஸ்திரீகள் இவரிடம் அதிக விசுவாசம் வைத்திருந்தார்கள் ; இவருடைய ஆலோசனைகளை அடிக்கடி நாடினுர்கள்.

பெற்றேர்களின் நற் பண்புகள் பலவும், காந்தியடிகளிடத்தில் இளமையிலேயே குடி புகுந்தன. பொய் சொல்வதென்பது இவருக்குச் சிறிதும் பிடிக்காது. ஒரு நாள் இவர் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்க்கச் சென்றிருந்தார். இவர் மனத்தில் அது நன்ருகப் பதிந்து விட்டது. அரிச்சந்திரனைப் போல் ஏன் எல்லோரும் சத்திய வாழ்க்கையை நடத்தக்கூடாது என்று தமக்குத்தாமே கேட்டுக்கொண்டார்.

சிறு பிராயத்திலேயே, அதாவது பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்த போதே இவருக்குத் திருமணம் நடை பெற்றது. கஸ்தூரி பாய் என்ற மாதர் மணி, இவருக்கு வாழ்க்கைத் துணைவியாக்கப்பட்டார் !

காந்தியடிகள், பதினெட்டாவது வயதில்—1887ம் வருடம், மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினுர். மேற்கொண்டு படிப்பதில் இவர் மனஞ் செல்லவில்லை. எனவே இவரை இங்கிலாந்துக்கு அனுப்பி அங்கே பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கச் செய்வதென்று குடும்பத்தினர் தீர்மானித்தனர். பாரிஸ்டராகத் தேறி, திரும்பி வந்தால் நிறையப் பணம் சம்பாதிக்கலாமென்பது அவர்கள் நோக்கம்.

ஆனுல் இவர் தாயார், இவர் இங்கிலாந்து செல்வதை அவ்வளவாக விரும்பவில்லை. அங்குச் சென்றால் மகன் கெட்ட பழக்கங்களில் ஈடுபட்டுவிடுவான் என்று அஞ்சினுர். அப்படிச் செல்வதாயிருந்தால், மது பானம், பெண், மாமிசம் இவைகளைத் தொடுவதில்லை யென்று பிரமாணம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டார். அப்படியே பிரமாணம் செய்து கொடுத்து விட்டு, தாயாரின் நல்லாசியுடன், இங்கிலாந்து சென்ருர் காந்தியடிகள்.

இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த காலத்தில், காந்தியடிகள், தாயாரிடம் கொடுத்த வாக்கை எழுத்துப் பிசகாமல் நிறைவேற்றி வந்தார். பாரிஸ்டர் பரீட்சையில் தேறி விட்டு 1891-ம் வருடம் இந்தியா திரும்பினுர். கொடுத்த வாக்குப்படி நடந்த தன் மகனை வரவேற்று ஆசீர்வதிக்கப் புத்திரி பாய் இல்லை ; காந்தியடிகள் வருவதற்கு முந்தியே காலமாகி விட்டிருந்தார்.

இந்தியா வந்ததும் காந்தியடிகள், பம்பாயில் சிறிது காலமும், ராஜ்கோட்டில் சிறிது காலமும் வக்கீல் தொழில் நடத்தி வந்தார். ஆனுல் மெச்சத்தகுந்த வெற்றி யடைந்தார் என்று சொல்ல முடியாது.

ராஜ்கோட்டில் வக்கீல் தொழில் நடத்தி வந்த போது, தென்னுப்பிரிக்காவுக்குச் செல்லும்படியான வாய்ப்பு இவருக்குக்கிடைத்தது. அங்குப் பிரபல வியாபாரம் நடத்தி வந்த, தாதா அப்துல் கம்பெனியின் கோர்ட்டு அலுவல்களைக் கவனிப்பதென்று ஒப்பந்தம் செய்துகொண்டு தென்னுப்பிரிக்காவுக்குப் புறப்பட்டுப்போய்ச் சேர்ந்தார். அங்கு சென்ற சில நாட்களில், அப்துல்லா கம்பெனி சம்பந்தப்பட்ட சில அலுவல்களைக் கவனிக்க பிரிட்டோரியா என்னும் நகருக்கு இவர் செல்ல வேண்டியதாயிருந்தது. அப்படியே, ரெயிலில், முதல் வகுப்புப் பிரயாணியாகச்

சென்றார். வழியில் மாரிட்ஸ்பர்க் என்ற ஸ்டேஷனில், ரெயில்வேயைச் சேர்ந்த வெள்ளைக்காரச் சிப்பந்திகள் இவரைப் பலவந்தமாக முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து இறக்கி விட்டுவிட்டார்கள். ஏனென்றால், கறுப்பு மனிதர்கள் யாரும் முதல் வகுப்பில் பிரயாணம் செய்யக்கூடாதென்று ஒரு விதி இருந்தது. காந்தியடிகள் இந்தியராயிருந்தாலும் கறுப்பு மனிதர் தானே ?

இங்ஙனம் பலவந்தமாக இறக்கப்பட்டது, காந்தியடிகளின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டு பண்ணியது. தென்னாப்பிரிக்கா முழுவதிலும் பரவியிருக்கும் நிறத் துவேஷமே, தாம் அவமானப்பட்டதற்குக் காரணம் என்று தெரிந்து கொண்டார். இதை எப்படியாவது போக்கித்திருவது என்று சங்கற்பித்துக்கொண்டார்.

அடுத்த நாள் காந்தியடிகள் மாரிட்ஸ்பர்க்கிலிருந்து பிரிட்டோரியாவுக்குப் புறப்பட்டார். முதலில் சிறிது தூரம், நான்கு சக்கரங்களைக்கொண்ட வாடகைக் கோச் வண்டியில் செல்ல வேண்டும். இதற்கான பிரயாணச் சீட்டு காந்தியடிகளிடம் இருந்தது. ஆனால் கோச் வண்டியில் இவர், ஐரோப்பியப் பிரயாணிகள் பக்கத்தில் உட்கார வைக்கப்படவில்லை. வண்டியோட்டுகிறவன் பக்கத்தில் உட்காரவைக்கப்பட்டார். இந்த அவமானத்தை இவர் சகித்துக்கொண்டு பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், வண்டி யோட்டியின் காலடியில், அழுக்கடைந்த ஒரு கோணிப் பையை விரித்துப்போட்டு அதில் இவரை உட்காரச் சொன்னான் வண்டியின் " கண்டக்டர் ". இவர் மறுத்தார். அவன் இவரைப் பலவந்தமாகக் கீழே இறக்கிவிட முயன்றான். இவரோ வண்டியின் பித்தளைக் கம்பிகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கீழே இறங்க மறுத்தார். அவன் ஆத்திரங் கொண்டு இவரைக் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். இவர் பிடித்த பிடியை விடவேயில்லை. அவன் பலவாறு திட்டினான். இவர் மௌனஞ் சாதித்தார். இந்தக்காட்சியைக்கண்ட மற்ற ஐரோப்பியப் பிரயாணிகள் இவரிடம் இரக்கங்காட்டினர். இவரை, இருந்த இடத்திலேயே இருக்கச் செய்தனர்.

தென்னாப்பிரிக்காவில் குடியேறியிருந்த இந்தியர்கள், நிறத்துவேஷம் காரணமாகப் பலதடைகளுக்குட்படுத்தப் பெற்றனர். ஐரோப்பியர்களுக்குச் சமதையாக ரெயிலில் பிரயாணம் செய்யக் கூடாது, ஹோட்டல்களில் தங்கக் கூடாது, நடை பாதையில் தாராளமாக நடக்கக் கூடாது என்பன போன்ற தடைகள் இருந்தன. மற்றும், இந்தியர்களுக்கு ஓட்டுரிமை மறுக்கப்பட்டது. ஐரோப்பியர்களுக்குச் சொந்தமான கரும்புத் தோட்டம் முதலியவைகளில் இந்தியர்கள் ஒப்பந்த முறையில் கூலியாட்களாக அமர்த்தப்பட்டுக் கடுமையாக வேலை வாங்கப்பட்டனர். தவிர, இந்தியர்களுக்குத் 'தலைவரி' விதிக்கப்பட்டது. இப்படிப் பல தடைகள். இவற்றை யெல்லாம் எதிர்த்துப் போராடும் பொருட்டு, தென்னாப்பிரிக்காவிலேயே சிறிது காலம் தங்குவதென்று காந்தியடிகள் தீர்மானித்தார். தங்கி இந்தியர்களின் நியாயமான உரிமைகளைப் பெற வேண்டி சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கினார். இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டங்கள் மூன்று முறை (1906, 1908, 1913 ம் வருடங்களில்) நடைபெற்றன. இந்தப் போராட்டங்களில் தமிழர் பலர் சேர்ந்து அநேகத் தியாகங்கள் செய்தார்கள். இந்தப் போராட்டங்களின் போது காந்தியடிகள் எழு தடவை சிறை வாசத்தண்டனை விதிக்கப்பட்டார்.

இங்ஙனம் இந்தியர்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்க, காந்தியடிகள் போராடி வந்த தோடு, 1899 ம் வருடத்திலிருந்து 1902 ம் வருடம் வரை நடைபெற்ற போயர் யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்யும் தொண்டர் படையில் சேர்ந்து அரும் பணியாற்றி வந்தார். மற்றும், போனிக்ஸ் என்ற இடத்தில் ஆசிரமம் ஒன்று அமைத்துக் கொண்டு, அங்கு உணவுப் பரிசோதனை முதல் ஆத்ம பரிசோதனை வரை, எல்லாவற்றையும் நடத்தினார். எளிய வாழ்க்கையில் இன்பம் இருக்கிறதென்ற உண்மையை, தாம் நன்றாக அறிந்ததோடு மற்றவர்களும் அறியும்படிச் செய்தார். இவருடைய பிற்கால, மகாத்மா வாழ்க்கைக்கு, இந்த போனிக்ஸ் ஆசிரம வாசம் இவரைத்தகுதிப்படுத்திக் கொடுத்ததென்று, சுருக்கமாகச் சொல்லலாம்.

1914 ம் வருடம் ஆகஸ்ட்டு மாதம் முதல் உலகப் போர் தொடங்கிய சிறிது காலத்திற்குப் பிறகு, காந்தியடிகள் இந்தியா திரும்பி வந்தார். வந்து சில நாட்கள் கழித்து 1915 ம் வருடம் மே மாதம் ஆமதாபாத்தில் சத்தியாகிரக ஆசிரமத்தை ஏற்படுத்தினார். ஆரம்பத்தில் இதில் மொத்தம் இருபத்தைந்து பேர் இருந்தனர். இவர்களில் பதின் மூன்று பேர் தமிழர்கள். எல்லோருக்கும் ஒரே சமையல், ஒரே சாப்பாடு; ஒரு குடும்பமாகவே வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

இந்த ஆசிரமத்தின் வாயிலாகச் சமுதாயத்தொண்டு செய்யவேண்டுமென்றே காந்தியடிகள் முனைந்தார். ஆனால் அரசியல் துறையில் ஈடு படவேண்டிய நிர்ப்பந்தம் இவருக்கு ஏற்பட்டது. விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியவர்களுடைய நலன்களுக்காகவும் போராட வேண்டியவரானார்.

பீகார் மாகாணத்தின் சில பகுதிகளில் அவுரிச்சாகுபடி அதிகம். இதற்குக் காரணமாயிருந்த விவசாயிகள் பல விதத் துன்பங்களுக்காளாகி வந்தனர். இவர்களுக்குப் பரிகாரந் தேடிக் கொடுக்கின்ற முறையில் சத்தியாக்கிரகம் நடத்தி, வெற்றி பெற்றார்.

பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் கரும்புத் தோட்டங்கள் முதலியவற்றில் வேலை செய்ய, ஒப்பந்த முறையில், தொழிலாளர் பலர் இந்தியாவில் திரட்டப்பட்டு வந்தனர்.

[18-ம் பக்கம் பார்க்க]

முதியோர் கல்விக் கூடங்கள்

[ஸ்ரீ ரகுராம் சிங், எம்.ஏ., பி.டி., விரிவுரையாளர், கிராமிய உயர்தரக் கல்விக் கல்லூரி, ராமகிருஷ்ணவித்தியாலயம், பெரியநாயக்கன்பாளையம்]

1951-ம் ஆண்டு மக்கள் தொகைக்கணக்குப்படி இந்தியாவில் எழுத்தறிவு உள்ளவர்கள் 16.67 சதவீதம் தான். அதிலும் பெண்களிடையே 7.9 சதவீதம் மட்டும் எழுத்தறிவு படைத்தவர்களாக இருக்கிறார்கள். எழுத்தறிவு இன்றைய சமூகவாழ்விற்கு மிக அவசியமானது. "விஞ்ஞான முன்னேற்றத்திற்கும் தனித் திறமை வளர்ச்சிக்கும் எழுத்தறிவு மிக அவசியம். நல்ல உடல் நலத்திற்கும், திறமையான உழவு தொழிற்கும், தொழிற்சாலைகளை இயக்குவதற்கும், ஜனநாயக அரசியல் அமைப்பிற்கும், நாட்டின் நலத்திற்கும், உலக அறிவிற்கும் மற்றைய நாடுகளைப்பற்றி தெரிந்து கொள்வதற்கும் எழுத்தறிவு இன்றியமையாதது" என்று டாக்டர் ஜூலியன் ஹக்ஸ்லி கூறுகிறார். எழுத்தறிவு அற்றஒருவன் சமுதாயத்திற்கு ஒரு சுமையாக இருப்பதுடன், உலக சமாதானத்திற்கே கேட்டை விளைவிக்கலாம். அவன் எழுத்தறிவு உள்ளவனைப் போல் நடந்துகொள்ள முடியாததினால், சமுதாயத்திற்குச் சுமையாக இருக்கிறான். தீய உணர்ச்சிகளுக்கு விரைவில் அடிமையாதலால் உலக அமைதியைப் பாதிப்பவனாக இருக்கிறான். "எல்லாரும் நாகரிகமாக இன்பமாக வாழ்வதற்கும், நாடுகளிடையே ஒப்பந்தமும் கூட்டுறவும் வளர்வதற்கும், எல்லா நாடுகளும், எல்லா முதியோர்களுக்கும் கல்வி கொடுப்பதை மனமார முயற்சிக்க வேண்டும்" என்று மைசூர் முன்னாள் கல்வி அமைச்சர் திரு. சந்திரசேகர அய்யர் கூறுகிறார். ஏதாவது ஒரு மொழியிலுள்ள செய்தியைப் படிப்பதற்கும், எழுதுவதற்கும் வேண்டிய ஆற்றலே எழுத்தறிவு ஆகும் என்று 1950 உலக மக்கள் தொகைக் கணக்கு 'எழுத்தறிவு'க்குப் பொருள் கூறியுள்ளது. இந்திய ஜனத்தொகையில் 80 சதவீதம் மக்கள், ஓர் எளிய பகுதியையும் படிக்கவோ அல்லது எழுதவோ முடியாமல் இருக்கின்றார்கள் என்று தெரிகிறது.

மாநில அரசாங்கங்களாலும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களாலும், இதர துறைகளாலும் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான எழுத்தறிவு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இலட்சக்கணக்கான முதியோர்கள் இவ்விதமான வகுப்புக்களுக்கு வந்து சேருகிறார்கள். பொதுவாக 15 லிருந்து 45 வயதிற்குட்பட்ட முதியோர்களை இவ்வகுப்புக்களிலே அனுமதித்து 5 அல்லது 6 மாதம் எழுத்தறிவு போதிக்கிறார்கள். முதியோர்களுக்குக் கற்பிப்பதற்கு வேண்டிய பாடப்புத்தகங்கள், பல மொழிகளில் எழுதப்பட்டுவருகின்றன.

கற்பனையைக் கவரவேண்டும்

ஆனால் பெரும்பான்மையான வகுப்புக்கள் முதியோர்களுடைய கற்பனையைக் கவர்வதில்லை. மேலும் பல வகுப்புக்கள் துவங்கிய சிறிது காலத்திற்குள் வகுப்புகளுக்கு வருவோரின் எண்ணிக்கைக் குறைந்துகொண்டே வருகிறது. சுருக்கமாகச் சொல்லுமிடத்து, சமூகக்கல்வித் திட்டத்திலே இந்த எழுத்தறிவு வகுப்புக்கள் தான் மிகவும் ஆதரவின்றிப் பலவீனமாக இருக்கின்றன.

இவ்வகுப்புக்ளின் குறைபாடுகள் என்ன என்பதைச் சற்று ஆராய்வோம். முதற்கண் எழுத்தறிவு வகுப்புக்களுக்கு வேண்டிய உற்சாகம் மக்களிடையே ஏற்படுவதற்கு முன்பாகவே, கிராமத் தொண்டர்களும் சமூகக் கல்வி அமைப்பாளர்களும் நேரடியாக வகுப்புக்களை ஆரம்பித்துவிடுகின்றனர். மக்கள் மனமகிழ்மன்றங்களில் மக்களைத் திரட்டி, ஓய்வு நேரங்களில் பேச்சு, குழுச் சர்ச்சை, இசைக் கச்சேரிகள், நாடகங்கள் ஆகியவைகளில் ஈடுபடுத்திச் சுய கல்வியின் தேவையை மக்கள் தாமாகவே உணரும்படிச் செய்ய வேண்டும். சாதாரண எழுத்தறிவை மட்டும் பெறுவதில் மக்களுக்கு விருப்பம் இருக்க முடியாது. அவர்களுடைய முதல் கவனம் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கித்தான் செல்கிறது. எனவே அவர்களின் பிரச்சினையைச் சமாளிக்க எழுத்தறிவு பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும். நவீன விவசாய முறைகளைப் பற்றி அவர்கள் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விழையும்போது எழுத்தறிவு வகுப்புகளைத் துவக்க வேண்டும். எழுத்தறிவுடன், செய்தித்தாள் படித்தல், தற்கால சம்பவங்களைப் பற்றி ஆய்தல், சொற்பொழிவுகள், வாக்குவாதங்கள், கைத்தொழில் வகுப்புக்கள் போன்ற கல்வி நிகழ்ச்சிகளைச் சேர்ப்பதனால் எழுத்தறிவு வகுப்புகளுக்கு முதியோர்கள் தவறாமல் வருவதற்கு ஏதுவாகும்.

காலமறிந்து கல்வி தரப்படல் வேண்டும்

தற்போது நடத்தப்பட்டு வரும் எழுத்தறிவு வகுப்புக்கள் விவசாயப் பருவங்களை அலட்சியம் செய்து தொடர்ந்து ஐந்து அல்லது ஆறு மாதங்கள் நடைபெறுகின்றன. விதை விதைக்கும்போதும், அறுவடை காலத்திலும், பயிரைப் பாதுகாக்கும் பருவத்திலும் முதிர்ந்தவர்களுக்கு வயலிலே கடுமையான வேலை இருப்பதால், அவர்களில் பலர் வகுப்புக்களுக்குச் செல்ல முடிவதில்லை. சில சமயங்களில் எழுத்தறிவு வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்

களே போதிய பயிற்சி பெற்றவர்களாக இருப்பதில்லை. எழுத்தறிவு வகுப்பு களைப் பின்பற்றி, தொடர்ச்சி வகுப்புக்களை நடத்தாத காரணத்தால் புதியதாக, முதன்முறையாக எழுத்தறிவை பெற்ற முதியோர்கள் விரைவில் தாம் பெற்ற கல்விச் செல்வத்தை இழந்துவிடுகிறார்கள். அடிக்கடி. மேற்பார்வையாளர்கள் வந்து, குறித்த காலத்தில் போதனு உதவிக் கருவிகளைக் கொடுத்து, ஆசிரியர்களையும் முதியோர்களையும் ஊக்குவிப்பதும், வழிகாட்டுவதுமில்லை. எழுத்தறிவு வகுப்புகள் நடந்துவரும் கிராமங்களில் படித்தவர்கள் படிக்காதவர்களுடைய புள்ளி விவரங்களைத் தனிக்கை செய்வதற்கு வேண்டிய பதிவுப் புத்தகங்கள் சரிவர வைக்கப்படுவதில்லை என்று தெரிகிறது. பயிற்சிக் காலத்திற்குபின் எழுத்தறிவு பெற்றவர் என்று வெளிப்படுத்துவதற்காக நடத்தப்படும் தேர்வுகள் ஒருதரப்பட்டனவாக இருப்பதில்லை.

இட அமைப்பு

மக்கள் மனமகிழ் மன்றங்களிலோ, அல்லது மன்றங்களுக்கு அருகிலோ எழுத்தறிவு வகுப்புக்களை அமைப்பது விரும்பத்தக்கது. ஏனென்றல் அங்கு வருகின்றவர்கள் மன்றத்தில் நடைபெறும் ஏனைய சமுதாய நடவடிக்கைகளில் பங்குகொள்ளலாம். அடிக்கடி கிராம ஊழியரும் முடியும்போதெல்லாம் சமூகக் கல்வி அமைப்பாளரும் இவ்வகுப்புக்களைப் பார்வையிடல் வேண்டும். வகுப்புக்களைத் தவருமல் தொடந்து நடத்துவது, மாணவர்கள் பெருமளவில் வரும்படிச் செய்வது போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவர்களுடைய வருகை உதவுவதாக இருக்க வேண்டும். சாதாரண எழுத்தறிவு மட்டும் இவ்வகுப்புக்களின் நோக்கமாகாது. இந்திய அரசாங்கத்தின் கல்வி இலாகா வரைந்த பாடத்திட்டத்தின் நோக்கப்படி சாதாரண கணித அறிவும், பொது அறிவும், நடை முறை விவசாயமும், தேக ஆரோக்கியமும், சுகாதாரமும், அன்ருட வாழ்க்கைக்கு வேண்டிய விஞ்ஞான அறிவும், எழுத்தறிவுடன் இவ்வகுப்புக்களில் கொடுக்கப்படவேண்டும். எனவே இவ்வித நிலையங்களை 'முதியோர் எழுத்தறிவு வகுப்புகள்' என்று சொல்வதற்குப் பதிலாக 'முதியோர் கல்வி நிலையங்கள்' என்று அழைக்கிறோம்.

எழுத்தறிவு போதனைக்காலம்

எழுத்தறிவு வகுப்பின் பாடத்திட்டத்தை நோக்குமிடத்தும், அதைத்தொடர்ந்து நடக்க வேண்டிய தொடர்ச்சி வகுப்புகளை நோக்குமிடத்தும், கடுமையான விவசாயவேலை செய்ய வேண்டிய காலங்களில் வகுப்பிற்கு வருகின்றவர்களின் எண்ணிக்கை உடனடியாகக் குறைவதை நோக்குமிடத்தும் ஒரு யோசனை தோன்றுகிறது. பள்ளிக்கூட குழந்தைகளுக்குக் கோடையில் விடுமுறை கிடைப்பது போன்று, முதியவர்களுக்கும் வேளாண்மை அதிகமாக இருக்கும் பருவத்தில் இரண்டு மாதம் விடுமுறைகொடுத்து, ஆறுமாத எழுத்தறிவு வகுப்புக் காலத்தை ஒரு ஆண்டுப் படிப்பாக மாற்றி அமைக்கலாம். ஆண்டின் எம்மாதங்களில் விடுமுறை விடவேண்டும் என்பதை அந்தக் கிராமத்தின் பெரும்பான்மையோரின் தொழிலையும், வசதியையும் ஒட்டி முடிவு செய்ய வேண்டும்.

ஆசிரியர் பயிற்சி

முதியோர் எழுத்தறிவு வகுப்புகள் வெற்றி அடைவதோ அல்லது தோல்வி அடைவதோ ஆசிரியர்களைப் பொருத்து இருக்கிறது. முதிர்ந்தவர்களுடன் அன்புடனும், மரியாதையுடனும் பழகுகின்ற சுபாவம் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டியது மிக அவசியமாகும். முதியோர்களின் வகுப்பை ஒரு குழுவாகத் தொகுப்பு முறையில் மட்டும் கவனித்தால் போதாது. வகுப்பிலுள்ள ஒவ்வொருவரையும் ஒரு தனி மனிதனுகக் கருதி, மதித்து அவர்களுடைய ஆளுமை வளர ஊக்குவித்து ஆவன செய்ய வேண்டும். முதியோர் கல்விக் கூடங்களை நடத்தும் ஆசிரியர்களுக்குக் குறுகிய காலப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்விதமாக பயிற்சிபெற்ற 40,000 ஆசிரியர்கள் முதியோர் கல்விக் கூடங்களின் பொறுப்பை, நம் நாட்டில், ஏற்று வருதுள்ளார்கள்.

பாடநூல்களைத் தயாரித்தல்

ஆரம்பப் பள்ளிச் சிறுவர்களுக்காக எழுதப்படும் புத்தகங்கள் முதியோர்களுக்குப் பொருந்தாது. காரணம் என்னவென்றல் குழந்தைகளின் உள இயல்பும் முதியோர்களுடைய உள இயலுக்கும்உள்ள அடிப்படையான வேறுபாடேயாகும். முதியோர்களுக்குக் குழந்தைகளைவிட பன்மடங்கு உலக அறிவும் ஆழ்ந்த அனுபவமும் உண்டு. புதிதாக எழுத்தறிவு பெற்ற முதியவர்களுக்காக எழுதப்படும் புத்தகங்களின் தலைப்புகளும், அதிகாரங்களும் அவர்களுடைய அன்ருட வாழ்க்கையின் தேவைக்கேற்ப அமைய வேண்டும். எளிய நடையில் நடைமுறையில் பயன்படக்கூடியகருத்துக்களைப்பல வர்ணப்படங்களுடன் புத்தகத்தில் சேர்க்கலாம். இவ்விதப் புத்தகங்களைத் தயாரிக்கும் போது அடிப்படையான சொற்களின் ஒலிப்புக்காலத்தையும், சொற்கள் எவ்வளவு அடிக்கடி வருகின்றன என்பதை அறிவியல் முறையில் கணக்கிட்டும் தயாரிக்கப்பட்டுள்ள பட்டியலைப் பின்பற்ற வேண்டும். சில சொற்கள் மனதில் ஆழப் பதியவேண்டும் என்பதற்காக அவைகளை அளவுகடந்து பல முறை திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதனல் சுவையிழந்து விகாரமாகவே தோன்றுகிறது. இன்றைய இந்திய சமுதாயத்தில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வெளியிட்டால் தான் புதியதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்கு அவர்களுடைய தரத்திற்கும் தேவைக்குமேற்ப புத்தகங்கள் கிடைக்கும். குடியாட்சி வளம்பெற்று வளர மக்களிடையே பொதுக்கல்வி அறிவு மேலும் மேலும் வளர வேண்டும். இந்நோக்குடன் தயாரிக்கப்படும் நல்ல புத்தகங்களின் ஆசிரியர்களுக்கு. அரசாங்கம் சிறப்பான பரிசு அளித்து ஊக்கமளித்துவருகிறது.

மே மாத கிராமிய நிகழ்ச்சிகள் :

வானொலி நிகழ்ச்சிகள்

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து 1961 மே மாதத்தில் ஒலி பரப்ப இருக்கும் கிராமிய நிகழ்ச்சி களின் விவரம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் :
நம் மாதர் மன்றம் ; பாட்டு ; நாட்டுப் பாடல்பயிற்சி

ஒவ்வொரு சனிக்கிழமையும் :
முதியோர் இலக்கிய வகுப்பு ; பாட்டு.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் :
வாராந்தர மார்க்கட் நிலவரங்கள் ; பாட்டு.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் :
திரைப்பட இசை ; கிராம ரேடியோ மன்றம்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் :
நமது திட்டம்; மெல்லிசை.

இவையன்றி ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள் :

திங்கள் (1-5-1961) : 'நம் நிகழ்ச்சி நிரல்' காலப் புயலில் (பாட்டு).

செவ்வாய் (2-5-1961) : " வந்தனைக்குரிய......(பாட்டு).

புதன் (3-5-1961) : பாமாலை ; கருங்கண்ணிப் பயிரிடல்—விவாதம் ; மணல்மேட்டு மாநாடு—(ஜி. செல்வம் தயாரித்த சிறப்பு நிகழ்ச்சி).

வியாழன் (4-5-'961) : மாப்பிள்ளை நாய்கர்-(சி.பி. குமாரவேலுவின் நாடகம்).

வெள்ளி (5-5-1961) : "அவரே கடவுளாய்....(பாட்டு).

சனி (6-5-1961) : பாரதி பாடல்கள் ; மோதிலால் நேரு (சிறப்பு நிகழ்ச்சி).

ஞாயிறு (7-5-1961) : ஆராய்ச்சிக்கூடம் ; கிராமம் போவோமே.... (செய்திக் கதிர்).

திங்கள் (8-5-1961) : நாட்டுப் பாடல்கள் ; இரவீந்திரநாத தாகூர் (சிறப்பு நிகழ்ச்சி).

செவ்வாய் (9-5-1961) : கோபாலகிருஷ்ண கோகலே (நிகழ்ச்சி).

புதன் (10-5-1961) : பாமாலை ; கோழிக்குஞ்சுகளைத் தாக்கும் புழுக்கள்—விவாதம் ; 'அம்மாஞ்சி அரி அரன்' (தொடர் நிகழ்ச்சி).

வியாழன் (11-5-1961) : வட்டார வளர்ச்சி—விவாதம் திண்ணைப்பள்ளிக்கூடம்—(பூமிநாதன் அளிக்கும் எழுத்தோவியம்).

வெள்ளி (12-5-1961) : " எல்லாம் இங்கே....(பாட்டு).

சனி (13-5-1961) : பாரதி பாடல்கள் ; ' கல்வி—அன்றும் இன்றும் '—பேச்சு.

ஞாயிறு (14-5-1961) : வில்லுப்பாட்டு ; பூதான கிராம தானத் தொண்டருடன் பேச்சு.

திங்கள் (15-5-1961) : உழைப்பாளி—(பூமிநாதன் எழுதிய நாடகம்).

புதன் (17-5-1961) : காவடிச் சிந்து ; வயிற்றுப் புண்—விவாதம் ; ' 'பாட்டும் படைப்பும்—(என். ராகவன் தயாரித்த இசை நிகழ்ச்சி).

வியாழன் (18-5-1961) ; நீரோட்டம் (நாடகம்).

சனி (20-5-1961) : பாரதி பாடல்கள் ; கிராம நலக் கழகம்—விவாதம்.

ஞாயிறு (21-5-1961) ; விவசாயிக் கடிதம் ; இசைப்பேச்சு

திங்கள் (22-5-1961) : நாட்டுப் பாடல்கள் ; 'புதுச் சாமியார்'—சிறு கதை.

புதன் (24-5-1961) : திருப்புகழ் ; 'திருவிளக்கு'—நாடகம் (தயாரிப்பு-சிவப்பிரகாசம்).

வியாழன் (25-5-1961) : எலுமிச்சையின் உபயோகங்கள்—பேச்சு ;'பார்வதிப் பாட்டி'—நாடகம்.

சனி (27-5-1961) : பாட்டைக் கேளுங்கள்—திட்டத்தைப்பற்றிய பாடல்கள் ; சிறு ரகத் தொழில்கள்—பேச்சு.

ஞாயிறு (28-5-1961) : நலம் தரும் திட்டம்—பேச்சு ; கிராமப் பஞ்சாயத்து ; தெருக்கூத்து வழக்கு—வாசு எழுதியது.

திங்கள் (29-5-1961) : 'மரகதம்'—நாடகம்.

செவ்வாய் (30-5-1961) : ஒன்றே குலம் (நிகழ்ச்சி),

புதன் (31-5-1961) : அருட்பா ; புள்ளி மயில் (இசை நிகழ்ச்சி—ராகவன் தயாரித்தது) தவறுன குடியேற்றம்—பேச்சு

[14ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தஒப்பந்த முறை ரத்து செய்யப்பட வேண்டுமென் பதற்காக 1917 ம் வருடம் மே மாதம் சத்தியாக்கிரகம் நடத்தி வந்தார் ; வெற்றியும் கண்டார்.

1919 ம் வருஷம் ஏப்ரல் மாதம் ரௌலட் சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம் நடைபெற்றதைப் பற்றியும், இதை யொட்டி அமிருதசரஸ் நகரிலுள்ள ஜாலியன் வாலாபாக்கில் படு கொலை நடைபெற்றதைப்பற்றியும் அனைவரும் அறிவர்.

இப்படிப் பல துறை அலுவல்களிலும் ஈடுபட்டு வந்த தன் விளைவாக, காந்தியடிகளுக்கு 1924 ம் வருடம் ஜனவரி மாதம் குடல் அனுபந்த நோய் கண்டது. சத்திர சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்தார்.

குணமடைந்ததும், வழக்கம்போல் பொதுத் தொண்டில் தீவிரமாக ஈடுபடலானர். 1914 ம் வருஷம் இவர் தென்னுப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பி வந்ததிலிருந்து 1942-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் தொடங்கப் பெற்ற "வெள்ளையனே வெளியேறு" என்ற இயக்கம் வரையில், மொத்தம் பதினைந்து தடவை இவருடைய தலைமையில் சத்தியாக்கிரக இயக்கம் நடை பெற்றிருக்கிறது. இதன் விளைவாக, ஆயிரக்கணக்கான பேர் சிறை சென்றதும், தடியடிப்பட்டதும் உலகறிந்த உண்மை. உயிரையும், பொருளையும் கொடுத்த தியாகி கள் பலர்.

1913 ம் வருடத்திலிருந்து 1948 ம் வருடம் ஜனவரி மாதம் வரை மொத்தம் பதினேழு தடவை காந்தி யடிகள் உண்ணுவிரதம் இருந்திருக்கிருர். தென்னுப்பிரிக் காவில் சிறைவாசத்தை அனுபவித்தது போக இந்தி யாவில் பத்துத் தடவை சிறை வாசத்தை அனுபவித் திருக்கிருர். இவர் சிறைவாசியாயிருந்தகாலம், மொத்தம் அறுபத்தெட்டு மாதம்.

1947-ம் வருடம் ஆகஸ்ட்டு மாதம் பதினைந்தாம் தேதி இந்தியா சுதந்திர நாடாகியது. இதற்கு அடிப்படைக் காரணம், காந்தியடிகள், அகிம்சை வழியில் நடத்திய போராட்டமே எனபதை யாரும் மறுக்க முடியாது.

1948-ம் வருடம் ஜனவரி மாதம் 30-ம் தேதி மாலை காந்தியடிகள் வழக்கமாக நடத்திவந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் சென்று கொண்டிருந்த பொழுது, கோட்ஸே எனபவனல் சுட்டுக் கொல்லப் பட்டார். குண்டு ட்டு கீழே விழுந்தறுவாயில் "ஹே ராமா" என்று இரண்டுதடவை கூறினர். உயிர் உடலினுருந்து அகன்றது. உலகம் முழுவதும் துயரக் கடலில் ஆழ்ந்தது.

[தொடரும்]

உயிர்த் தொழில்

(கவிஞர் சு. மு. சொக்கலிங்கன், பழனி.)

காட்டைத் திருத்திக் கழனியாக்கி—நல்ல
கண்டு முதல்செய்ய எண்ணிடுவோம்
நாட்டை நினைந்தே உழைத்திடுவோம்—இங்கு
நல்லதோர் மாற்றத்தைக் கண்டிடுவோம்.

பண்டை வழிகளை மாற்றிடுவோம்—புதுப்
பண்படு முறைகளை ஏற்றிடுவோம்
மண்டலத் தோர்கள் அதிசயிக்க—நாட்டு
மேழிச் செல்வமதைக் காத்திடுவோம்.

உரமும் உழவும் பெருகிவிட்டால்—அதில்
உற்பத்தி அதிகம் என்றிடுவோம்
பரவ விதைக்கும் பழக்கத்திலே—நல்ல
பக்குவம் உண்டெனக் கண்டிடுவோம்.

உழவுத்தொ ழிலாம் உயிர்த்தொழிலை—நாம்
உண்மையுடன் காத்தே ஓங்கிடுவோம்
உழைப்பவர், படித்தவர் பேதமின்றி—நாம்
ஒன்று பட்டுபுகழ்ச் சேர்த்திடுவோம்.

இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்

தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று (1961-ம் வருடம் ஏப்ரல் மாதம் 13-ம் தேதி) தமிழ் நாட்டில் இரண்டாவது தொகுதியாக மொத்தம் நூற்றி இருபத்தியொன்பது [129] பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செயல்படத் தொடங்கி விட்டன. மார்ச் 'இராம நல' இதழில், தொடங்க இருக்கும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களாக, நூற்றிமுப்பத்தி ஒன்று [131] கூறப்பட்டுள்ளன. ஆனல், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மேலூர், நத்தம் ஆகிய இரண்டு பஞ்சாயத்து யூனியன்களும் இரண் டாவது தொகுதியில் சேர்க்கப்படவில்லை. எனவே, இவை இரண்டு நீங்கலாக, ஏனைய நூற்றியிருபத்தியொன்பது பஞ்சாயத்து யூனி யன் மன்றங்கள் 1961-ம் வருடம் ஏப்ரல் மாதம் 13-ம் தேதி முதல் துவக்கப்பட்டு, செயல்படத் தொடங்கி விட்டன.

"நில வளம் காத்தல்"

திரு கே. எஸ். சுப்பிரமணியம்

"தனி ஒருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று முழங்கினார் அமரகவி பாரதியார். ஒருவன் பசியால் வாடி, வதங்கி, மடியும்போது மற்றவர்கள் உண்டு களித்தல் கூடாது, அப்படிச் செய்தல் ஈனத்தனமான செய்கை என்பதை அவர் சுட்டிக் காட்டினார். அவ்வாறு எல்லோருக்கும் உணவளிக்கும் நிலத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்!

நிலத்தின் மேற்புரத்திலே, படிந்திருக்கும் மண் தன்னுள்ளே பயிர் வளர்ச்சிக்கு வேண்டிய சத்துக்களைக் கொண்டிருக்கிறது. மக்கி, அழுகிப்போன செடிகொடிகள் பிராணிகள், முதலியன மேல் மண்ணில் உருத்தெரியாமல் ஒன்றிப்போய்க் கிடக்கின்றன. பயிரின் வளர்ச்சிக்கு வேண்டிய தாதுப் பொருள்களும் மண்ணில் நிறைந்துள்ளன. விளையும் பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை யளிக்கும் களஞ்சியமாக மேல் மண் விளங்குகிறது. நிலத்தின் வளம் இம்மேல் மண்ணைப் பொறுத்திருக்கிறது. பயிரின் விளைவுச் சக்தி, நிலத்தின் மேற்புரமுள்ள மண்ணை அனுசரித்துத்தானிருக்கிறது. ஒரு அங்குல மேல் மண்ணைப் பெற, ஓராயிரம் ஆண்டுகள் தேவைப்படுகிறது என்று விஞ்ஞானம் கூறுகிறது!

இவ்வளவு சக்திபடைத்த இந்த மேல் மண், காற்றால் வாரிச் செல்லப்படுவதையும், மழை நீரால் அரித்துச் செல்லப்படுவதையும் தான் "மண் அரிப்பு" என்று கூறுகிறோம். மேல் மண்ணை இழந்த நிலத்தில், மகசூல் ஏமாற்றத்தைத்தானளிக்கும். விளைவு குன்றி, தரம் குறைந்து காட்சிதரும். அது நாட்டின் வளத்தைப் பாதிக்கும். மண் அரிப்பு தோன்றுவதற்குக் கீழே குறித்துள்ளவைதான் காரணமாக விளங்குகின்றன.

(1) வேகமாக வீசும் காற்று, மேல் மண்ணை வாரிச் செல்லுதல்.

(2) கடினமான மழையின் மூலமாக ஏற்பட்ட சிற்றோடைகள், பற்பல கிளைகளாகப் பிரிந்து, நிலத்தை அரித்து, மேல் மண்ணைக் கொண்டு செல்லுதல்.

(3) கால் நடைகளை அளவிற்கு மீறி நிலத்தில் மேயவிடுதல்.

(4) அடர்ந்து வளர்ந்த காடுகளை அழித்தல்.

(5) வேண்டிய அளவிற்கு, கொள், அவரை, மற்றும் பயிறு வகைகளை மற்றப் பயிர்களுடன் மாற்றி நடாமை.

மண் அரிப்பைத் தடுக்கும் முறைகள்

இயற்கையை எதிர்த்து மனிதன் வெற்றி பெறுவது கடினம்! ஆனால் காற்றாலும், மழையாலும், மண் அரித்துச் செல்லப்படுவதைக் கீழே கொடுத்துள்ள முறைகளை அனுசரித்துக் கட்டுப்படுத்தலாம்:—

(1) காற்று வீசும் திசைக்கு நேர் எதிராக நிலங்களின் எல்லையை ஒட்டி, வரிசை வரிசையாக மரங்களை நடவேண்டும். நீண்டு, வளரும் மரங்களையும், குடைபோலக் கவிந்து, நிறைய கிளைகளோடு கூடி வளரும் மரங்களையும், நடுதல் நலம். இம்மரங்கள் காற்றின் வேகத்தைக் குறைத்து, மேல் மண்ணை நிலம் இழக்காமல் பாதுகாக்கின்றன. இம்மரங்கள் வளரும் பயிர்களுக்கு இடைஞ்சல் அளிக்காவண்ணமும் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் "வேலியே பயிரை மேய்தல்" என்ற பழமொழியையோ, அல்லது டார்வினின் தத்துவமான "வாழ்க்கைப் போட்டியிலே தத்தளிக்கும் ஜீவன்கள் ஒன்றையொன்று அழித்து வாழ முற்படுகின்றன!" என்னும் உண்மையையோ, அந்த மரங்கள் நிரூபித்துக் காட்டும் அளவில் இருக்கக் கூடாதல்லவா?

(2) நிலச்சரிவின் குறுக்கே, வரப்புப்போட்டு, ஓடும் மழை நீரைத் தேக்கி, நிலம் உறிஞ்சும்படி; செய்தல் இவ்வாறு அமைக்கப்பட்ட வரப்பின் ஒரு மூலையில், மழை தண்ணீர் எந்த அளவிற்குத் தேங்கியிருக்கிறதோ, அதே அளவிற்கு, வரப்பிற்குட்பட்ட எல்லா பாகங்களிலும் நிற்கும்; எஞ்சிய நீரை, வடிகால் (அல்லது மடைகள்) கட்டுவதின் மூலம் வெளியேற்ற வேண்டும். வரப்பிற்குள் நீர் வேண்டிய அளவு தேங்கி நின்று, நிலத்தை ஈரப் பசையுடன் இருக்கச் செய்வதால், அருகிலுள்ள கிணறுகளிலும் நீர் மட்டம், உயருவதற்குரிய சூழ்நிலையும் ஏற்படுகிறது.

(3) நிலத்தின் சரிவிற்குக் குறுக்காக உழவு செய்தலேம் பயிர் மாற்று முறைகளையும், கண்டம் கண்டமாகப் பயிரிடும் முறைகளையும் அனுசரித்தல் வேண்டும்.

(4) கால்நடைகளை அளவிற்கு மீறி நிலத்தில் மேய விடக்கூடாது. கால்நடைகள் இடம் பெயர்ந்து செல்லும் போது, வளம் பொருந்திய மேல் மண்ணும் இடம் பெயர்ந்து செல்ல ஏதுவாகிறது. நிலத்தைத் தரிசாகவிடாமல், புல், கொள், முதலான பயிர்களை வளர்த்தல் வேண்டும். நிலத்தை மூடி, நிலத்தோடு நிலம் கவிந்து அடர்த்தியாக வளரும் செடிகளைத் தரிசு நிலங்களில் வளர்த்து வருவதால், அவை காற்றாலும், மழையாலும், மண் அரித்துச் செல்லாதபடி பாதுகாக்கின்றன. இது மட்டுமல்லாமல் நிலம் ஈரப் பசையோடு இருக்கும்படியும் செய்கின்றன. மேற்கூறிய முறைகள் யாவும், மண் அரிப்பைக்கட்டுப்படுத்ததுவனவாகும்.

மண் அரிப்பைத் தடுக்க தமிழ்நாட்டில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள்

"மண்வளப் பாதுகாப்புத் திட்டம்", இன்று தமிழ நாடு விவசாய இலாகாவின், ஒரு பெரும்பகுதியாக இயங்கி வருகிறது. தமிழ் நாட்டில் ஏறத்தாழ, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு உதவி விவசாயப் பொறியாளர் இருக்கிறார். அவருக்குக் கீழ் மண்வளப்பாது

காப்பு உதவியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். மண் வளப் பாதுகாப்பிற்காகத் தமிழ்நாடு அரசாங்கம், பெருந் தொகையை ஒதுக்கியிருக்கிறது. சிறிய அளவில், பஞ்ச நிவாரணத்திற்காகவும், பரீட்சார்த்தமாகவும், உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம், இன்று மாநில மெங்கும் பெருமளவில் பணியாற்றி வருகிறது.

ஒரு ரூபாய் எட்டு அணு விலையுள்ள சம்மதப் பத்திரத்தில், கையெழுத்து வாங்கிக் கொண்டு, விருப்பப் படும் விவசாயியின் நிலத்தில் மண் அரிப்பதைத் தடுக்கும் நடவடிக்கைகளை, தமிழ்நாடு விவசாய இலாகா எடுத்துக் கொள்கிறது. பின்பு வேலை முடிந்த இரண்டு வருடங்கள் கழித்து, பதினைந்து தவணைகளில், மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்திற்காக ஏற்பட்ட செலவில் எழுபத்து ஐந்து சத வீதத்தை மட்டும் விவசாயிடமிருந்து பெற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறது. மீதி 25 சத வீதத் தொகையை மானியமாக விடுகிறது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனடையும் நிலத்தின் அளவு, வருடத்திற்கு வருடம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தால் சம வெளிப் பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும், மகசூல் கூடியிருக்கிறது என்பதற்கு ஆதாரமான புள்ளி விவரங்கள் உண்டு. இத்திட்டத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிலையம் ஒன்று கோவையிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்வப்போது, விவசாயிகள், மற்றும் கிராம அதிகாரிகள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், தேசிய வளர்ச்சிச் சேவை அதிகாரிகள் போன்றவர்களையழைத்து, மண்வளப் பாதுகாப்பு சம்பந்தமாக, பயிற்சியும் அளித்து வருகிறது.

மண் அரிப்புத்தடுப்பு முறைகளைத் தனது நிலத்திலே, தன் சொந்த செலவிலே, விஞ்ஞான ரீதியாக அனுசரிப்பவர்களுக்கும், மண் அரிப்பதைத் தடுப்பதற்காக வரப்புகள் போடப்பட்ட இடங்களில், போட்ட இரண்டு ஆண்டுகளுக்கு பின் மூன்றும் வருடத்திலிருந்து, வரப்புகளை நல்ல முறையில் கவனித்துப் பராமரித்து நிலவளப் பாதுகாப்பு முறைகளில் பயிரிடும் விவசாயிக்கும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு, மூன்று விதமான பரிசுகள் வழங்குவதற்கும், மண் அரிப்புத்தடுப்பு முறைகளை நல்ல முறையில் கையாண்டுவரும் விவசாயிக்கு நற்சாட்சிப் பத்திரங்களை வழங்கவும், ஏற்பாடு செய்துள்ளது நம் தமிழ்நாடு அரசாங்கம். இந்தத் திட்டம், நீலகிரி ஜில்லாவிலும், கோவை ஜில்லாவிலும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

மேலும் செய்யவேண்டியவை

சாதாரணமாக, ஒரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால், அதை நிறைவேற்றப் பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகிறது. அந்தத் திட்டத்தைப் பற்றிய முழு விவரங்களையும் அவர்களுக்குத் தெரியும் படியான வாய்ப்பையளிக்க வேண்டும். மண்வளப் பாதுகாப்புத் திட்டம் தோன்றிப் பல வருடங்கள் சென்றும் கூட, இதைப்பற்றிப் பல விவசாயிகளுக்குத் தெரியாது! தீவிரப் பிரச்சாரம் தேவையில்லாத அளவிற்கு, இந்தத் திட்டம் முன்னேறிவிட்டாலும், மேலும் அதிகமான விளம்பரம் செய்து, உழவர்களை ஊக்குவித்தால், இந்தத் திட்டம், நன்கு செயல்படுதல் கூடும். கீழே குறித்துள்ள முறைகளை இதற்கு அனுசரித்தால், நல்ல பலனையளிக்கக் கூடும் :—

(1) மண்வளப் பாதுகாப்பு சம்பந்தமான தமிழ் திரைப் படங்களைத் தவறாது, நாடெங்கும் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் காண்பித்தல் வேண்டும். இத் திட்டத்தைப்பற்றி அவ்வப்போது சொற்பொழிவுகளும் நடத்துதல் வேண்டும்.

(2) இன்று சாதாரணமாக ஒவ்வொரு கிராமத்திலும், வானொலிப் பெட்டி இருக்கிறது. அதன் மூலமாக, கொச்சைத்தமிழில், மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்தைப் பற்றிய உரையாடல்களை ஒலி பரப்பி, கிராம மக்கள் அதைக் கேட்கும்படி செய்தல் வேண்டும்.

(3) கிராமங்கள்தான் இந்தியாவின் ஜீவ நாடி என்று மகாத்மா கூறியதற்கேற்ப, இன்று காந்திய தத்துவப் பிரச்சாரகர்கள், நாடெங்குமுள்ள ஒவ்வொரு கிராமத்தின் மூலை முடுக்கிலெல்லாம் நுழைந்து, கிராமங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறார்கள். அவர்களின் உதவியைக் கொண்டும், இத்திட்டத்தைப்பற்றிப் பிரசாரங்களைச் செய்யலாம்.

(4) கிராம மக்கள் தாங்களாகவே, கிராமத்திற்குப் புதுப் பாதையமைப்பது போல, கிராமத்தலைவரின் மூலமாக, உழவர் பலரைத் திரட்டி, யாராவது ஒரு கிராமவாசியின் நிலத்தில் எல்லோருமாக்கச் சேர்ந்து (மண் வளப் பாதுகாப்பு அதிகாரிகளு), மண் அரிப்பைத் தடுக்கும் வரப்பு கள் போடவேண்டும். இவ்வாறு செய்தால், அது உழவருக்கு உற்சாகத்தைஅளிக்கும்.

(5) ஆதாரக் கல்விப் பாடப்புத்தகங்களிலும், "விவசாயம்" என்ற பகுதியில், மண் அரிப்பைப்பற்றியும், அதனால் வரும் கேடுகளைப் பற்றியும், அதைத் தடுக்கும் முறைகளைப்பற்றியும் தெள்ளத் தெளிந்த தமிழில் விவரித்தால், வளரும் சமூகத்திற்கு அது பயனளிப்பதாகும்.

நெல்லும், நீரும், குடியும், அரசும் உயர வேண்டுமானால், வரப்பு உயரவேண்டும்! அப்போதுதான் "தனி ஒருவனுக்கு உணவில்லை" என்ற பிரச்சினைக்கே இடம் இருக்காது! "வரப்புயரப் பாடுபடும்" "மண்வளப்பாதுகாப்புத் திட்டம்", நாட்டின் நலனுயரப் பாடுபடும் நல்லதொரு திட்டமல்லவா!

"கடிதக் கருத்தரங்கு"

1

அன்புமிக்க ஐயா,

"**கிராம நல**"த்தின் 61 வருடத்திய பிப்ரவரி மாத இதழில் கிராம அபிவிருத்திக் கமிஷனர் கடிதப் பேச்சின்படி கீழ்க்கண்ட பொருளைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பஞ்சாயத்துத் தலைவர்களில் பலர் போதிய பண வசதி படைத்தவர்களாக இல்லை. அவர்களுக்கு வேலை செய்வதற்கு ஆர்வமும் ஊக்கமும் இருந்தபோதிலும் "பொருவில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்பதற்கேற்ப, அவர்களால் வேலைசெய்ய இயலுவதில்லை. புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின்படி தலைவர்களுக்குப் பொறுப்பு அதிகமாகிறது. பஞ்சாயத்தில் நடக்க வேண்டிய சில வேலைகளைப்பற்றி அவர்கள் பல அலுவலகங்களுடன் அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டி இருக்கின்றது. கடிதப் போக்கு வரத்து மூலம் மட்டுமே தொடர்பு வைத்துக் கொண்டால் காரியத்தில் தாமதமேற்படும் என்பது தெளிவு. நேரிடைத் தொடர்புதான் குறித்த பயன் அளிக்கிறது. அவ்வாறு நேரிடைத் தொடர்புக்காக, போக்குவரத்திற்கு, நிதியிலிருந்து பயணப்படி எடுத்துக்கொண்டாலோ அதற்கு அனுமதி சீக்கிரம் கிடைப்பதுமில்லை; அதனால் அவைகள் தணிக்கைக் குறைபாடுகளில் சேர்க்கப்பட்டு விடுகின்றன. தற்பொழுது கர்ணத்தைப் பஞ்சாயத்தின் காரியதரிசியாக ஏற்றுக்கொண்டதினால் பஞ்சாயத்திற்குச் செலவு குறைந்திருக்கிறது. (சில பஞ்சாயத்துக்களில் இன்னும் குமாஸ்தாக்களை வைத்திருக்கின்றனர்) இவ்வாறு கர்ணங்களைக் காரியதரிசியாக ஏற்றுக்கொண்ட பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு பஞ்சாயத்து நிதியிலிருந்து, பஞ்சாயத்து சம்பந்தமாக செய்யப்படும் பிரயாணங்களின் செலவுகளுக்காக மொத்தமாக பஞ்சாயத்து வருமானத்திற்கு தகுந்தாற்போல் ஒரு தொகை (honorarium) அடியிற்கண்டவாறு கொடுக்கலாமென்று கருதுகின்றேன். பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்தின் தீர்மானம் பெற்று அடியிற் கண்ட விகிதத்திற்கு மேல் போகாமல் ஷை தொகையை எடுத்துக் கொள்ளலாமென்று நினைக்கின்றேன்.

(1) வருட வருமானம் ரூ. 1,000-க்கு மேற்படாமல் உள்ள பஞ்சாயத்திற்கு வருடத்திற்கு ரூ. 120.

(2) வருட வருமானம் ரூ. 1,000 முதல் ரூ. 2,000 வரை ரூ. 150.

(3) வருட வருமானம் ரூ. 2,000 முதல் ரூ. 3,000 வரை ரூ. 240.

(4) வருட வருமானம் ரூ. 3,000த்துக்கு மேலுள்ள பஞ்சாயத்திற்கு ரூ. 300.

முதல் வருடத்திய ஹானரோரியத் தொகையை மறு வருடத்திய ஆரம்பத்தில் (ஏப்ரல் மாதம் முதலில்) எடுத்துக்கொள்ளலாம்.

மேலே கண்ட ஹானரோரியம் கர்ணங்களைக் காரியதரிசியாக ஏற்றுக்கொண்ட பஞ்சாயத்துக்களுக்கு மட்டுமே அளிக்கப்பட வேண்டும். இதனால் பல பஞ்சாயத்துக்கள் கர்ணங்களைக் காரியதரிசியாக வைத்துக்கொள்ளத் தயக்கமின்றி முன்வருவார்கள். ஹானரோரியத் தொகையை பஞ்சாயத்து வருமானத்தின் அடிப்படையில் வைப்பதால் பஞ்சாயத்திற்கு வருமானத்தை அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணமும் ஏற்படும். தலைவர்களும் நேரிடைத் தொடர்பு வைத்துக்கொள்ள முன் வருவார்கள். பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு பயணப் படிகளை எடுத்துக்கொள்வதற்கு அனுமதி பெற வேண்டிய நிர்ப்பந்தமில்லாமல் போய்விடுகிறது. இதனால் தணிக்கைக் குறைபாடுகள் (Audit objections) குறைகின்றன. நகரப் பஞ்சாயத்துக்களில் தலைவர்களுக்குக் காரியம் நடைபெற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. ஏனெனில் சம்பளத்துடன் ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். கிராமப் பஞ்சாயத்துக்களில் தலைவர்களே நிர்வாக அதிகாரிகளாக இருக்கிறார்கள்.

சு. விஸ்வநாதன்.

2

அன்புள்ள ஐயா,

1. பஞ்சாயத்துப் பத்திரிகைக்குப் பதிலாக வெளியாகும் "**கிராம நலத்தில்**" ஒவ்வொரு மாதத்திற்கும் வெளிவரும் அரசாங்க உள்ளாட்சி ஆணைகள் (தமிழில் மொழி பெயர்த்து) தவறாமல் வெளி வருதல் வேண்டும்.

2. கதை, நாடகம் தவிர்க்கப்பட்டு ஊராட்சி வளர்ச்சி பற்றிய கட்டுரைகள் மட்டிலும், செயல் அதிகாரிகளின் விளக்கங்களும், அதிகமாக வெளி வருதல் வேண்டும்.

3. "வினா-விடை" பகுதிக்கு 3 பக்கங்கள் ஒதுக்க வேண்டும்.

4. வாசகர்களின் கருத்துக்களுக்கு "கடிதப் பகுதி" ஆரம்பிக்க வேண்டும். இந்தப் பகுதியில், அதிகாரிகள், மற்றோரும் மனம் விட்டு எழுதும்படி உற்சாகம் ஊட்டுதல் வேண்டும். கட்டுரை, கவிதை வரையும் எழுத்தாளர்களுக்குப் "பரிசுத் தொகை" பக்கத்திற்கு 10 ரூபாய் வீதம் தரப்படுதல் வேண்டும்.

6. 1-வது கருத்தில் எழுதப்பட்டுள்ள உள்ளாட்சி சம்பந்தப்பட்ட, விவசாயம், சுகாதாரம் முதலான இலாகாக்களின் அரசாங்க ஆங்கில ஆணைகளைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுதல் வேண்டும். இப்போது வெளியாகும் ஆணைகள் விளக்கங்கள் போதாது.

இக் கருத்துக்களை ஏற்பீர்களென நம்பும்
"கிராம நலப்" பிரியன்,
பெ. சீனிவாசன்.

சிறிய கிராமத்தின் பெரிய உதாரணம்

கக்கன்வாட் என்னும் சிற்றூர் குஜராத்தைச் சேர்ந்த சூரத் மாவட்டத்தில் டெகாமா என்னும் கிராமத்தின் ஒரு பகுதியாகும். இந்த ஊர், அளவில் சிறிய தென்றாலும் கூட பெரிய கிராமங்களும் நகரங்களும் பின்பற்றக்கூடிய சிறந்ததொரு இடமாக விளங்குகிறது. இங்கே காணப் படும் சுய உதவி மனப்பான்மையும், கூட்டுறவு வாழ்க்கை அம்சங்களும் பிற மக்களுக்கு வழிகாட்டியாக இருக் கின்றன.

இவ்வூர் மக்கள் விவசாயத் தொழிலாளர்கள் ; வருடம் முழுவதும் அவர்களுக்குத் தொடர்ந்து வேலையிருக்காது ; வேலை தேடிச் சில சமயங்களில் 30, 40 மைல் கூடச் செல்லவேண்டியிருக்கும். துண்டு நிலங்களில் பயிரேற்றி வந்த சில விவசாயிகள், நிலச் சீர் திருத்தத்தினுல் ஏற் பட்ட சில நிகழ்ச்சிகளின் விளைவாக நிலத்தை இழந் தனர்.

வறுமையில் வாடிய இந்த விவசாயிகளுக்குக் கடனுக்குச் சாமான்கள் தர எந்தக் கடைக்காரர்களாவது முன் வரு வார்களா ?

கூட்டுறவு கிராமக் கடை

இப்பிரச்னைகளுக்கு கிராமத் தலைவர்களே வழி கண்டு பிடித்தனர். அவர்கள் கூட்டுறவு முறையில் கிராமக் கடையொன்றைத் திறக்க முடிவு செய்தனர். கடைக் கட்டடத்தைச் சிறிது சிறிதாகக் கட்டி, சம்பளத்திலிருந்து வாரமொன்றுக்கு நான்கு அணு திரட்டி நடைமுறைச் செலவுக்கும் வகை செய்தனர். சந்தா கட்டத் தவறிய வர்களுக்கு ஆறு காசுகள் அபராதம் விதிக்கப்பட்டது. வருட இறுதியில் இச்சிறு தொகை 348 ரூபாயாகப் பெருகியது.

இந்த மூலதனத்தைக் கொண்டு கடையை ஆரம்பித் தனர். மிகத் திறமையான மேற்பார்வையில் தொழில் நடந்ததால் வருட முடிவில் 7,000 ரூபாய்க்கு வியாபாரம் பெருகிற்று. கடனுக்குச் சரக்குகள் கிடைத்தன. வியா பாரத்தில் அந்த வருடம் 750 ரூபாய் இலாபம் கிடைத்தது. 1960-ல் இலாபம் இரட்டித்து 1,800 ரூபாயாக வளர்ந்தது;

இந்தச் சிறு கடை அக்கிராமத்திலேயே முக்கிய இடத்தை பெற்றது. கிராம மக்கள் ஒன்று கூடித் தங்கள் பிரச்னைகளை விவாதிக்கும் இடமாக அமைந்தது. அது ஒரு வியாபார ஸ்தலம் மட்டுமல்ல ; மக்களின் முன் னேற்றத்துக்கு வழி வகுக்கும் அரங்காக வளர்ந்தது.

வேலை வசதித் தகவல் ஆராய்ச்சி

வேலை வசதித் தகவல்கள் ஆராய்ச்சி சம்பந்தமாக தமிழ் நாடு முழுதிலும் ஒரு வேலைத் திட்டம் மேற்கொள்ளப் படவிருக்கிறது.

வேலை வசதித் தகவல் ஆராய்ச்சி என்பது சமீப காலத் தில் தோன்றிய ஒரு முறை. இது நாள் வரைக்கும் ஆள் வசதி தேவைகளும், ஆள் வசதி சப்ளை நிலைமை யும் ஒரே சீரான நிலையில் இல்லாமல் இருந்தன. இப் பொழுது, நிலைமை சற்று மாறியிருக்கிறது. வேலை வசதி நிலைமைகளை முன்கூட்டி யூகிக்கக் கூடிய ஒரு நிலைமை இப்போது தோன்றியுள்ளது.

வேலை வசதி கண்டுபிடிப்பது, வேலை வசதி ஏற்படுத்து வது, வேலை மாற்றம், வேலையை நல்ல முறையில் செய்தல் ஆகிய எல்லாம் சேர்ந்ததே வேலை வசதித் தகவல் என்பதன் பொருளாகும்.

தமிழ் நாட்டில் தேசிய வேலை வசதி நிறுவனத்தின் ஆதரவில் இந்த வேலை வசதி தகவல் வேலை நடந்து வருகின்றது. நாட்டின் ஆள் பலத்தை, நாட்டின் நல னுக்கு ஏற்ற முறையில் சிறந்த வகையில் பயன்படுத்திக் கொள்ள உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வேலை வசதி தகவல் திட்டம் 1958 மார்ச்சில் தொடங்கப் பட்டது. தொடக்கத்தில் தமிழ் நாட்டில் அரசாங்கத் தொழில் துறை நிறுவனங்கள் முழுவதிலும், கோவை மாவட்டத்தில் மட்டும் தனியார் துறையிலும் இந்த வேலை மேற்கொள்ளப்பட்டது. 1960-ம் வருடம் ஜூன் மாதத் தில் மேற்கொண்டு, வட ஆர்க்காடு, சேலம், திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் தனியார் துறைக்கு இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. விரைவில் தமிழ்நாடு முழுதிலும் தனியார் துறை தொழில் களுக்கு இத்திட்டம் விரிவாக்கப்படும்.

அரசாங்கத் தொழில் துறை நிறுவனங்களில் 1958-ம் வருடம் ஜூன் மாதத்தில் மொத்தம் 2,002 நிறுவனங் களில் 4.37 லட்சம் பேர் வேலையில் இருந்தனர். 1960-ம் வருடம் ஜூனில் மொத்தம் 2,523 நிறுவனங்களில் 5.73 லட்சம் பேர் வேலையில் இருந்தனர். இந்த அள வுக்கு வேலை வாய்ப்பு அதிகரித்தது.

1958-ம் வருடம் ஜூன் மாதத்தில் கோவையில் தனி யார் துறை தொழில்களில் 1.19 லட்சம் பேர் வேலையில் இருந்தனர். 1960-ம் வருடம் ஜூனில் அவற்றில் வேலை யில் இருந்தவர்கள் தொகை 1.34 லட்சம் ஆகும்.

1960-ம் வருடம் ஜூன் மாதத்தில் இத்திட்டம் மேற் கொள்ளப்பட்ட ஐந்து மாவட்டங்களைப் பொறுத்த வரை யில் தனியார் துறையில் 8,027 நிறுவனங்களில் வேலை வசதி அதிகரிப்புப் பற்றித் தகவல் கிடைத்துள்ளது. அந்த நிறுவனங்களில் 1960-ம் வருடம் மார்ச்சு மாதத்தில் 1.88 லட்சம் பேர் வேலையில் இருந்தனர். 1960-ம் வருடம் ஜூன் மாதம் முடிவில் வேலையில் இருந்தவர் கள் 1·90 லட்சம் பேர் ஆகும்.











சென்னைக்கு விஜயம் செய்த பஞ்சாயத்துத் தலைவர்கள், மாநிலக் கவர்னர், அமைச்சர்களின் கருத்துரைகளைக் கேட்டு மகிழ்ந்தனர்.





தூத்துக்குடியில் 22-3-61 அன்று மீன் அவத் துறை அமைச்சர் கனம் திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்..ள் தலைமையில் கவானர் விஷ்ணுராம் மேதி அவ ।கள் முத்துக் குளிபபு விழாவைத் துவககி வைத்தார்.



1—2. 26–3–61 அன்று சென்னையில் ஐந்தாண்டுத் திட்ட பிரச்சார வார விழா.

3. 29–3–61 அன்று சிறந்த சேவை செய்த போலீஸ் ஊழியர்களுக்கான குடியரசுத் தலைவரின் பதக்கத்தைக் கவர்னர் காலம்சென்ற ஓர் ஊழியரின் அன்னையாரிடம் வழங்கினர்.



4. அகில உலக வானிலை ஆராய்ச்சி தினம் சென்னையில் கொண்டாடப்பட்டது,

5. தேரழுந்தூரில் கம்பன் திருநாள்.

6. மைசூரிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்திருந்த 400 கிராமவாசிகள் 3—!—61ல் கவர்னரைச் சந்தித்தனர்.











1—3 25-2-61-ல் தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் தமிழ்நாடு கால்நடைக் கண்காட்சியை முதல் அமைச்சர் துவக்கிவைத்தார்.

1-3-61-ல் கால்நடைக் கண்காட்சியில் ஸ்ரீமதி விஷ்ணுராம்மேதி பரிசுகள் வழங்கினர்.

5 ஆவடியில் 4-3-61ல் ஸ்ரீமதி பாலகிருஷ்ண ஷெட்டி போலீஸ்காரர்கள் குடும்பங்களுக்கான மாதர் சங்கக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினர்.

6 சென்னையில் நடைபெற்ற 8-வது அகில இந்திய கைத்தறி வாரக் கண்காட்சியை தமிழ்நாடு கவர்னர் பார்வையிட்டார்.

"ஒன்றே குலம்"

(திரு எஸ். பூமிநாதன்)

பாத்திரங்கள் :

1

கண்ணப்பன்
ஏகாம்பரம்.
கருப்பய்யன்.
மரகதம்.

(கிராமத்தின் பூஞ்சோலை ஒன்றில் கண்ணப்பனும் ஏகாம்பரமும் இருக்கிறார்கள்.)

ஏகாம்பரம்.—கண்ணப்பா ! ....ஆனாலும் நீ ரொம்ப பயந்தவனா இருக்கே. . . .

கண்ண.—ஆமா, நான் பயந்தவன் . . . நீ அஞ்சாத சிங்கம். . .எனக்குத் தெரியும்.

ஏகாம்.—பின்னே, நான் யாரு.... ?

கண்ண.—"நான் ஒரு பெரிய சீர்திருத்தச் செம்மல்" அப்படின்னு நீ சொல்லிக்கிறதும் தெரியும், அதுக்கவே, உன் முதுகிலே நீயே தட்டிக் கொடுத்திக்கிறதும் எனக்கு நல்லாத் தெரியும்.

ஏகாம்.—போப்பா !....நீ ஒரு பத்தாம் பசலிப் பேர்வழி. உனக்குப் பிடிச்சதெல்லாம் பழயது.

கண்ண.—பழயது....அதிலே எவ்வளவு ருசி இருக்கு ? உனக்குத் தெரியுமா ? இந்த நீராகாரம் இருக்கே...

ஏகாம்.—(குறுக்கிட்டு) இந்தாப்பா, பேச்சை மாத்தாதே.

கண்ண.—இல்லே, உன்னைப் போல வாய்க் கிழியப் பேசி ஊரை ஏமாத்தனும்.

ஏகாம்.—என்னது ? . . நான் வாய் கிழியப் பேசறவனா ?

கண்ண.—ஆமாப்பா !. . .வெறும் வாய்ப்பந்தல் போடுறவன். . . அழகா பேசத் தெரிஞ்சவன். . . அற்புதமாக அடுக்கிக்கிட்டே போகிற திறமை நிறைஞ்சவன். . ஆனா, அதிலே அளப்பு அதிகம், அர்த்தம் கடுகளவு. . . அவ்வளவுதான். . .

ஏகாம்.—உன்னைப் போல அறியாமையிலே மூழ்கிக் கிடக்கிறது ; மூட நம்பிக்கைகளையே முரட்டுப்பிடிடியா பிடிச்சிக்கிட்டு இருக்கிறது, அர்த்தம் நிறைஞ்சிருக்கிற காரியமாக்கும் ?. . . .

கண்ண.—காரியம், காரியம்னு காரியத்தைப் பற்றிப்பேசிகிட்டு போறது சுலபம். . காரியவாதியா இருக்கிறது தான் கடினம். .சொல்வது யார்க்கும் எளிது ". . .

ஏகாம்.—நானாவது பேசறனே ?. . . நீ பேசக் கூட இல்லே பயப்படுறீயே ?. . . .

கண்ண.—சும்மா, மடமடன்னு மடை திறந்த மாதிரியா பேசிட்டா தீர்ந்ததாக்கும் ?. . . செயலாற்ற வேண்டும், ஏகாம்பரம். . .

ஏகாம்.—கண்ணப்பா ! செயலாற்றனும் அப்படின்னு நிலைமை உண்டாகிறப்ப, பின் வாங்கவே மாட்டான் இந்த ஏகாம்பரம். . .

கண்ண.—அப்படியா . . ? எனக்குத் தெரியாது . . .

ஏகாம்.—உனக்கு என்ன தான் தெரியும்? நீதான் எதுக்கெடுத்தாலும் அப்பா, அம்மா இருக்காங்க, அவங்க கீறின கோட்டை முறித் தாண்ட மாட்டன்னு சொல்ற ஆளாச்சே. . .

கண்ண.—ஓஹோ ! உனக்கு அப்பா, அம்மா இல்லியோ?

ஏகாம்.—எல்லாம் இருக்காங்க. . . ஆனா, என்னோட முற்போக்குக் கொள்கைகளுக்கு முட்டுக்கட்டையா நிக்க அவங்களே விடவே மாட்டேன். . காலத்தோட கருத்தும் மாறுது ; மாறும் ; மாறித்தான் தீரும் . . இதை அப்பா அம்மா இல்லே அந்த ஆண்டவனே வந்தாலும் தடுக்க முடியாது. . . தடைபல வந்து வழி மறித்தாலும் என்னைப் போன்ற வாலிபர்கள் அதைத் தகர்த்தெறிந்து தளராமல் முன்னேறிச் செல்வோம். . . அந்த முயற்சியிலும் வெற்றி பெறுவோம். . .

கண்ண.—பலே, பிரமாதம் !. . .

(கையைத் தட்டுகிறான்.)

ஏகாம்.—கண்ணப்பா !. . .இன்னம் கேள். . .

கண்ண.—(குறுக்கிட்டு) ஏகாம்பரம் போதும். . சும்மா படபடன்னு பேசறியே அதிலே ஒண்ணையாச்சும் செய்து காண்பியேன். . .

ஏகாம்.—செய்வேன். . செய்யவும் தயங்கமாட்டேன். . .

கண்ண.—பாக்கலாம். . .

ஏகாபம்.—நிச்சயமாகப் பார்ப்பாய் . . . .

(கருப்பய்யன் வருகிறான்)

கண்ண.—அடேடே !. . கருப்பையாவா ?. . .

கருப்.—ரெண்டு பேருக்குமே வணக்கங்க. . .என்னமோ, சுவாரஸ்யமா பேசிக்கிட்டிருந்தீங்க போலத் தெரியுது. . . .

கண்ண.—பொழுது போகணுமில்லே. . . அதான். . . !

ஏகாம்.—என்ன கருப்பய்யா !. . .பாஸ் பண்ணிட்டேன்னு கேள்விப்பட்டேன். . .

கருப்.—ஆமாங்க !. . . பஸ்டு கிளாஸ்லே பாஸ் பண்ணியிருக்கேன். . .

கண்ண.—அப்ப, விரைவிலே உத்தியோகமும் வந்திடும் . .

கருப்ப.—ஆமாங்க, அதுக்கு வேண்டிய ஏற்பாடும் செஞ்சிருக்கேன்.

ஏகாம் : கருப்பய்யா உன்னே, மனசார வாழ்த்துறேன். உங்க சேரிக்கே பெருமை தரக்கூடிய சிறப்பான ஒரு செயலேச் செய்து முடிச்சிருக்கே. உங்க சமூகத்துக்கே ஒரு முன்னேடி நீ. அது போற்றப்பட வேண்டிய ஒரு காரியம். வறியவர்களும், ஜாதியிலே தாழ்ந்தவர்களும் கல்வி அறிவு பெற்றுவிட்டால் கண் மூடிப் பழக்க, வழக்கமெல்லாம் மண் மூடிப் போகும். அதற்கு ஒரு மார்க்கமும் தானகவே பிறக்கும். உன்னேப் போல வாலிபருங்க கையிலேதான் இருக்கு சமூகத்தின் எதிர்காலம்.

கண்ண : கருப்பய்யா !. . . .நல்லாக் கேட்டுக்க. . . .

கருப்ப : அதுக்கென்னங்க.

ஏகாம் : கண்ணப்பா ! உனக்கும் சேத்துத்தான் இதைச் சொல்றேன். நம் சமூகத்தையே சின்னு பின்னப்படுத்தி சீரழித்து வைத்திருக்கும் இந்தச் சாதி முறை ஒழிய, வழியே இன்னேக்கு நம்மைப் போல வாலிபருங்ககையிலேதான் இருக்கு. முக்கியமா நம்ம கருப்பய்யனேப் போலத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவங்க கிட்டேதான் பொறுப்பு அதிகமா இருக்கு. கருப்பய்யா !

கருப்ப : என்னங்க. . . . ?

ஏகாம் : நீ படிச்சு, பாஸ் பண்ணி, பட்டமும் வேற வாங்கியிருக்கே, இனி, உத்தியோகமும் கிடைச்சுடும். . . அதோட உன் வேலே முடிஞ்சிடலே. சமூக முன்னேற்றத்துக்கு நாமெல்லாம் இன்னம் எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கு. . .அதுலேயும் நீ கவனம் வைக்கணும். உனக்கு உதவி, ஒத்தாசையா இருக்க என்னேப்போல இருக்கிறவங்க என்னேக்குமே தயாரா இருக்கோம். . . . .

கருப்ப : அதுக்கென்னங்க. . . .ஒரு விஷயமில்லே. . . .?

ஏகாம் : என்னது. . . .? சும்மாச் சொல்லு !

கருப்ப : நான் பாஸானதுக்கு உங்க ரெண்டு பேருக்கும் காப்பி வாங்கித் தாணும்னு ஆசைப்படுறேன். . . . .

ஏகாம் : அதுக்கென்ன !. . . .நான் தயார். . . .

கருப்ப : அப்ப, புறப்படுங்க. . . .

கண்ண : இல்லே கருப்பய்யா. . . .நான், இப்பதான் காப்பி சாப்பிட்டு வந்தேன். அதோட, நான் அதிகமாகவும் காப்பி சாப்பிடுறதில்லே. . . .நீ காப்பி வாங்கித் தரேன்னு சொன்னதே போதும். ரொம்ப சந்தோஷம்.

ஏகாம் : அப்ப, இன்னெரு சமயம் பாத்துக்கலாம் கருப்பய்யா !

கருப்ப : நல்லதுங்க. . . .அப்ப, வர மறுக்கக் கூடாது.

கண்ண : நிச்சயமா வர்ரோம். . . .

கருப்ப : சரிங்க. . . .அப்ப, நான் வறேன். . . .வணக்கம். . . .

(ஏகாம்பரமும், கண்ணப்பனும் வணங்குகிறார்கள். . கருப்பய்யன் அப்பால் போகிறான்).

ஏகாம்ப : இந்தாப்பா ! இப்ப, நீ எதுக்காக கருப்பய்யனேட காப்பி சாப்பிட வரலேன்னே ?. . . .

கண்ண : காப்பி இப்ப தேவைப்படுலே. . அதான். . . .

ஏகாம்ப : அதெல்லாம் இல்லே. . . .கருப்பய்யனேட ஒண்ணுப் போய் காப்பி சாப்பிட பயம். தப்பித் தவறி உங்க அப்பா பாத்திட்டா, என்ன பண்றதுங்குற நடுக்கம்.

கண்ண : ஆமா !. . . .பதில் சொல்லணுமில்லே ?. . . . . .

ஏகாம்ப : போப்பா !. . . .உன்னேப் போல துடைநடுங்கிகள் இருக்கிற வரையிலே இந்தச் சமூகமே உருப்படாது.

கண்ண : சரி, வாப்பா. . . .

(இருவரும் போகிறார்கள்).

2

[அதே கிராமம். . ஒரு தோப்பு. . அங்கே ஒரு மரத்தடியில் கருப்பையனும் மரகதமும் நிற்கிறார்கள்.]

கருப்ப : (சந்தோஷமாக) மரகதம் ! உங்க அண்ணன் என்னே வாய்விட்டுப் புகழ்ந்தாரு. . . .நான் படிச்சு, பாஸாகிப் பட்டம் வாங்கி இருக்கிறதை வரவேற்கிறதா ரொம்பப் பெருமையோட சொல்லிக்கிட்டாரு. . . .

மரக : அதைக் கேட்டு உங்களுக்கும் சந்தோஷந் தானே ?. . . .

கருப்ப : சந்தோஷம் இல்லாமல் இருக்குமா மரகதம் ? என் உயிருக்குயிராய் யாரை நேசிக்கிறேனே, என்னேட வாழ்க்கைக்கு வழித் துணேயா யாரைக் கருதிஇருக்கேனே அந்த மரகதத்தோட அண்ணனே என்னேப் புகழ்ந்தா எனக்குச் சந்தோஷம் மட்டுமில்லெ பெருமையாவுமிருக்கணுமே ?. . . .

மரக : இதைக் கேட்க எனக்கும் ரொம்பத் திருப்தியா இருக்குங்க. . . .

கருப்ப : திருப்தி மங்களகரமா முடியணும். . அது ஒண்ணுதான் பாக்கி. .

மரக : ஏன் முடியாதா ?. . . .

கருப்ப : முடியும் மரகதம். . . . ஆனுலும். . . .

மரக : பாத்தீங்களா இந்த ஆனுலும் குறுக்கே வந்திடுச்சு...

கருப்ப : இல்லே மரகதம்....சமூகம்னு ஒண்ணு இருக்கே.... ?

மரக : சமூகம் என்ன சொல்றதாம் ?....

கருப்ப : அப்படிச் சொல்லிட முடியுமா மரகதம்....? சமூகம் என்ன சொல்லும் அப்படிங்குறதுக்கு ஒரு மதிப்பு இருக்கத்தான் செய்யுது....?

மரக : நம்ம ரெண்டு பேரும் விவரம் தெரிஞ்சவங்க தான்......சின்னக் குழந்தைங்க இல்லே. நம்ம ரெண்டுபேரு மனசும் ஒண்ணுயிடுச்சு....இது தெரிஞ்சா சமூகம் என்ன சொல்லும்....? அவங்க வாழ்க்கையிலேயும் ஒண்ணு சேரதுக்கு சம்மதிக்கத் தானே வேணும்....?

கருப்ப : கருத்திலே ஒத்துப் போயிட்டா, சில பிரச்னை கள் எவ்வளவு அற்பமாப் போயிடுது....ஆனுலும்..

மரகதம் : பாத்தீங்களா மறுபடியும்....?

கருப்ப : மரகதம் !....உங்க அப்பா, அம்மா இருக் காங்க....அவங்களைச் சேந்தவங்களும் இருக்காங்க..

மரகதம் : அவங்க இருக்கட்டும்..உங்கஅம்மா, அப்பா ?

கருப்ப : அவங்க எனக்கு அனுசரணையாதான் நடந்துக் குவாங்க மரகதம்....?

மரக : எனக்கும் அனுசரணையா, ஆதரவாப் பேச ஆள் இருக்காங்க....எங்க அண்ணு.... !அவர் போக்கு எனக்கு நல்லாத் தெரியும்....

கருப்ப : ஆமா, அவர் முற்போக்கு நிறைஞ்சவர் தான்....

மரக : எனக்குப் பக்கபலமா நிச்சயமா அவர் இருப்பார்... உடன் பிறந்தவரோட துணை ஒண்ணு போதும் எனக்கு....வேற எதையும் நான் பொருட்படுத்த மாட்டேன்....

கருப் : மரகதம்....

மரக : சொல்லுங்க....

கருப்ப : நான் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவன்.

மரக : இல்லே தாழ்த்தப்பட்டவங்கன்னு எங்க அண்ணு சொல்லுவாங்க....

கருப்ப : நாங்க தொட்டாலே தீட்டு, நாங்க நடந்த பாதையிலே நடந்தாலே பாவம் அப்படின்னு நினைக்குறவங்க இன்னும் ரொம்பப் பேரு இருக்காங்க..

மரகத : இருக்கட்டுமே..... இந்தா பாருங்க....அது எல்லாமே தெரிஞ்சுதான் நான் உங்களோடே பழகினேன்....எந்த வித்தியாசத்தையும் நினைக்காத மனசிலேதான் உங்களுக்கும் நான் எப்பவோ இடம் கொடுத்திட்டேன்....எதிலே நீங்க இப்ப குறைவா இருக்கீங்க.. படிப்பு இல்லேயா ; பண்பாடுதான் இல்லேயா....? என்னைவிட எவ்வளவோ தெரிஞ் சிருக்கிறவங்க நீங்க....உங்களுக்குத் தெரியாததையா நான் சொல்லிடப் போறேன்.

கருப்ப : மரகதம்....

மரகத : மறுபடியும் சொல்றேன்....எங்க அண்ணு இருக்கார். அது போதும்....நீங்க வாங்க....குளத் துலே நிறையப் பூ பூத்திருக்கு....எனக்கு ரெண்டு பறிச்சுக் கொடுங்க.

(இருவரும் போகிறார்கள்).

3

[ஏகாம்பரத்தின் வீடு அதில் ஒரு அறை, அங்கே கண்ணப்பனும் ஏகாம்பரமும் இருக்கிறார்கள்.]

கண்ணப் : ஏகாம்பரம் ! பதட்டப்படாதே ; நிதான மாகவே இரு....

ஏகாம் : இப்படி மரகதம் நடந்துக்கிடும்னு எனக்குத் தெரியாது கண்ணப்பா....

கண்ண : மரகதம், ஒண்ணும் தவரு நடந்துகிடலேங் குறது என்னோட அபிப்பிராயம்.

ஏகாம் : என்னப்பா, இப்படிச் சொல்றே ?

கண்ண : எல்லாம் சரியாத்தான சொல்ரேன்.. அது தன்னோட மனசுக்குப் பிடிச்ச கணவனைத் தேர்ந் தெடுத்துக்கிச்சி....

ஏகாம்ப : சரிதான், பெரியவங்க எதுக்கு இருக்காங்க ளாம் ?

கண்ண : பெரியவங்களா.... ? ஏகாம்பரம் நீயா இப்படிச் சொல்றே ?

ஏகாம் : ஆமா, நானேதான்.

கண்ண : சமத்வம், சகோதரத்துவம், அது இதுன்னு, சுமமா மணிக் கணக்காப் பேசறவனுச்சே நீ....?

ஏகாம் : பேசினு....? அப்படியே நடந்திடுறதா....?

கண்ண : பின்னே.... ? ஓ..! எல்லாம் வாய்ப் பேச்சுக்குத்தானு....?

ஏகாம் : சமூகம் அதுக்குப் பக்குவப்பட வேணுமா ?

கண்ண : ஓஹோ ! சமூகம் பக்குவப்படணுமா....? மரகதம்.. பக்குவப்பட்டுடுச்சி

ஏகாம் : இப்படி இந்தக் கருப்பய்யனைக் கல்யாணம் பண்ணிக்கும்னு நான் நினைக்கவே இல்லே....?

கண்ண : நீ, சும்மா வாய்ப் பேச்சோடே நிறுத்திக்கிட்டே, அது செஞ்சே காண்பிச்சுடுச்சி. உன் பேச்சு எங்கேப்பா போச்சு ?

ஏகாம் : போயிருக்கு, எங்களை அவமானப் படுத்திட்டு; இப்ப......, என்னுயிருக்கு தெரியுமா நிலைமை ?

கண்ண : என்ன ஆயிடுச்சாம் ? நேரத்துக்குத்தான் பொழுது விடியுது ; நேரத்துக்குத்தான் முடியுது.... சாதாரண மழைதான் பெய்யுது...... மணல் மாரியும், நெருப்பு மழையும் இல்லையே.... ?

ஏகாம் : கண்ணப்பா ....! ரெண்டொரு பெரிய இடத்துலே இருந்து எனக்குப் பெண் தரதாகச் சொல்லியிருந்தாங்க....இப்ப, அவங்க முகத்திலே எப்படி விழிச்சு, என்னவிதமா சம்பந்தம் பேசற துங்கிறுரு அப்பா !

கண்ண : அதிருக்கட்டும், ஏகாம்பரம்....! உன் கிட்டே மரகதம் இதைப்பற்றிச் சொல்லலையா ?

ஏகாம் : எல்லாம் சொல்லிச்சு.... அப்படியெல்லாம் நடக்காதம்மான்னு சொல்லிட்டேன்..

கண்ண : சரிதான் ! நம்ம அண்ணன், பேச்சோட சரின்னுட்டு, அது தன்னோட வழியைப் பாத்துக்கிடுச்சு....

ஏகாம்ப : பெரிய பழியா எனக்கு வைச்சிட்டு போயிடுச்சு..

கண்ண : சரி, பெரிய இடமா இல்லேன்னு, நமக்குத் தகுந்தாப்பலே சின்ன இடமாப் பாத்துக்கிடறது...... ....அதான் பெண்.... ?

ஏகாம் : எந்த இடத்திலேதான் எப்படி போய் கேட்குறதாம் ?

கண்ண : ஏகாம்பரம் ! என் தங்கையை உனக்குத் தரேன்.... கல்யாணம் பண்ணிக்குவியா ?

ஏகாம் : கண்ணப்பா, நிசமாகவா ?

கண்ண : அப்பா, சீர்திருத்தச் சிங்கமே..! எதுக்கும் மனசுதான் காரணம்.. அது மாறுவதுதான் முக்கியம்.... உதட்டளவோட பேச்சு முடிஞ்சிடும்.. காலத்துக்கு தகுந்தாப்பலே கருத்து மாறும் அப்படின்னே நீ.. ஆனு, மனசு மாறும இருந்து பிரயோஜனம்..?

ஏகாம் : உங்க அப்பா !

கண்ண : எங்க அப்பா !.. அவர் பழமையை ஆதரிப்பாரு.. புதுமையையும் வரவேற்பாரு.. அதாவது ரெண்டிலேயும் இருக்கிற நல்லதுகளை மாத்திரம். ஆயிரக்கணக்கான வருஷத்துக்கு முன்னே இருந்த நல்ல பழக்கம் இன்னைக்கும் நல்லதாகத் தான் இருக்கு ; இனி என்னைக்கும் நல்லதாகத்தான் இருக்கும். கெட்டது எப்பவும் கெட்டதுதான்.. எங்கப்பா, உன்னை மருமகனு 'ஏத்துக்கிடுவார்.. சம்மதமா ?

ஏகாம்ப : புரியுதுகண்ணப்பா ! கண்ணப்பா !

கண்ண : என்ன சொல்றதுன்னே உனக்குப் புரியவில்லே.. எதையுமே சும்மா சொல்லிகிட்டு இருக்குறதை விட, எதையெதைச் செய்றது நல்லதோ, அதைச் செஞ்சா போதும்.. அது, உனக்கும், எனக்கும், மரகதத்துக்கும், கருப்பய்யாவுக்கும் என் இந்தச் சமூகத்துக்குமே நல்லதாகும்.. எல்லாருமே ஒண்ணு அப்படின்னு உரக்கப்பேசிட்டு திரியறதோட நிறுத்திட்டா போதுமா ?

கண்ண : எனக்கு நீ மச்சினனுகப் போறே.. இது மட்டும் இல்லே.. உன்னோட கல்யாணத்துக்கு நம்ம மரகதமும், கருப்பய்யனும் வரப் போறுங்க..என்ன பாக்குறே..? அவங்களும் வருவாங்க.. நம்மைச் சேந்த பெரியவங்களும் வரவேற்பாங்க.. போதுமா ? சரி, வா....! காரியங்கள் நிறைய இருக்கு.. செயலாற்றுவோம்.

(இருவரும் போகிருர்கள்.)

[திரை]

ஜப்பானின் பிறப்பு வீதம் பத்தாண்டுகளில் பாதியாகக்குறைந்தது எப்படி?

இந்தியாவிற்குப் படிப்பினைகள்

[திரு ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்., தலைவர், திட்டக்குழு, சென்னை மாநில குடும்பக் கட்டுப்பாட்டுச் சபை.]

ஜப்பான் தேசத்தின் மக்கள் தொகை, 1947-ம் ஆண்டில் 78,000,000 ஆக இருந்தது. 1957-ம் ஆண்டில் 90,300,000 ஆக அதிகரித்தது. ஆனால், அதே சமயத்தில், 1947-ம் ஆண்டில் 27 லட்சமாக இருந்த அதன் பிறப்பு வீதம், 1957-ம் ஆண்டில் 16 லட்சமாகக் குறைந்தது. ஜப்பானியர்களின் பிறப்பு வீதம் (ஆயிரம் பேருக்கு ஆண்டு ஒன்றுக்குப் பிறக்கும் குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை) 1947-ம் ஆண்டில் 34 ஆக இருந்தது. இது 1949-ம் ஆண்டில் 33 ஆகவும், 1951-ல் 25 ஆகவும், 1953-ல் 22 ஆகவும், 1955-ல் 19 ஆகவும், 1957-ல் 17 ஆகவும் குறைந்தது. எனவே, ஜப்பான் பத்து ஆண்டுகளில் தன்னுடைய பிறப்பு வீதத்தைப் பாதியாக்கியுள்ளது. இதை அவர்கள் எப்படி சாதித்தார்கள் என்பதை பேராசிரியர் "இட்டாவுக்கா"* கூறுகிறார்.

இந்தியாவும் ஜப்பானும்

இந்தியாவின் மக்கள் தொகை ஜப்பானைப் போல் ஏறத்தாழ நான்கு மடங்காகும். இந்தியாவில் பிறக்கும் குழந்தைகள் பற்றிய பதிவு சரிவர செய்யப்படுவதில்லை. எனவே, இது விஷயத்தில் ஜப்பானின் புள்ளிவிவரங்களோடு ஒப்புமைப்படுத்திக் காட்ட இந்தியாவில் நம்பகமான புள்ளிவிவரங்களைக் கொடுக்க முடியாது. ஆனால் (மக்கட் தொகைக் கணக்கு, சிறப்பு ஆய்வுகளின் முடிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில்) புள்ளி விவரங்களை ஆராய்ந்த பொழுது, இந்தியாவில் இப்போது ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 15,000,000 குழந்தைகள் பிறக்கின்றன என்று தெரிய வருகிறது. இந்தியாவில் ஆண்டுஒன்றுக்கு ஆயிரம் பேருக்குச் சுமார் 40 குழந்தைகள் பிறக்கின்றன. இப்புள்ளி எப்போதும் ஒரே சீராக இருந்து வருகிறது.

மகத்தான சாதனை

ஜப்பான், (ஆசியாவில்) ரஷ்யாவுக்குச் சொந்தமான நாடு, (இஸ்ரேல் நீங்கலாக) ஆசிய நாடுகள் அனைத்திலும், (மேற்கு ஐரோப்பிய மரபினர் நீங்கலாக) ஆப்பிரிக்க நாடுகள் அனைத்திலும், (இரு நாடுகள் நீங்கலாக) மத்திய, தென் அமெரிக்க நாடுகள் அனைத்திலும் பிறப்பு வீதம் 35-க்கும் 45-க்கும் இடையே ஏறக்குறைய ஒரே நிலையாக இருந்து வருகிறது. 30-க்கு மேற்பட்டால் பிறப்பு வீதம் அதிகமென்றும், 20-க்குக் கீழ்ப்பட்டால் குறைவென்றும் கருதலாம். பெரும்பாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பிறப்பு வீதம் குறைவாகவே உள்ளது. பத்தாண்டுகளுக்கு முன் ஜப்பானின் பிறப்பு வீதம் பிற ஆசியநாடுகளின் பிறப்பு வீதத்தைப் போலவே இருந்தது. 1957-ம் ஆண்டுக்குள் அது வட அமெரிக்காவின் பிறப்பு வீதத்தைவிட மிகக் குறைந்து விட்டது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பிறப்பு வீதத்துக்குச் சமமான நிலையை அடைந்தது. இது மிக மகத்தான சாதனைதான். இவ்வளவு குறுகிய கால அளவில் நாடு முழுவதிலும் பிறப்பு வீதம் இவ்வளவு சரிந்திருப்பதை எந்த நாட்டு வரலாற்றிலும் காண முடியாது. உலகத்திலேயே மேற்கு ஐரோப்பிய நாடுகளில்தான் பிறப்பு வீதம் மிகக் குறைவு. அங்கு கூட பிறப்பு வீதம் 30-க்கு மேலிருந்து 20-க்குக் கீழ்வர நீண்ட காலம் பிடித்தது.

தெரிந்து கொள்ளவேண்டிய படிப்பினைகள்

நாட்டின் பிறப்பு வீதத்தைக் குறைத்து நாட்டின் மக்கட் தொகையைக் குறிப்பிட்ட ஒரு பொருளாதார அளவில் நிலைப்படுத்துவதே தேசியக் கொள்கையென இந்திய அரசாங்கத்தார் பிரகடனப்படுத்தியுள்ளனர். எனவேதான், ஜப்பானின் பிறப்பு வீதம் பாதியாகக் குறைந்ததில் இந்தியாவுக்கு முக்கிய அக்கறையுண்டு. இந்தியாவிலுள்ள மாநிலங்கள் அனைத்தும் கடந்த சில ஆண்டுகளாகக் குடும்பக் கட்டுப்பாடுச் சிகிச்சை நிலையங்களைத் தொடங்குவது, குடும்பக் கட்டுப்பாடு முறைகள்பற்றி மக்களுக்குத் தகவல் அளிக்க ஏற்பாடு செய்வது, தெரிந்தெடுத்த முறைகளைக் கையாள்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வது, அவற்றிற்கு அவசியமான பணிகள் செய்வது முதலான இத்துறைகளில் ஈடுபட்டு பிறப்பு வீதத்தைக் கணிசமாகக் குறைக்கப் பாடுபடுகின்றன. ஆனால், இதுவரை இந்தியாவின் அல்லது அதன் யாதொரு பகுதியின் பிறப்பு வீதம் குறைந்ததற்கான அறிகுறி எதும் இல்லை. இதில் ஆச்சரியப் படுவதற்கொன்றுமில்லை. ஏனெனில், பிறப்பு வீதத்தைக்

---

* இட்டாவுக்கா" "ஜப்பானின் பிறப்பு வீதம் பத்தாண்டுகளில் பாதியானது எப்படி? இது புது டெல்லியில் 1959 பிப்ரவரியில் நடந்த திட்டமிட்ட குடும்பத்தைப் பற்றிய ஆறுவது சர்வதேச மாநாட்டின்போது சமர்ப்பிக்கப்பட்டது.

குறைக்கும் பணியை ஜப்பானில் நிறைவேற்றியதுபோல் இந்தியாவில் நிறைவேற்றுவது மிகுந்த கடினம். அன்றியும், போதிய அவகாசமும் இல்லை. பிறப்பு வீதத்தைக் கணிசமான அளவுக்குக் குறைக்கும்படியாக ஏராளமான மக்கள் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை வெற்றியுடன் கையாள்வதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று இதுவரை ஒருவருக்கும் சரியாகத் தெரியாது என்பது தான் வருந்தத்தக்க விஷயமாகும். பிரபலமாகவும், நம்பகமாகவும் உள்ள கருத்தடைச் சாதனங்களை மக்களிடையே புகுத்த எடுத்துக் கொண்ட முயற்சிகள் வீணாயின. இதனால் பெரியோர் பலர், எல்லா வகையிலும் புதிய கருத்தடை மாத்திரை ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்தாலன்றி சமீப எதிர்காலத்தில் பிறப்பு வீதத்தைக் குறைக்க முடியாது என நம்புகின்றனர். புது டெல்லியில் நடந்த திட்டமிட்ட குடும்பம் பற்றிய ஆறாவது சர்வ தேச மாநாட்டில், உலக நாடுகள் அனைத்திலும் இத்துறையில் ஆராய்ச்சி நடத்துவோர் செய்த அபிவிருத்தியைப் பார்த்தபோது, ஏற்கெனவே விற்பனையாகி வரும் நுரை மாத்திரைகளைப் போன்று, பலன் கிடைக்குமென நம்பிக்கையுடன் சிபாரிசு செய்யும் அளவுக்கு வேறு கருத்தடை மாத்திரைகள் எவையும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை எனத் தெரிந்தது. இத்துறையில் ஆராய்ச்சி நடந்து வருகையில், அது பலன் தரும் வரை காத்திருக்க வேண்டியதுதானா? இந்த நிலையில், ஜப்பான் எப்படித் தனது பிரச்சினைக்குத் தீர்வு கண்டது? ஜப்பானிய அனுபவத்திலிருந்து இந்தியா தெரிந்து கொள்ள வேண்டிய படிப்பினைகள் எவை? இவற்றை அறிய ஆவல் இருப்பது இயற்கைதானே!

பிறப்பு வீதம் குறைய வழிகள்

தனித்தனி இரண்டு காரணங்களால் ஜப்பானில் பத்து ஆண்டுகளில் பிறப்பு வீதம் பாதியாகக் குறைந்தது எனப் பேராசிரியர் கிட்டாவுக்கா சொல்கிறார். ஒன்று ஜப்பானிய மக்கள் கருத்தடைச் சாதனங்களை மேன்மேலும் உபயோகித்து வருகின்றனர் என்பது; மற்றொன்று ஜப்பானிய மகளிர் பெரும்பாலோர் கருச் சிதைவு செய்து கொள்கின்றனர் என்பது. அரசாங்கத்தாரும் தேசத் தலைவர்களும், தினசரிப் பத்திரிகைகளும், மற்றப் பத்திரிகைகளும், குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கத்தை மக்களிடையே தீவிரமாகப் பரப்பியதால், சமீபத்தில் அங்கு கருத்தடைச் சாதனங்களின் உபயோகம் வெகுவாகப் பெருகி விட்டது.

ஜப்பானில் அன்றாடம் பல லட்சக் கணக்கில் விற்பனையாகும் பெரும்பான்மையான தினசரிப் பத்திரிகைகள் எல்லாம், மக்கட் தொகை பெருகுவதினால் ஏற்படும் தீங்கையும், அபாயத்தையும் முற்றிலும் உணர்ந்து மக்களுக்கு எச்சரிக்கை செய்கின்றன. மாதப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள் முக்கியமாக, பத்து லட்சத்திற்கு மேல் விற்பனையாகும் மகளிர் பத்திரிகைகள், கருத்தடை முறைகளைப் பற்றி மிக விரிவான தகவல்களை வெளியிடுகின்றன. பொதுவாக, வயதுவந்த ஜப்பானியர்கள் அனைவரும் தினசரிப் பத்திரிகைகளை ஒழுங்காக வாசிக்கிறார்கள். மகளிர் பலரும் ஏதாவது ஒருவகை மகளிர் பத்திரிகையைப் படிக்கிறார்கள். எனவே, வயதுவந்த ஜப்பானியர்கள் அனைவருக்கும் கருத்தடை முறைகளைப் பற்றி தெரிந்துள்ளது எனப் பேராசிரியர் கிட்டாவுக்கா கூறுகிறார்.

குடும்பக் கட்டுப்பாடு முறைகளைப் பற்றிய தகவல்கள், சாதனங்கள் ஆகியவற்றைப் பரவ விடாமல் விதித்திருந்த தடைகளை எல்லாம் ஜப்பானிய அரசாங்கம் நீக்கியது. அரசினர் பொதுச் சுகாதாரத் துறை அதிகாரிகள் எல்லோரும் மேற்படி தகவல்கள், சாதனங்கள் ஆகியவற்றை வழங்க வேண்டுமென அரசாங்கம் ஏற்பாடு செய்தது. இப்பணி சுமார் 900 சுகாதார நிலையங்களால் செய்யப்படுகின்றது. கருத்தடைச் சாதனங்களை உபயோகிக்கும் முறையைப்பற்றிச் சொல்லிக் கொடுக்கச் சிறப்பாகப் பயிற்சி பெற்ற மருத்துவச்சிகளும், செவிலிகளும் (நர்சுகளும்) 40,000 பேருக்கு மேல் உள்ளனர். இருபதினாயிரம் மருந்துச் சாலைகளில் "கருத்தடை" ஆலோசகர் என்னும் பலகைகள் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளன. மக்கள் அங்கு சென்று வேண்டிய ஆலோசனைகளைப் பெறுகின்றனர். "தேவையுள்ள மக்களுக்கு கருத்தடைச் சாதனங்கள் அல்லது மருந்துகளை இலவசமாக வழங்க" அரசினரும் ஏற்பாடு செய்கின்றனர். இவ்வாறாக, ஜப்பானிய அரசினரும், தேசத் தலைவர்களும், பத்திரிகைகளும், தினசரிகளும், கருத்தடைச் சாதனங்களின் உபயோகத்தை தீவிரமாகப் பரப்புகின்றனர். அதோடு "தேவையுள்ள மக்களுக்குக் கருத்தடைச் சாதனங்களை இலவசமாகவும் வழங்க" ஏற்பாடு செய்கின்றனர்.

கருச்சிதைவு செய்துகொள்ளும்படித் தூண்ட இத்தகைய முயற்சி எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால், இவ்வாறு செய்துகொள்பவர்களை ஆட்சேபிப்பதுமட்டும் இல்லை. கருச்சிதைவு செய்து கொள்வது ஜப்பானில் "சட்ட சம்மதமாகும்" எனச் சில வேளைகளில் கூறப்படுகிறது. ஆனால், பேராசிரியர் கிட்டாவுக்கா இதை மறுக்கிறார். "தண்டனைச் சட்டத்தின்படி கருச்சிதைவு" செய்தல் ஒரு குற்றமாகும். ஏனைய நாகரிக நாடுகளில் அனுமதிக்கப்படுவது போல், நியாயமான காரணங்கள் இருந்தால் மாத்திரமே இங்கும் கருச்சிதைவு அனுமதிக்கப்படுகிறது. அப்படியானால், இந்த வழக்கம் எப்படி ஏற்பட்டது? மகப்பேறு மருத்துவர்கள் இன்னொரு மருத்துவரைக் கலந்து ஆலோசிக்காமலேயே தமது சொந்த முடிவின் மேல் கருச்சிதைவு செய்யலாம். இக்குறைபாட்டின் காரணமாகவே ஜப்பானில் இவ்வழக்கம் நிலைபெற்றுவிட்டது. அன்றியும், ஜப்பானின் பிறப்பு வீதத்தைக் குறைப்பது மிக அவசியம் எனப் பொது மக்கள் கருதுவதால், போலீசாரும் கருச்சிதைவுத் தடை செய்யும் தண்டனைச் சட்டத்தை அமுல் நடத்த முயற்சிப்பதில்லை எனப் பேராசிரியர் கிட்டாவுக்கா கூறுகிறார்.

மக்களுக்குக் கருத்தடைச் சாதனங்களைப் பற்றி நன்ருகத் தெரிந்திருந்தும், அச்சாதனங்களை அவர்கள் யாதொரு இடையூறுமின்றிப் பெற முடியும் ('தேவையுள்ள" மக்கள் இலவசமாகவே பெற முடியும்.)—என்றிருந்தும் அவர்கள் ஏன் கருச்சிதைவை நாடுகிருர்கள் என்று கேட்கலாம் அல்லவா? இது நல்ல கேள்விதான். இதற்குப் பேராசிரியர் கூறுவதாவது, கருத்தடை முறைகளை அனுசரிக்கும்படி வற்புறுத்திலும், ஜப்பானில் பிறப்பு வீதத்தைக் குறைக்க கருச்சிதைவுத்தான் மிகச் சித்திகரமான வழி. கீழ்கண்ட அட்டவணையைக் கூர்ந்து கவனித்தால் அவர் கூறுவது நன்கு விளங்கும்.

ஆண்டு.	கர்ப்பிணிகள்.	கருச் சிதைவுகள்.	பிறப்புகள்.	கர்ப்பிணிகள்.	கருச் சிதைவுகள்.	பிறப்புகள்.
	எண்ணிக்கை. (லட்சத்தில்)			ஆண்டுச சராசரி எண். (பிரதி ஆயிரம் மக்களுக்கு)		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1947	தெரியவில்லை.		27	தெரியவில்லை.		34
1949	28	1	27	34	1	33
1951	26	5	21	30	5	25
1953	29	11	18	33	12	22
1955	29	12	17	32	13	19
1957	27	11	16	29	12	17

ஜப்பான் தனது நாட்டின் பிறப்பு வீதத்தைப் பாதியாகக் குறைத்த இந்தப் பத்தாண்டுக காலத்தில் இறுதி ஐந்தாண்டில் ஒவ்வோர் ஆண்டிலும், பத்து லட்சம் ஜப்பானிய மகளிருக்கு மேல் கருச்சிதைவு செய்துகொண்டனர் என்பது திகைப்பூட்டுவதாயிருக்கின்றது. கர்ப்பிணியான ஒவ்வொரு ஐந்து மகளிரிலும் இரண்டு பேராவது கருவைச் சிதைத்துக்கொண்டனர். இதைப் பார்க்கும் போது ஜப்பானின் பிறப்பு வீதம் குறைந்ததற்கும், கருத்தடைச் சாதனங்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா? அல்லது கருச்சிதைவினுலேயே ஜப்பானின் பிறப்பு வீதம் குறைந்ததா? என்று கேட்கத் தோன்றும். இது முக்கியமான கேள்வியாகும். ஏனெனில், பின்னுல் சொன்னது உண்மையாயிருப்பின், இச்சாதனை எவ்வளவு காலத்துக்கு நீடித்து நிற்கும் என்பது சந்தேகந்தான்.

கருத்தடை, கருச்சிதைவு—அடிப்படை வித்தியாசம்

கருத்தடை வேறு. கருச்சிதைவு வேறு. கருத்தடையினுல் கர்ப்பம் தரிப்பதை நாம் முற்றிலும் தவிர்க்கிருேம். கர்ப்பங்களின் எண்ணிக்கையை எந்த அளவுக்குக் குறைக்கிருேம் என்பதைக் கொண்டு கருத்தடைச் சாதனங்களை உபயோகித்ததால் ஏற்பட்ட பலனை நாம் கணக்கிடவேண்டும். மேலே அட்டவணையிலிருந்து, 1947, 1949-ம் ஆண்டுகளில் 27 லட்சம் குழந்தைகள் பிறந்தன என்றும், 1957-ம் ஆண்டு அது 16 லட்சமாகக் குறைந்தது என்றும், 1949-ம் ஆண்டு கருவுற்ற மகளிரின் எண்ணிக்கை 28 லட்சம் என்றும் ஆனுல், 1957-ல் அது 27 லட்சமாகத்தான் குறைந்துள்ளது என்றும் அறிகிருேம். இதனுல் கருத்தடைச் சாதனங்களால் அவ்வளவு பலனில்லை என்று தெரிகிறது. இக்கால அளவில் மக்கள் தொகை பெருகிக் கொண்டே வந்தது என்பதையும் கவனிக்க வேண்டும். அதனுல் தான் கருவுற்றவர்களின் வீதத்தை (ஆயிரம் மக்களில் ஆண்டு ஒன்றுக்கு கருவுற்றவர்களின் சராசரி எண்) அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுச் சராசரி எண் 1949-ம் ஆண்டிலும், அதற்கு முன்பும் 34 ஆக இருந்தது; பிறகு அது 29 ஆகக் குறைந்தது. எனவே, கருத்தடைச் சாதனங்களின் மூலம் பிறப்பு வீதம் 34-லிருந்து 29 ஆகக் குறைந்தது. கருச்சிதைவின் மூலம் மேற்படி பிறப்பு வீதம் 29-லிருந்து 17 ஆக மேலும் குறைந்தது. அதாவது கருத்தடைச் சாதனங்களை உபயோகித்துத் தங்கள் குடும்பங்களைக் கட்டுப்படுத்திய ஒவ்வொரு ஐந்து பேருடனும் கருச்சிதைவு செய்து கொண்ட 12 பேர் இருந்தனர். இதையே, குடும்பக் கட்டுப்பாட்டு முறையைக் கடைப்பிடித்த மக்களில் 70 சத வீதத்தினர் கருத்தடைச் சாதனங்களை உபயோகிப்பதைவிட கருச்சிதைவு செய்துகொள்வது மேல் எனக் கருதினர் என்றும் சொல்லலாம்.

சமீபத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாகத் தனது பிறப்பு வீதத்தை ஜப்பான் குறைத்துப் பெரிய வெற்றியடைந்தது. இது நிலைத்து நிற்குமா? அல்லது நாளடைவில் அது மீண்டும் வட அமெரிக்கா அல்லது ஆசிய நாடுகளுக்கு இணையாக உயருமா?

இந்தக் கேள்விகள் ஏன் எழுகின்றனவென்ருல், கருச்சிதைவைத் தடை செய்யும் தண்டனைச் சட்டத்தைப் போலீசார்கள் கண்டிப்பாக அமுல் நடத்தாமல் இருந்ததற்கு, பிறப்பு வீதத்தைக் குறைப்பதில் மக்கள் காட்டிய பேரார்வம் காரணமாக இருந்தது. ஆனுல், தற்பொழுது நிலைமை மாறி மக்கள் அதை எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தைந்தாம் ஆண்டு முதல் மக்கள் கருச்சிதைவை ஒரு கொடிய பழக்கமாக வெறுத்து ஒதுக்கத் தொடங்கினுர்கள். ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் தேதியன்று நடந்த திட்டமிட்ட குடும்பம் பற்றிய மூன்ருவது தேசிய மாநாட்டில், கொடிய கருச்சிதைவு முறைக்குப் பதிலாக கருத்தடை முறையைப் பின்பற்றும்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு பேராசியர் கிட்டாவுக்கா கூறுகிருர்.

இது சாத்தியமா? குடும்பக் கட்டுப்பாட்டில் விருப்பம் கொண்ட ஜப்பானிய மக்களில் 70 சதவீதத்திற்கு மேற்பட்டவர்களுக்கு கருத்தடைச் சாதனங்களைப்பற்றியும, அவைகளின் உபயோகத்தைப் பற்றியும் நனருகத் தெரிந்

திருந்தும், அவர்கள் வேண்டுமென்றே கருச்சிதைவு முறையைத்தான் பின்பற்றினர். இதற்கு அடிப்படையான காரணத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால், போலீசார் கருச்சிதைவு விஷயத்தில் தண்டனைச் சட்டத்தைக் கண்டிப்பாக நிறைவேற்ற முற்படுவார்களேயானால், அதன் விளைவு கரு வளர்ந்து குழந்தையாகப் பிறப்பதில்தான் முடியும். அந்த ரீதியில், பிறப்பு வீதம் மறுபடியும் எறக்குறைய 30 ஆக உயருமென்பதில் சந்தேகமேயில்லை.

ஜப்பானிய மக்களின் கருத்து கருச்சிதைவு முறையை ஆதரிப்பதாகவே வைத்துக் கொண்டாலும் ஒவ்வோர் ஆண்டும் 10 லட்சத்துக்கு மேல் கருச்சிதைவு செய்யப்படுவது எவ்வளவு காலத்துக்குத்தான் தொடர்ந்து நீடிக்கும்! ஜப்பானியத் தாய் ஒருத்தி மீண்டும் மீண்டும் எத்தனை முறைதான் கருச்சிதைவு செய்துகொள்ளச் சம்மதிப்பாள். எதற்கும் ஓர் அளவு உண்டு அல்லவா? அத்தகைய அளவு இருப்பின், பின்னால் கருச்சிதைவுகளின் எண்ணிக்கை குறைந்துதான் போகும். அதன் காரணமாகப் பிறப்பு வீதமும் உயரும்.

நமது நாடு கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினைகள்

இதிலிருந்து ஜப்பானிய மக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய படிப்பினைகள் எதுவாயிருந்தபோதிலும், அவர்களுடைய அனுபவத்திலிருந்து இந்தியா கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினைகள் பற்றி இந்த ஆசிரியரின் மனதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. இந்தப் படிப்பினைகளில் முதலாவது என்னவென்றால், இந்தியப் பிறப்பு வீதம் கணிசமாகக் குறையும் அளவுக்குக் கருத்தடைச் சாதனங்களைப் பெரும்பாலான இந்திய மக்கள் சமீபத்தில் பயன்படுத்த மாட்டார்கள் என்பதுதான். இது ஒன்றும் புதிதல்ல. ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தொன்றும் ஆண்டு எப்ரல் மாதத்திலேயே, இந்திய திட்டக் கமிஷனைச் சேர்ந்த சுகாதாரக் குழுவின் குடும்பக் கட்டுப்பாட்டுத் துணைக் குழுவினர் இதைத் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். கடந்த நான்கு ஆண்டுகளில் கிடைத்த அனுபவமும் இதுவே சரியான நிலை என்பதை உறுதிப்படுத்திவிட்டது. அரசாங்கத்தார் தங்களுடைய தேசியக் கொள்கையை அமுலாக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதற்கு இந்த முடிவு முக்கியமானதாகையால், இதற்குரிய காரணங்களைக் கீழே விவரமாகச் சொல்லியிருக்கிறேன்.

முதலாவது.—இந்திய மக்களில் பெரும்பாலோர் பரம ஏழைகள். அவர்களால் கருத்தடைச் சாதனங்களை வாங்க முடியாது. இந்தியாவில் வரி கொடுக்கும் மக்கள் (ஜப்பானில் வரி கொடுக்கும் மக்களைப் போலல்லாமல்) கருத்தடைச் சாதனங்களை வாங்க இயலாத நிலையிலிருக்கும் மக்களுக்கு அவற்றை இலவசமாக வாங்கித் தர முடியாத அளவுக்குப் பரம ஏழைகள்.

இரண்டாவது.—அப்படியே அவர்கள் கருத்தடைச் சாதனங்களை விலை கொடுத்து வாங்குகிறார்கள் என்றோ, இலவசமாகப் பெறுகிறார்கள் என்றோ வைத்துக்கொண்டாலும், பெரும்பாலான மக்கள் வசிக்கும் வீடுகளில் மறைவு கிடையாது; ஓடும் தண்ணீர் வசதி கிடையாது. இன்னும் இதர வசதிகளும் கிடையாது. இவற்றால் கருத்தடைச் சாதனங்களைச் சௌகரியமாகவும், சுகாதார முறையிலும் முறைப்படிப் பயன்படுத்துவது முடியாமல் போகிறது.

மூன்றாவது—நம்பகமான கருத்தடைச் சாதனங்களைப் பலன் தரும் வகையில் உபயோகிக்க வேண்டுமென்றால், குடும்பத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிற தீவிரமான மன உறுதியும் வேண்டும். அச்சாதனங்களை நீண்ட காலத்துக்கு இடைவிடாமல் பயன்படுத்தி வர வேண்டும். அத்தகைய உறுதி அரசாங்கம் நடத்தும் இயக்கங்கள் மூலம் அவ்வப்போது ஏற்படலாம். ஆனால் இந்த உறுதி இடைவிடாமல் இருக்க வேண்டுமென்றால், வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ள மக்கள் தான் அதைச் சாதிக்க முடியும்.

இறுதியாக மக்கள் தொகை பற்றிய ராயல் கமிஷன் அறிக்கைப்படி இங்கிலாந்து மக்கள் இத்துறையில் பெற்ற அனுபவத்திலிருந்து தெரிவதுஎன்னவென்றால், குடும்பத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற உறுதியும், கருத்தடைச் சாதனங்களை வாங்குவதற்கான வசதிகளும், அவற்றைத் தவறாமல் உபயோகிப்பதற்கு வசதியான வீடுகளும் படைத்தவர்களில் கூட பெரும்பாலோர் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவது "ஒரு பெரிய உபத்திரவம்" என்று கருதி அதைப் பயன்படுத்த மறுக்கிறார்கள்." என்பதுதான். மற்ற முறைகளைவிட, " தடை செய்யப்படும் சம்போக முறை"யையே (இதற்கும் அநேக ஆட்சேபனைகள் இருந்தாலும் கூட) அவர்கள், சிறந்ததாகக் கருதி நடந்து கொள்கிறார்கள்.

இப்போது ஜப்பானியருடைய அனுபவம் எவ்வாறு முக்கியமானது என்பதைக் கவனிப்போம். கருத்தடைச் சாதனங்களின் உபயோகத்தை மக்களிடையே பரப்ப ஜப்பானில் மேற்கொண்ட முயற்சிகளை விட இந்தியாவில் எந்த மாநில அரசாங்கமும். எவ்வளவு காலத்துக்கு வேண்டுமானாலும், எவ்வளவு தான் தீவிரமாக முயன்றாலும் சிறந்த அளவுக்கு முயற்சி பண்ண முடியாது. இதைப் பேராசிரியர் கிட்டாவுக்கா அவர்கள் விவரத்திலிருந்து அறியலாம்.

குடும்பக் கட்டுப்பாட்டில் ஈடுபட்ட ஜப்பானிய மக்களில் 70 சத வீதத்தினர் கருத்தடைச் சாதனங்களை உபயோகிப்பதை விட கருச் சிதைவு செய்து கொள்வது மேல் எனக் கருதினர். எனவே, இந்தியாவிலும் கருத்தடைச் சாதனங்களின் உபயோகத்தையே நம்பி பிறப்பு வீதத்தைக் குறைக்க வேண்டுமென்று முற்பட்டால், இந்தியா நிச்சயமாகத் தோல்வியடையத் தான் வேண்டும் என்பது இதிலிருந்து புலனாகிறது அல்லவா?

இது தான் முதல் படிப்பினை. இரண்டாவது படிப்பினை, ஜப்பானில் பின்பற்றப்படுவது போல், ஏராளமான பேர் தவருமல் கருச்சிதைவு செய்துகொள்வது உசிதமும் அல்ல ; இந்தியாவில் அது நடைமுறை சாத்தியமும் அல்ல.

இந்த முடிவு எல்லொருக்கும் தெரிந்தது தான். ஆனுல், சமீபத்திலே இந்தியாவில் "கருச்சிதைவைச் சட்ட சம்மதமாக்க வேண்டும்" என்று செல்வாக்குள்ள சிலர் சொல்லி வருவதால் இதை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஜப்பானில் பிறப்பு வீதத்தை மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பிறப்பு வீதத்துக்குச் சமமாகக் கொண்டு வர ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் பேர்களில் 12 பேர் கருச்சிதைவு செய்துகொள்ளவேண்டும் என்று அந்த நாட்டின் அனுபவத்திலிருந்து தெரிகிறது. அதாவது, இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 50 லட்சம் பேர் கருச் சிதைவு செய்து கொண்டால் பிறப்பு வீதம் பாதியாகும். ஜப்பானில் பொது மக்கள் இவ்வாறு ஏராளமாகக் கருச் சிதைவு செய்வதை எதிர்க்கிருர்கள் என்ருல், ஜப்பானைப் பின்பற்றி கருச் சிதைவு முறையைத் துவக்கவும் இந்திய மக்கள் சம்மதிக்க மாட்டார்கள். எனவே, இம்முறை இங்கு நடைமுறை சாத்தியமல்ல என்பது தெளிவு. அவ்வாறு சாத்தியமேயானுலும் அது உசிதமல்ல. இந்தியாவிலுள்ள தாய்மார்களின் ஆரோக்கியம் ஜப்பானை விட எவ்வளவோ மோசமான நிலையிலுள்ளது. அடிக்கடிக் கருவுறுவதனுலும், கருச் சிதைவு செய்வதனுல் ஏற்படும் ஊனத்தை அவர்கள் தாங்கும் நிலையிலில்லை. தவிர்க்க முடியாத நிலையில் இயற்கையாகவே ஏற்படுகிற கருச் சிதைவு உடல் நலத்தைப் பெரிதும் பாதிக்கிறது. எனவே,சரியான மருத்துவக் காரணங்களின்றிச் செயற்கைச் கருச் சிதைவு செய்து கொள்ளும் முறையைத் தொடர்ந்து வன்மையாகத் தடை செய்ய வேண்டும்.

நாம் எடுத்த நல்ல முடிவு

முடிவாக, ஜப்பானிய அநுபவத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, இந்தியா சமீபத்தில் மேற்கொண்ட முடிவு தான் சரியான முடிவு என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதாவது, அறுவைச் சிகிச்சையின் மூலம் ஆண்கள், " விந்துக் குழாய் வெட்டல் " (Vasectomy) மூலமும், பெண்கள் "சினைக்குழாய் வெட்டல்" (Salpingectomy) மூலமும்—நிலையாகக் கருத்தடை செய்துகொண்டால் தான் இந்திய மக்களில் 70 சத வீதத்தினர் தங்கள் குடும்பத்தை வரையறுக்கும் பணியைத் திருப்திகரமான முறையில் செய்ய முடியும் என்பதாகும்.

இதைச் சாதிக்க முடியும் என்று 1951 ஏப்ரல் மாதத்திலேயே திட்டக் கமிஷனைச்சேர்ந்த, சுகாதாரக் குழுவின் குடும்பக் கட்டுப்பாட்டுத் துணைக்குழுவினர்க்குத் தோன்றியது. எனினும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பாகமாக இந்திய அரசாங்கத்தார் இந்த அறுவைச் சிகிச்சை முறையை முதலில் சேர்க்கவில்லை. துணைக் குழு உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாலும், முக்கியமாக அப்போது நம்பகமான புள்ளி விவரங்கள் கிடைக்காததாலும் அவ்வாறு அவர்கள் சேர்க்கவில்லை. மூன்றாண்டுகளுக்கு முன் தமிழ் நாடு அரசினர் அறுவைச் சிகிச்சையைத் தமிழ் நாடு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டனர். அதன் பிறகு விரைவில் கேரள அரசினரும், பம்பாய் அரசினரும் அதைப் பின்பற்றினர். இம்மாநிலங்களில் நடை முறை அனுபவத்தில் கிடைத்த பலன்களை இந்தியாவிலுள்ள அறுவை மருத்துவர்கள், மகளிர் நோய் மருத்துவர்கள் அனைவரும் உறுதிப்படுத்துகின்றனர். எனவே, தாங்கள் விரும்பிய அளவுக்குக் குழந்தைகள் பெற்ற பிறகு கருத்தடை செய்துகொள்ள விரும்பும் பெற்ருேர் இந்த அறுவைச் சிகிச்சை முறையை விட சிறந்த முறை வேறு எதும் இல்லை எனத் திடமாய் நம்புகிருர்கள். இந்திய அரசினருக்கும் இப்போது இதில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அறுவைச் சிகிச்சை முறையை அகில இந்திய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பகுதியாக அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

திட்டமிட்ட குடும்பத்தைப் பற்றிய ஆருவது சர்வதேச மாநாடு 1959-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் புதுடெல்லியில் நடந்தது. இந்த மாநாட்டிற்குப் பல நாடுகளிலிருந்து சுமார் 80 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இத்துறையில் மிக உயர்ந்த பட்டங்கள் பெற்ற நிபுணர்கள் பலரும் வந்திருந்தனர். இவர்களில் சிலரைக் கொண்ட ஆராய்ச்சிக் குழு ஒன்று "ஆண் உறுப்புத் தையல் முறை", "பெண் உறுப்புத் தையல் முறை" பற்றித் தங்கள் சொந்த அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டனர். தீர விவாதித்த பிறகு இந்த ஆராய்ச்சிக் குழுவினர் கீழ்க்கண்ட தீர்மானத்தை ஏகமனதாய் ஏற்றுக் கொண்டனர் :

"நம்பகமான கருத்தடைச் சாதனங்களைத் தவருமல் உபயோகிப்பதற்கு அவசியமான வசதிகள் பல வகுப்பினர்களுக்கு இல்லாததாலும்,

இம்மாநாட்டில் சமர்ப்பித்த அறிக்கைப்படி, ஆண் உறுப்பு அறுவைச்சிகிச்சை முறை, பெண்உறுப்பு அறுவைச் சிகிச்சை முறை இவற்றின் அனுபவத்திலிருந்து இவற்றைப் பெரும்பாலோர் உபயோகிக்கலாமெனத் தெரிவதாலும்,

இந்த அறுவைச் சிகிச்சை முறை தீங்கற்றது, பலனுள்ளது, அனைவரும் ஒப்புக்கொள்வது எனத் திருப்திகரமாகத் தெரிவதாலும்—

இந்த ஆராய்ச்சிக் குழுவினர் சிபாரிசு செய்வது என்னவென்ருல் ;

(1) அறுவை சிகிச்சை முறையைக் குறித்த அவசியமான தகவல்களை மருத்துவர்களுக்கும், பொது மக்களுக்கும் விரைவில் தெரிவிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

(2) இதைப்பற்றி சட்டசம்பந்தமான சந்தேகங்கள் எவையேனும் இருந்தால், சம்பந்தப்பட்ட அரசாங்கங்களை அவற்றைஅகற்றவும், மேற்படி அறுவைச் சிகிச்சை எந்த நிபந்தனைகளுக்கும் பாதுகாப்புகளுக்கும் உட்பட்டு நடத்தவேண்டுமென வரையறுக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(3) இதைப் பற்றிய தகவல் தரும்படி தாங்களாகவே வந்து கேட்பவர்களுக்கு அவசியமான வசதிகளை இலவசமாகச் செய்து கொடுக்க வேண்டும்.

இக்கட்டுரை ஆசிரியர் திட்டமிட்ட குடும்பத்தைப் பற்றிய ஆறுவது சர்வதேச மகாநாட்டில் சமர்ப்பித்த கட்டுரை* ஒன்றில் எத்தனை பேருக்கு அறுவைச் சிகிச்சை முறையைச் செய்ய வேண்டுமென்பது பற்றி மதிப்பிடப்பட்டிருக்கிறது.

"உதாரணமாக 1000 பேர் கொண்ட ஒரு தொகுதியை எடுத்துக்கொண்டால், அதில் 180 தம்பதிகள் தங்கள் மணவாழ்வில் மக்கட் பேற்றினை அடையும் நிலையிலிருப்பர். அவர்களில் 70 பேருக்கு 25 முதல் 34 வயதுத் தொகுதியைச் சேர்ந்த மனைவியர் இருப்பர். மணமான ஒவ்வொரு தம்பதியும் பத்தாண்டுக் கால அளவில் ஏதாவது ஒரு நிலையில் மேற்படி அறுவைச் சிகிச்சை முறையை மேற்கொள்ளத் தீர்மானித்தால், ஆண்டொன்றுக்கு மேற்படி அறுவைச் சிகிச்சை முறையை செய்து கொள்ள வேண்டியவர்களின் எண் 70-ல், 10-ல் 1 பாகம்; அதாவது 7 பேர். இந்த எழுவரில் இருவருக்கு இதர முறைகளை உபயோகித்து குழந்தைப் பேற்றினைத் தடுத்துக்கொள்ள முடியும் எனக் கொள்ளலாம். எனவே, 1000 பேர் உள்ள ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வோர் ஆண்டும் மணமான தம்பதிகளில் 5 பேர் மேற் சொன்ன அறுவைச் சிகிச்சை முறையைச் செய்து கொள்ளவேண்டியவர்களாகின்றனர்."

அறுவைச் சிகிச்சையின் மேன்மை

ஜப்பானிய மக்களின் அனுபவ வாயிலாகப் பெற்ற உண்மைகள் மேற்கண்ட மதிப்பீட்டை உறுதிப்படுத்துகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரம் பேர் சராசரி கருச் சிதைவு செய்துகொண்டதன் மூலம் ஜப்பானில் பிறப்பு வீதம் பாதியாயிற்று என இதற்கு முன் கொடுத்துள்ள அட்டவணையில் காண்கிறோம். எனவே, ஒரு முறைக் கருச் சிதைவு செய்துகொள்வதன் மூலம் ஒரு குழந்தை பிறப்பது தடை செய்யப்படுகிறது. ஆனால், அறுவைச் சிகிச்சை செய்துகொண்டால் குழந்தைப் பேற்றினை நிரந்தரமாகத் தடை செய்து விடலாம். இவ்வாறு அறுவைச் சிகிச்சை மூலம் தவிர்க்கப்பட்ட குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை இரண்டுக்கு மேற்பட்டும், மூன்றுக்குக் குறையாமலும் இருக்கும். எனவே, 1000 பேரில் ஆண்டு ஒன்றுக்கு 5 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்தால், அது 1000 பேரில் ஓராண்டில் சராசரி 12 பேருக்குக் கருச் சிதைவு செய்வதற்கு ஒப்பாகும்.

ஜப்பானியருக்கு அறுவைச் சிகிச்சையின் மேன்மையைப் பற்றித் தெரிந்திருந்தால் அவர்கள் கருச்சிதைவு முறையை நாடியிருக்கமாட்டார்கள். ஜப்பானிய மருத்துவர்கள் கருச்சிதைவுக்குப் பதிலாக அறுவைச் சிகிச்சையையே செய்திருப்பார்கள். திட்டமிட்ட குடும்பத்தைப் பற்றிய ஆறுவது சர்வதேச மாநாட்டில் ஆராய்ச்சிக் குழுவினர் தெரிவித்த கருத்தையொட்டி, ஜப்பானிய மக்கள் கருச்சிதைவு முறையை விட்டு கருத்தடை முறையை மேற்கொண்டால், தாற்காலிகமாகக் கருத்தடை செய்யும் சாதனங்களை உபயோகப்படுத்தாது நிலையாகக் கருத்தடை செய்யும் அறுவைச் சிகிச்சையைத் தான் மேற்கொள்வார்கள் என்று ஆசிரியர் முற்றிலும் நம்புகிறார்.

ஜப்பானின் எதிர்காலம் எப்படியிருந்தாலும், இந்தியா தெரிந்துகொள்ள வேண்டிய படிப்பினை தெளிவானது. இப்போது கிடைக்கும் நம்பமகமான கருத்தடைச் சாதனங்களை பெரும்பாலும் இந்திய மக்கள் தவறாமல் உபயோகிப்பார்கள் என்று நம்பவே முடியாது. அதைப் போலவே, குறைந்தவிலையில் சிறந்த பலனளிக்கும் கருத்தடைமாத்திரைகள் கிடைக்கும் வரையில் காத்திருக்கவும் முடியாது. மணமான தம்பதிகள் தங்களுக்கும் குழந்தைகள் போதும் என்று முடிவு செய்கையில், கருத்தடை செய்து கொள்ள, பலனுள்ள, மலிவான, தீங்கற்ற முறைகள் பல உள்ளன. மக்கள் தலைவர்கள் இதை நன்றாகப் புரிந்துகொண்டு மக்களுக்கும் புரியும்படிச் செய்ய வேண்டும். இது தான் இப்போது உடனடியாகச் செய்யவேண்டிய முதல் கடமை. இரண்டாவதாக, மாநில அரசினர் மக்களுக்கு அறுவைச் சிகிச்சை வசதிகளை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். 1000 பேர் கொண்ட ஒரு தொகுதியில் ஆண்டு ஒன்றுக்கு 5 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யக்கூடிய வகையில் வசதிகளை ஏற்படுத்தி அவற்றைப் பயன்படுத்தி வந்தால், இந்தியாவின் பிறப்பு வீதத்தைப் பாதியாகக் குறைக்கலாம் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

இந்தியாவில் மக்கள் தொகைப் பிரச்னைக்குத் தீர்வே இல்லைபோல் தோன்றுகிறதல்லவா? இந்த வசதிகளைச் செய்துகொடுத்தால் உண்மையில் இந்தப் பிரச்னையை எளிதில் தீர்த்து விடலாம்.

*ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசுவாமி, "குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கையை நிர்வாக அளவில் அமுலாக்குவது எப்படி?" தமிழ் நாடு அரசாங்க வெளியீடு 1959."

தேசிய வளர்ச்சிப்பணிகளைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்தல்

தமிழ்நாடு அரசாங்கம்

(கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை.)

[பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்—சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டம்-தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 66 வது பிரிவு—முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்புவித்தல்—உத்தரவு பிறப்பித்தல்]

கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையின் 2—3—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 588-ல் சமுதாய நலத் திட்டத்தின் கீழ் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைப்பதற்கான கால அட்டவணை கூறப் பட்டுள்ளது. அதன்படி, கீழ்க் குறிப்பிட்ட மூன்று தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிடம் அவற்றின் எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இத் திட்டம் ஒப்படைக்கப்படும்.

முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள்— 1—4—61.

இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள்— 1—7—1961.

மூன்றுவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள்— 1—1—62.

2. மேற்படி ஆணையின் மூன்றுவது பாராவில், பஞ்சாயத்து யூனியன் மன்றம் ஈட்டு நன்கொடைகளின் மூலம் சேர்த்து தேவையான வருவாய்களைத் திரட்டி இத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதை ஒரு தீர்மானத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது 16—8—1960 தேதியிட்ட கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 664-ல் கூறப்பட்டுள்ள பொருளாதார அமைப்புக்கும் அதே துறையின் அரசாங்க ஆணை எண் 211-ல் கூறப்பட்டுள்ள விளக்கத்துக்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும். அவ்வாறு முன்னேற்பாடுகளைச் செய்துகொண்டு அப்படிப் பட்டதொரு தீர்மானத்தை முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் நிறைவேற்றிய பின்னர்—சமுதாய நலத் துறையின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தை 1—4—61 முதல் அவைகளின் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று அரசாங்கம் இதன் மூலம் உத்திரவிடுகிறது.

3. 1958 தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 66-வது பிரிவில் கூறப்படும் அப்படிப்பட்ட ஒப்படைப்பானது பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்ட வட்டாரத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களுடன் சேர்ந்து ஒரு ஐந்தாண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இருக்கவேண்டுமென்றும், அந்தத் திட்டம்—மூன்றுவது ஐந்தாண்டு திட்ட காலத்துக்குரிய (1961-62—1965-66) வட்டாரப பஞ்சாயத்து, வளர்ச்சி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டமாகக் கருதப்படும் என்று கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 588-ன் மூன்றுவது பாராவில் கூறப் படுகிறது. இத்தகைய வரவு செலவுத் திட்டம் தயாரிப்பது பற்றிய விளக்கத்தை 25—1—1961 தேதியிட்ட கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 211-ல் காணலாம். ஆகவே, தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப் படைப்பது என்பது, பஞ்சாயத்து வளர்ச்சி வரவு-செலவுத் திட்டத்தில் கண்டுள்ள அம்சங்களைப் பற்றியது மட்டும் தான். சமுதாய நலத் திட்டத்தின் கடன் பகுதிகளை விநியோகிக்கும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. இந்தப் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்—வட்டார வளர்ச்சி அதிகாரி என்ற முறையில் நிறைவேற்றுவார். பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் அதிகார வரம்புக்கு இது உட்பட்டதல்ல. அதே போன்று, வட்டார வளர்ச்சி வரவு செலவுத் திட்டத்தின் கிராமக் கலை-கைத்தொழில் பகுதி பற்றிய பொறுப்புகள் தற்போதைக்குப் பஞ்சாயத்து அபிவிருத்திக் கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளன. ஏனெனில் காலப்போக்கில் அப்

பொறுப்புக்களை, வட்டாரங்களில் கதர்- கிராமக் கைத் தொழில்கள் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் ராஜ்யக் கதர், கிராமக் கைத்தொழில் போர்டு ஏற்றுக் கொள்ளும். அவை அத் திட்டங்களைப்பற்றி விளக்கமான உத்தரவுகளைப் பிறப்பிக்கும். ஆரம்ப சுகாதார நிலையங் களைப்பற்றிய பகுதியும் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்துக்குள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இப் பகுதியை ராஜ்ய அரசாங்கமே ஏற்று நடத்தும்.

4. மேற்குறித்த பகுதிகளை விலக்கிய பின்னர், சமுதாய நல வட்டார திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் பெரிதும் திருத்தியும், விரிவுபடுத்தியும் போடப் பட்டுள்ளது. திருத்தப்பட்ட இத் திட்டத்தை நிறை வேற்றும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன் மன்றங் களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து அபிவிருத் திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்துக்கும், சமுதாய நல வட்டார வளர்ச்சிக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்துக்கும் உள்ள தொடர்புகள், 16—8—1960 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 664-லிலும் 25—1—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 211-லும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

5. பஞ்சாயத்து யூனியன்களிடம் அரசாங்கம் இத்திட்டங் களை ஒப்படைக்கும் பொழுது கிராம மட்டத்தில் இத் திட்டங்கள் பஞ்சாயத்துக்களைக் கொண்டே நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட வேண்டும் என்று உத்திரவிடுகிறது.

6. பஞ்சாயத்து சட்டம் 44 (5) பிரிவின் ஒரு பகுதி எல்லாப் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் கவனத் திற்கும் கொண்டுவரப்படுகிறது ; "பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், அரசாங்கத்தால் பஞ்சாயத்து யூனியன் களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டம் முதலான திட்டங்களைப்பற்றி முடிவுகளை வெளி யிடும்பட்சத்தில் அம் முடிவுகள் திட்டங்களை ஒப்புக் கொள்ளும்பொழுது ஏற்படுத்திக்கொள்ளும் நிபந்தனை கட்கு உட்பட்டே அமைய வேண்டும்."

ஆகவே பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஐந்தாண்டுக் குரிய திட்டத்தையும், வருடாந்திர திட்டத்தையும், சமுதாய நலத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் அவ்வப்போது இடும் உத்தரவுகளை அனுசரித்துத் தயாரித்துக் கொள்ளவேண்டும்.

[கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை 21-3-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 838.]

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் சமுதாய நலத்திட்டத்தின் தேசியநலப் பணிகளை ஒப்படைத்தல்—அதைப்பற்றிய நிதிக்கணக்கு சம்பந்தமான உத்தரவுகள்

தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66-வது பிரிவின் படி, கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின், 21—3—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 838-ன் படி சமுதாய நலத் திட்டத்தின் கீழ் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தை முதல் தொகுதியாக அமைக்கப்பட்ட 75 பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்க உத்தரவாகி யுள்ளது. இந்த ஒப்படைப்பு மேற்குறிப்பிட்ட அரசாங்க ஆணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டதாகும். இந்த ஒப்படைப்பு 25—1—1961 தேதி யிட்ட கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 211-ல் கூறப்பட்டுள்ள பகுதிகளைப் பற்றியது மட்டிலுமே என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. சமுதாய நல வேலைமுறைக்குட்பட்ட கடன் வினியோகிக் கும் பொறுப்பு மேற்குறிப்பிட்ட ஒப்படைப்பில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

2. கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 20—7—1960 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1225-ல் பஞ்சாயத்து யூனியன் அலுவலகப் பணியாளர்களின் அமைப்பு முறை கூறப்பட்டுள்ளது. மானேஜர், கணக்கர், (Accountant), இரண்டு மேல் நிலைக் குமாஸ் தாக்கள், ஜீப் ஓட்டி, ஆகியோர் தேசிய வளர்ச்சிப் பணியின் பணியாளர்களாகக் கருதப்படுவர். அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஊதியம் எதுவும் பெறுமல் பஞ்சாயத்து யூனியன்களின்கீழ் பணியாற்றுவர். தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 44-வது பிரிவின்படி, எந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனருடைய சம்பளம், படி (Allowance) முதலான செலவுத் தொகைகள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் திரும்ப வசூலிக் கப்படமாட்டாது. சமுதாய நலத் திட்டத்தின்கீழ் தேசிய வளர்ச்சிப் பணி ஒப்படைக்கப்பட்ட பின், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டி, கீழ்க்கண்ட பணியாளர்களை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு நியமித்துஅரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இப்பணியாளர்களுக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தன்செலவில் ஊதியம் அளிக்கத் தேவையில்லை :

(i) தேசிய வளர்ச்சி அதிகாரி (விவசாயம்).

(ii) தேசிய வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்)

(iii) தேசிய வளர்ச்சி மேற்பார்வையாளர்.

(iv) தேசிய வளர்ச்சி அதிகாரி (கால்நடைப் பாது காப்பு).

(v) தேசிய வளர்ச்சி அதிகாரி (தொழில்கள்).

(vi) தேசிய வளர்ச்சி அதிகாரி (கூட்டுறவு).

(vii) கல்வி வளர்ச்சி அதிகாரி.

(viii) சமூகக் கல்வி அமைப்பாளர் (பெண்கள்).

(ix) பத்து கிராம சேவகர்.

(x) இரண்டு கிராம சேவிகைகள்.

(xi) விவசாயப் பண்டகசாலை குமாஸ்தா.

(xii) இரண்டு சமூக நல ஊழியர்.

3. பஞ்சாயத்து வளர்ச்சி வரவு செலவுத் திட்டத்தில், ஆரம்ப சுகாதார நிலையத்தின் செலவுகளும் சேர்த்துக் கொள்ளப்படாததால், அது சம்பந்தமான பணியினையும் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. விவசாயப் பண்டகசாலையையும், ஜீப் வண்டியையும், சினிமாப்படக் கருவி இருப்பின், அதையும் அரசாங்கமே பராமரித்து வரும்.

4. முன்னர் நிர்ணயித்துள்ளபடியே, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், வட்டார வளர்ச்சி அதிகாரி என்ற நிலையினையும் பெற்று இரட்டைப் பொறுப்புள்ளவர் ஆகிறார். பஞ்சாயத்து யூனியனின் நிர்வாக அதிகாரி என்ற முறையில், அவர் பஞ்சாயத்து யூனியன் நிதி நிலையை இயக்க வேண்டியவர் ஆகிறார் ; வட்டார வளர்ச்சி அதிகாரி என்ற முறையில், மேற்குறித்த செலவினங்களைப்பற்றிய அரசாங்க நிதியைப் பெற்று நேரடியாக வினியோகிக்கும் அதிகாரியாகவும் பணியாற்ற வேண்டும். இந்தஇரு வேறு பொறுப்புகளையும் தெளிவாகப் பிரித்தறிதல்வேண்டும். ஆகவே, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், கிளைக் கஜானா அதிகாரிகள் ஆகியோரின் உதவிக்காக கீழ்க்கண்ட செயல்முறைகள் பிறப்பிக்கப்படுகின்றன:—

(i) பஞ்சாயத்து யூனியன்களிடம் சட்டப்படி பூர்வாங்கமாகவோ அன்றி சட்டத்தின் 66-வது பிரிவின்படியோ ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைகள், அமைப்புகள், திட்டங்கள், பணியாட்கள், முதலானவற்றோடு தொடர்பு கொண்ட செலவினங்களுக்கு, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் பஞ்சாயத்து யூனியனிடம் ஏற்பாட்டுக்குட்பட்ட நிதியிலிருந்து மட்டுமே பயன்படுத்தவேண்டும். இதற்கென்றே கிளை கஜானாவில் ஒரு " நாட்டாண்மை நிதி வைப்புத் தொகைக் கணக்கு" (Local Fund Deposit Account) வைக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசாங்கம் அளிக்கும் மானியங்கள் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்படும் உதவி மானியங்கள் என்ற பிரிவில் அடங்கும். ஆகவே அந்த நிதியிலிருந்து பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் நேரடியாகப் பணத்தை எடுக்க முடியாது. தகுதி வாய்ந்த அதிகாரிகள், இதற்கென்று குறிப்பிட்டு அங்கீகாரமளித்த பின்னரே, பஞ்சாயத்து யூனியன்கள் பணத்தைப் பெற முடியும்.

(ii) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், வட்டார வளர்ச்சி அதிகாரி என்ற முறையில், கீழ்க் குறிப்பிட்ட இனங்களைப் பொறுத்த அளவில், நிதியைப் பெறுகின்ற அதிகாரியாகவும், அதை விநியோகிக்கின்ற அதிகாரியாகவும் செயலாற்றவேண்டும் :—

(a) மேலே இரண்டாவது பாராவில் சொல்லியுள்ள எல்லா தேசியவளர்ச்சிப் பணித் திட்டப் பணியாளரின் சம்பளம், பயணப்படி உட்பட எல்லாப் படிச்செலவு, தேசிய வளர்ச்சி அலுவலகப் பணியாளரின் (பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் சம்பளம் உட்பட) ஆகியவைகளைப் பற்றிய எல்லாச் சம்பளப் பட்டியல்களையும் (bills) பஞ்சாயத்து யூனியன் கமிஷனரே, வட்டார வளர்ச்சி அதிகாரி என்ற முறையில் பணமாக மாற்றிக் கொள்ள வேண்டும். மேலும் அவர் அதற்கென்றுள்ள நிதித் தலைப்புகளின் கீழ் செலவினங்களைப் பற்றிய பற்று வைத்து விட வேண்டும்.

(b) தேசிய வளர்ச்சித் திட்டம், பிற அமைப்புக்களின் சிறிய செலவுகள் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்படாதவை போன்ற அம்சங்களையும் வட்டார வளர்ச்சி அதிகாரி என்ற முறையில் அவரே நேரடியாக மேற்பார்த்து பணம் எடுக்கும் பட்டியல்களை (bills) கிளை கஜானாவில் பெற்றுக் கொள்வதுடன், சம்பந்தப்பட்ட, நிதித் தலைப்புகளின்கீழ் செலவினங்களைப் பற்று வைத்துவிடவேண்டும்.

(c) வட்டார வளர்ச்சி அதிகாரி என்ற முறையில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் தொடர்ந்து கடன் அங்கீகாரம் விநியோகம் செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். இந்தக் கடன் அங்கீகார விநியோகப் பிரிவுகள், பஞ்சாயத்து வளர்ச்சி வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறாத ஒன்றாகும். ஆகவே அவர் கடன் விநியோகத்திற்குத் தேவையான தொகைகளை சுருக்கச் சிறு பொருள் (Abstract contingent bills) பட்டியல்களின் பேரில் கஜானாவிலிருந்து தொடர்ந்து பெற்றுக் கொள்ளலாம்.

(iii) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், வட்டார வளர்ச்சி அதிகாரி என்ற முறையில் செய்யும் கொடுக்கல்-வாங்கல்களுக்குத் (Transactions) தனிக்கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். இப்போதைக்கு, பொதுத்துறை (கிராமஅபிவிருத்திதிட்டம்) 18–5–59 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1512-ல் கூறப்படும் கணக்கு வைக்கும் முறைகள், இக் கொடுக்கல்-வாங்கல் முறைகளுக்கும் பொருத்தமானவையாக இருக்கும். திருத்தமான கணக்குமுறைகள் வெளியிடப்படும் வரையில் இம் முறைகளே அமுலில் இருக்கலாம்.

5. மேற் குறிப்பிட்ட செயல் முறைகள் கீழ்க் குறிப்பிட்டுள்ள தேதிகளிலிருந்து, மூன்று தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிலும் அமுலுக்கு வரும் :—

முதல் தொகுதி (75 யூனியன்கள்)—1–4–61.

இரண்டாம் தொகுதி (129 யூனியன்கள்)—1–7–1961

மூன்றும் தொகுதி (171 யூனியன்கள்)—1–1–1962.

(இப்பஞ்சாயத்து யூனியன்களின் பெயர்களை "கிராம நலம் ''மார்ச்சு இதழில் வெளியிட்டுள்ளோம்.)

[கிராம அபிவிருத்தி, தலநிர்வாகத் துறை 24-3-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 801]

சொத்து மாற்றத்தின் மேல் விதிக்கப்படும் வரிவிதிப்பு விகிதத்தில் மாறுதல்

1950-ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 67 (1) (b) பிரிவின் கீழ் சொத்து மாற்றத்தின்பேரில் (Transfers of property) விதிக்கப் படுகின்ற வரியின் விகிதத்தை உயர்த்துவதென்று 23–5–1952 தேதியிட்ட தலநிர்வாகம் அரசாங்க ஆணை எண் Ms. 1012ன்படி 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்துவதென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

எல்லாக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் இந்த விவரத்தை அறிவிக்குமாறு நகர மன்றங்கள், நாட்டாண்மைக் கழகங்களின் பார்வையாளர் (Inspector of Municipal Councils and Local Boards) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு அறிக்கை.

1950-ம் வருடத்திய கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 67 (1) பிரிவின் (b) உட்பிரிவு அளிக்கும் அதிகாரங்களைச் செயல்படுத்துகின்ற வகையிலும், 28–5–1952 தல நிர்வாகத் துறை 422 எண்ணுள்ள அறிக்கையின்படி செயல் படுவதை ரத்து செய்யும் வகையிலு,ம் அரசாங்கம் கீழ்க் கண்ட உத்தரவைப் பிறப்பிக்கிறது :

விற்பனை, பரிவர்த்தனை, இனுமாகஅளித்தல், ஈடுவைத்தல், குத்தகைக்கு விடுதல் (அசையாப் பொருள்களை) முதலான சொத்து மாற்றங்களைப் பற்றிய பத்திரங்களின்பேரில் விதிக்கப்படும் வரிவிகிதத்தை, எந்தத் தொகையின் மேல் வரி விதிக்கவேண்டுமென்று மேற் குறிப்பிட்ட உட்பிரிவு கூறுகிறதோ, அந்தத் தொகையின் 5 சதவிதம் வரியாக விதிக்கப்படும். இந்த வரிவிகித உயர்வு 1–4–1961 தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

[கிராம அபிவிருத்தி-தலநிர்வாகத்துறை 1961 மார்ச் 11-ம் தேதி பிறப்பித்த அரசாங்க ஆணை எண் 720.]

—:—:—:—

மதிப்பீட்டுக்கு உட்பட்ட தரிசு; மதிப்பீட்டுக்கு உட்படாத தரிசு, நத்தம் புறம்போக்கு, முதலான (Assessed Waste lands, Unassessed Waste lands, Natham Poramboke lands) நிலங்களின் உபயோகங்களைப் பற்றிய சட்டதிட்டங்கள்

தமிழ்நாடு அரசாங்கத்தின் தல நிர்வாகத்துறையின் 1960 எப்ரல் 4-ம் தேதியிட்ட ஆணை எண் 608ல் கிராமத்தில் உள்ள சில சொத்துக்களைப் பற்றிய அதிகாரங்களைப் பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கும் விஷயங்களைப் பற்றியும், சில பொதுச் சொத்துக்களை உபயோகிக்கும் அதிகாரங்களை அவைகளுக்கு அளிப்பது பற்றியும் 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்திலுள்ள, சட்டத்திற்குட்பட்ட விதிமுறைகளுக்கு ஒப்ப உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த உத்தரவின்படி, கீழ் குறிப்பிட்ட வகைகளைச் சேர்ந்த புறம்போக்குகளைப் பற்றிய அதிகாரம் பஞ்சாயத்துகளுக்கு அளிக்கப்பட்டது :

(i) மேய்ச்சல் நிலங்கள் ;

(ii) களத்து மேடுகள் ;

(iii) இடுகாடு, சுடுகாடு முதலியன. ;

(iv) மந்தைவெளிகள் ;

(v) வண்டிமேடுகள் ;

(vi) தோப்புக்கள்.

இந்த நிலங்கள் சட்டப்படி பஞ்சாயத்துக்களின் அதிகாரத்திற்குட்பட்டவையாகும். இந்நிலங்களைப் பொதுமக்களின் நன்மைகளுக்காக எந்த வகையில் உபயோகிப்பது என்று தீர்மானிக்கும் முழு அதிகாரமும் பஞ்சாயத்துக்களுக்கே உண்டு. உள்ளூர் உர உற்பத்திப் பெருக்கத்துக்காக புதிய மரங்களை நடுதல், பிறவகைப் பயிரிடுதல் முதலான அதிகாரங்களும் இந்த அதிகாரத்தில் அடங்கும்.

2. மேற்குறிப்பிட்ட அதே உத்தரவில், 1958 ம் வருடத்திய பஞ்சாயத்துச் சட்டத்தின் பிற பிரிவுகளை ஒட்டி நீர்ப்பாசனத்துக்குக்கல்லாத பிற எல்லா நீர்நிலைகளும், தேசிய நெடுஞ்சாலைகள், ராஜ்ய நெடுஞ்சாலைகள், பஞ்சாயத்து யூனியன் சாலைகள் முதலானவற்றுக்குட்படாத பிற சாலைகளும், பஞ்சாயத்துக்களின் அதிகாரத்துக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. இந்த விதிகளின் படி, பஞ்சாயத்துக்களுக்கு இந்த சொத்துக்களைப் பிறருக்கு மாற்றுதல் அல்லது உரிமையாக்குதல் முதலிய அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை. எதற்காக இந்த நிலங்கள் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த காரியங்களுக்கு மட்டுமே பஞ்சாயத்துக்கள் இவைகளைப் பயன் படுத்த வேண்டும்.

3. கிராமத்தினுடைய நன்மைக்காக ஏதாவது புறம்போக்கு நிலத்தின் உபயோகத்திற்கான அநுமதியைப் பெற பஞ்சாயத்துக்கள் அரசாங்கத்துக்கு மனு செய்து கொள்ள இந்த உத்தரவு இடமளிக்கிறது. அவ்வாறு அனுமதி அளிக்காமல் இருக்க சிறப்பான காரணங்கள் எதுவும் இல்லாத பட்சத்தில் கலெக்டர், பஞ்சாயத்து செய்துகொண்ட மனுவின் பேரில் அனுமதி அளித்துவிட வேண்டும்.

4. (i) மதிப்பீட்டுக்கு உட்பட்ட தரிசு, (ii) மதிப்பீட்டுக்கு உட்படாத தரிசு, (iii) நத்தம் புறம்போக்கு இவைகளை உபயோகிப்பது பற்றிப் பஞ்சாயத்துக்களின் அதிகார வரம்பு என்ன என்ற கேள்வி அடுத்தடுத்து எழுப்பப்பட்டுள்ளது. அரசாங்கம் இந்தப் பிரச்னையை விரிவாக ஆராய்ந்தது. ஆரம்ப நிலையில், அரசாங்கத்தின் கீழ் இருக்கும் எல்லாப் பொதுநிலங்களையும் (பொது மக்களின் நன்மை கருதி அரசாங்கம் அதனுடைய இலாக்காகளின் நேரடி நிர்வாகத்தில் தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்ற தேவையற்ற எல்லா நிலங்களையும்) கிராமத்தின் பொதுநன்மையின் உபயோகத்திற்கென்று பஞ்சாயத்துக்களுக்கு உபயோகப்படுமாறு அளிக்கவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமும் விருப்பமும் ஆகும். இந்தக் கருத்தை மனத்தில்கொண்டு மேற்குறித்த மூன்று வகை நிலங்களின் உபயோகத்தைப்பற்றிய பிரச்சினையை ஆராய்ந்ததில், அரசாங்கம் கீழ்க்கண்ட உத்தரவுகளை அமுலுக்குக் கொண்டுவர உத்தரவிடுகிறது :—

(i) **மதிப்பீட்டுக்குட்பட்ட தரிசு நிலங்கள்.**—மதிப்பீட்டுக்கு உட்பட்ட தரிசு நிலங்கள் என்பன, எந்தத் தனி மனிதரின் பேரிலும் பட்டா ஆகாமல் இருக்கும், கிராமத்தின் பொது நிலங்களாகும் ; எனினும் "வரிவிதிப்புக்கு உட்பட்ட தரிசு நிலங்கள்" என்று அவைகளைப் பிரிக்கக் காரணம், சில நேரங்களில் அவையும் விவசாயத்துக்குத் தகுந்தவை என்று கருதப்பட்டு, அவற்றில் விவசாயம் செய்ய விரும்புவோர் மனுச் செய்து கொள்ளலாம் என்பதேயாகும். போர்டின், நிலை உத்தரவுகளும் (Standing orders) பிற அரசாங்க உத்தரவுகள் பலவும், இந்தத் தரிசு நிலங்களைத் தகுதியுள்ள மனுதாரர்களுக்கு கொடுப்பதற்கு திட்டம் செய்திருக்கிறது. இந்த வகைத் தரிசு நிலங்களைப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைப்பதா என்பதையும், அவ்வாறு செய்தால் எந்த வகையில் செய்வது என்பதையும் அரசாங்கம் பிரச்சினையை ஆராயும்போது யோசித்தது. தகுதியுடைய பொது உபயோகத்துக்குப் பஞ்சாயத்துக்கள் இவற்றை உபயோகிக்க முடியுமானால் அது நன்மையைக் கருதிச் செய்யப்படுவதாகும். தகுதியுடைய பொது உபயோகங்கள் என்பன, விறகுக்கான மரங்களை நடுதல், கால் நடைக்கான தீவனங்களைப் பயிரிடல், தழை உரத்திற்கான பயிர்களைச் செய்தலும் முதலான விவசாய முன்னேற்றத்துக்கான விளைச்சல்களைச் செய்யவும், கால்நடைப் பாதுகாப்பு, முதலானவையும் இவை போன்ற பிறவுமாகும். ஆனால் அதே நேரத்தில் இந்நிலங்களை தனிப்பட்ட மனிதரும் விவசாயத்திற்கு உரிமை கோரி வருகின்றனர் என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும். இந்த உண்மைகளைக் கவனத்தில் கொண்டு, எந்தப் பொதுகாரியத்துக்கும் உபயோகப்படுமாறு பஞ்சாயத்துக்களிடம் இந்த மதிப்பீட்டுக்கு உட்பட்ட தரிசு நிலங்களை ஒப்படைக்க அரசாங்கம் உத்தரவிடுகிறது. அவ்வாறு இத்தரிசு நிலங்களைப் பொதுக் காரியங்களுக்குப் பயன் படுத்தும்பொழுது பஞ்சாயத்து எந்த அதிகாரியிடமும் அனுமதி பெறவேண்டியதில்லை. இருந்த போதிலும், இந்த "மதிப்பீட்டுக்கு உட்பட்ட தரிசு" நிலங்களைத் தனி மனிதருக்கு உரிமையாக்கும் அதிகாரத்தைப் பஞ்சாயத்துக்களுக்கு அளிப்பது என்பது, அரசாங்கத்தின் நோக்கம் அல்ல என்பதைத் தெளிவாக உணர்தல் வேண்டும். ஆகவே மதிப்பீட்டுக்குட்பட்ட தரிசு நிலங்களை, தனிமனிதரிடம் ஒப்படைத்து உரிமை அளித்தல், குத்தகைக்கு விடுதல், அல்லது வேறு வகையில் தனியுடமையாக்குதல் முதலான உரிமைகள் நீங்கலாக ஏனைய பொதுக்காரியங்களுக்கு உபயோகப்படுத்தும் உரிமைகள் மட்டுமே பஞ்சாயத்துக்கள் பெற்றிருக்கின்றன என்று தெளிவாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஏதாகிலும் உரிமைகள் பஞ்சாயத்துக்கள் தனிமனிதருக்கு அளித்திருந்தாலும், அந்த உரிமை ஒப்படைப்பு மாநில அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தாது. மேலும் ரிவின்யூ டிவிஷனல் அதிகாரியின் மூலம் அரசாங்கம், பஞ்சாயத்துக்கு அளித்திருக்கும் அனுமதியை, முறைப்படி அறிவிப்பை அனுப்பி ரத்து செய்வதுடன், அது சரி என்று கருதுகின்ற காரியத்துக்கு அந்த "மதிப்பீட்டுக்கு உட்பட்ட தரிசு" நிலத்தின் பகுதியோ

அல்லது முழு நிலமோ எடுத்துக்கொள்ளப்படும். அவ்வாறு அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட தரிசு நிலங்கள் அரசாங்கத்தின் இலாகாக்களுக்கோ தனி மனிதருக்கோ அன்றி வேறு எந்தக் காரியத்துக்கும் உபயோகத்துக்கு அளிக்க அரசாங்கத்திற்கு தகுதியும் அதிகாரமும் உண்டு. அவ்வாறு எடுத்துக்கொள்ளப்படும் தரிசு நிலங்களுக்கு எந்த வகையான நஷ்ட ஈடும் பெறுவதற்குப் பஞ்சாயத்துக்கு உரிமையில்லை.

(ii) மதிப்பீட்டுக்கு உட்படாத தரிசுகள்.—மதிப்பீட்டுக்கு உட்படாத தரிசுகள் என்ற பிரிவினைச் சேர்ந்த நிலங்களைப் பற்றி அரசாங்கத்தின் நில தலநிர்வாகத் துறையின் 1960 ஏப்ரல் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 608-ல் ஏற்கனவே தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவின் 3-வது பாராவில், "சட்டப்படி, மதிப்பீட்டுக்கு உட்படாத தரிசு நிலங்கள் எல்லாம் பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒதுக்கி வைக்கப்படாத (Un-reserved) நிலங்கள் என்று கருதப்படும்" என்று முன்னரே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஆகவே, சாதாரணமாக, மதிப்பீட்டுக்குட்படாத தரிசு நிலங்கள் எல்லாம் பஞ்சாயத்தின் அதிகாரத்துக்குட்பட்டதேயாகும். இந்த வகைத் தரிசு நிலங்களை எந்தப் பொதுக்காரியத்துக்கும் பயன்படுத்த பஞ்சாயத்துக்கு முழு சுதந்தரம் உண்டு.

(iii) நத்தம் புறம்போக்குகள்.—நத்தம் புறம்போக்கு பற்றிய இப்போதைய விதிகள், போர்டின் நிலை உத்தரவுகளின்படி (Standing orders) அமைந்த வீட்டு மனைகள் உரிமையாக்குதல் பற்றிய விதிகளால் கட்டுப் படுத்தப் பட்டுள்ளன. நத்தம் புறம்போக்குகளின் உபயோகங்களைப் பற்றிய பிரச்னையை ஆராயும்பொழுது, பல கிராமங்களைப் பொறுத்தவரையில், நத்தம் புறம்போக்குகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட நில அளவை எண்களுடன் (Survey numbers) சம்பந்தப்பட்ட பொதுவான நில அளவைப் படங்கள் (Survey sketches) உள்ளனவேயன்றி, நத்தத்தில் உண்மையில் இடம்பெற்றுள்ள நிலப்பகுதிகளைப்பற்றி விளக்கமான நில அளவைப்படங்கள் கிடைக்க இல்லை என்பதை நினைவுறுத்திக்கொள்ள வேண்டும். இருந்தபோதிலும், 1961 ஜனவரி 1-ம் தேதியில் யாருடைய சுவாதீனத்துக்கும் உட்படாத நத்தம் புறம்போக்குகளின் எல்லாப் பகுதிகளும், பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட எல்லாப் பொது காரியங்களுக்கும் பயன்படுத்திக்கொள்ள பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் அளித்து அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது. இத்தகைய நத்தம் புறம்போக்குகளின் பொது உபயோகத்துக்குப் பஞ்சாயத்து எந்த அதிகாரியிடமிருந்தும் முன் அனுமதி வாங்கவேண்டியதில்லை. நத்தம் புறம்போக்கின் சுவாதீனத்துக்குவராத அல்லது வீட்டு மனையின் ஒரு பகுதியாக இருக்கும் நத்தம் புறம்போக்கின் எந்த ஒரு பகுதியைப் பற்றியாவது சிக்கல் இருக்கிறது என்றாலும், சிக்கல் வரும் என்று தெரிந்தாலும், அந்தச் சிக்கலில் பஞ்சாயத்து தன்னை உட்படுத்துக் கொள்ளாமல் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அத்துடன் அந்த நத்தம் புறம்போக்குப் பகுதியின் உபயோகத்துக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமுன் ரிவின்யூ டிவிஷனல் அதிகாரியிடம் இது விஷயத்தைப் பற்றிய அவருடைய முடிவைக் கேட்டறிய வேண்டும். மதிப்பீட்டுக்கு உட்பட்ட தரிசு நிலங்களைத் தனியுடமையாக்கும் உரிமைக்குள்ள தடைகள் எல்லாம் நத்தம் புறம்போக்கு விஷயத்திலும் முழுதும் பொருந்துவதாகும். அரசாங்கமும், பஞ்சாயத்துக்கு எந்த ஒரு நஷ்ட ஈடும் கொடுக்காமல் நத்தம் புறம்போக்கின் எந்த ஒரு பகுதியையும் தாம் சரி என்று கருதுகிற எந்த காரியத்துக்காகவும் எடுத்துக்கொள்ள உரிமையுடையதாகும்.

5. இந்த உத்தரவு நிறைவேற்றப்படுகின்ற தேதியில் பொது நிலங்களின் இந்தப் பிரிவுகளில் மதிப்பீட்டுக்குட்பட்ட தரிசு, உட்படாத்தரிசு, நத்தம் புறம்போக்கு முதலிய பிரிவுகளில்) ஆக்கிரமிப்புகளும் இருந்துவரலாம். அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புக்கள் இருக்குமிடங்களில், இந்த உத்தரவுபடி பஞ்சாயத்துகளுக்குள்ள பொது நிலங்களின் உபயோகத்துக்குள்ள அதிகாரம் செயல்பட முடியாது. இந்த நிலை, ரிவின்யூ டிவிஷனல் அதிகாரி அந்த ஆக்கிரமிப்பை தேவையான பட்டா வழங்கியேனும், அல்லது வெளியேற்ற உத்தரவு பிறப்பித்தாவது தீர்த்து வைத்து முடிவுசெய்யும்வரை நீடிக்கும். இந்த உத்தரவு செயல்படத் தொடங்கியபின் தனிமனிதரின் ஆக்கிரமிப்புக்கு மேற்குறித்தபொது நிலங்கள் ஆட்பட்டிருந்தால் பஞ்சாயத்து, அந்த ஆக்கிரமிப்புகள் பற்றி ரிவின்யூ அதிகாரிகளுக்குப் புகார் செய்ய உரிமையுடையதாகும். அவ்வாறு புகார் செய்துகொண்டு, 1905-வது வருடத்திய நில ஆக்கிரமுப்புக்கள் சட்டத்தின்படி, ஆக்கிரமிப்பை வெளியேற்றுமாறு செய்துகொள்ள வேண்டும். இந்த முறை, நிர்வாக முறைகளின்கீழ் பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்கள் எல்லாவற்றுக்கும் பொருந்துவதாகும். பஞ்சாயத்திடம் சட்டப்படி ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களைப் பொறுத்தமட்டில், 1958-வது வருடத்திய பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள முறைப்படியும், அவற்றைச் செயல்படுத்த அங்குகூறப்பட்டுள்ள விதிகளின்படியும் செயல்பட்டு ஆக்கிரமிப்புக்கள் வெளியேற்றம் செய்ய பஞ்சாயத்துக்கள் நடவடிக்கை எடுக்கலாம். இந்த உத்தரவில் நிர்வாக உரிமை வழங்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு பகுதியில் பொது நிலத்தைச் சுவாதீனப்படுத்திக்கொள்வதைப்

பற்றி ஏதாவது சிக்கல் ஏற்படுமானால், பஞ்சாயத்து இந்த விஷயத்தைச் சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியின் முடிவுக்கு விட்டுவிடவேண்டும். ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியின் முடிவே இறுதி முடிவாக இருக்கும்

6. இந்த உத்தரவில் கூறப்பட்டுள்ள விஷயங்களையெல்லாம் பஞ்சாயத்துக்களின் கவனத்துக்கும் கொண்டு வருமாறு கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம அபிவிருத்தி. தலநிர்வாகத்துறை 4—4—81 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 972.)

வட்டார வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கிராமத்தொழில்களின் அபிவிருத்தி.

சமுதாய நலத் திட்டப் பகுதிகளில், கிராமக் கலை—கைத்தொழில்—இயந்திரத் தொழில் என்ற பிரிவின் கீழ்க் கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் சிறு மூலதனத் தொழில்கள் வளர்ச்சி பற்றியவேலைகள் தொழில்-வாணிகத் துறை இயக்குநரின் (Director of Industries and Commerce) நேரடி மேற்பார்வையில் இயங்கி வந்திருக்கிறது கதர்-கிராமக் கைத் தொழில் போர்டு, 1-4-60-லிருந்து சட்டப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு அமைப்பாக அறிவிக்கப்பட்டு 15-9-60-லிருந்து ராஜ்யக் கதர்-கிராமக் தொழில் போர்டினிடம் கிராமத் தொழில்கள் பற்றிய திட்டத்தை நிர்வகித்து,கதர்-கிராமத் தொழில் கமிஷனுடைய அதிகார வரம்புக்குட்பட்டு அமுல் நடத்தும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. ராஜ்யத்தில் கிராமத் தொழில் திட்டங்களை அமுல் நடத்தும் விஷயங்களில் சட்டத்துக்குட்பட்ட கதர்-கிராமத் தொழில் போர்டு தோன்றிய பின், ஓர் ஒருங்கிணைந்த அமைப்பு முறை இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், அரசாங்கம் சமுதாய நலத் திட்டத்தின் கீழ் நடைபெறும் தொழில் திட்டங்களை எந்த அமைப்பின் மூலம் அமுல்நடத்தலாம் என்ற விஷயத்தை ஆராய்ந்திருக்கிறது. ஐந்தாண்டுக்கான வளர்ச்சி பற்றிய திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், கிராமக் கலை கைத்தொழில்-இயந்திரத் தொழில் பிரிவின் கீழ் முதனிலை வட்டாரத்திற்கு (I Stage Block) ரூ. 65,000 மும் இரண்டாம்நிலை வட்டாரத்திற்கு (II Stage Bloc k) ரூ50000 மும் செலவு செய்ய இடமளிக்கப்பட்டுள்ளது. கதர் கிராமத் தொழில்கள் கமிஷனின் அதிகார வரம்புக்கு உட்படாத தொழில் திட்டங்களை அமுல் நடத்தும் பொறுப்புகளை ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டினிடம் ஒப்படைக்கலாம், என்றும் அத்திட்டங்களின் செலவினங்களை ராஜ்யஅரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கதர் கிராமத்தொழில்கள் கமிஷன் யோசனை கூறியுள்ளது. கதர்-கிராமத் தொழில்கள் கமிஷனின் வேலை முறைகளையும், திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கிராமக் கலை-கைத்தொழில் இயந்திரத் தொழில் பிரிவின் கீழ் நிறைவேறும் திட்டங்களின் கீழ் வேலை முறைகளையும் தொடர்புபடுத்தும் பிரச்சினையை அரசாங்கம் மிகுந்த கவனத்தோடு ஆராய்ந்துள்ளது. அந்த ஆராய்ச்சியின் பலனாக ராஜ்யக் கதர்-கிராமத் தொழில் போர்டிடம் இந்த வேலைகளைஉடனே ஒப்படைப்பது என்று முடிவு செய்துள்ளது. அந்த முடிவின்படி அரசாங்கம் கீழ்க்கண்ட உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது:—

(i) வட்டாரத்தின் திட்டமிடப்பட்ட வரவு செலவு திட்டத்தில் உட்படுகின்ற கிராமக் கலை, கைத் தொழில்-இயந்திரத் தொழில் பிரிவின்கீழ் போடப்படும் எல்லாத் திட்டங்களையும் வகுத்துக்கொண்டு நிறைவேற்றுகின்ற பொறுப்பும் ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டைச் சேரும். அதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதும்.

(ii) மேற்குறித்த திட்டங்களைப் பற்றிய உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடுகளையும், கணக்குகளையும் அனுப்புகின்ற பொறுப்பு ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டைச் சேர்ந்ததாகும்.

2. முதற் பாராவில் கூறப்பட்டுள்ள முடிவுகளைச் செயல்படுத்துவதற்கான வழி முறைகள் வருமாறு :

(i) வட்டார வளர்ச்சி அதிகாரி, தொழில் வளர்ச்சி அதிகாரியின் (Extension officers, Industries) துணையுடன், ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டின் கிராமத் தொழில்கள் அதிகாரி, ஆகியோரைக் கலந்தாலோசித்துத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

(ii) அவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டங்கள் தொழில் முறை ஆய்வுக்காக (Technical Scrutiny) ராஜ்யக் கதர் கிராமத் தொழில் போர்டு செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும். இந்த போர்டு அவைகளை தன்னுடைய சிபார்சுகளுடன் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தமிழ் நாடு அரசாங்கக்கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறைக்கு அனுப்பி வைக்கும்.

(iii) திட்டங்களுக்கு அரசாங்க அங்கீகாரம் கிடைத்ததும், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், ராஜ்யக் கிராமக் கதர் தொழில் போர்டின் கிராமத் தொழில்கள் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து உடனே திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டின் கிராமத் தொழில் அதிகாரிகள் திட்டங்களுக்கு வேண்டிய தொழில் முறை வழி வகைகளைப்பற்றி யோசனை அளிப்பார்கள்.

(iv) வட்டார வளர்ச்சி அதிகாரி அங்கீகாரம் பெற்று நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றத்தைப் பற்றிய கால் ஆண்டுக்கான அறிக்கை ஒன்றைத் தயாரித்து, கால் ஆண்டு முடிந்த மறுமாதம் 10-நதேதியளவில், ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டுக்கு அனுப்ப வேண்டும்.

(v) வட்டார வளர்ச்சி அதிகாரி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பற்று வைக்கப்படும் ஒவ்வொரு திட்டத்தின் ஒவ்வொரு பகுதி வேலைக்கும்ஆன செலவுகளைப் பற்றிய அறிக்கை ஒன்றினைத் தயாரித்தளிக்க வேண்டும்.

(vi) வட்டார வளர்ச்சி அதிகாரி, ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டுக்கு வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிய எல்லா யோசனைகளையும் (குறித்த தேதிகளில்) அனுப்பிவைக்க வேண்டும்.

(vii) கிராமக் கலை-கைத் தொழில்-இயந்திரத் தொழில் பிரிவின் கீழ் வருகின்ற திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட தொகைகளைப் அரசாங்கத்தின் திட்டவட்டமான உத்தரவின்றி பிற திட்டங்களுக்குப் மாற்றக்கூடாது.

(viii) கிராமக் கலை-கைத்தொழில் பிரிவின் கீழ் சமுதாய நலத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளைப் பயன்படுத்துகின்ற பொறுப்பும், அது சம்பந்தமான திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பும், ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டையும், சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அதிகாரியையும் சார்ந்தது.

(ix) சமுதாய நலத்திட்டத்தின் கீழ் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற கலெக்டர்கள் முழு மூச்சுடன் உற்சாகத்துடன் பாடுபடவேண்டும்.

3. ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டுக்கு உதவியாகப் பணியாற்ற ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் வளர்ச்சி அதிகாரிகள் (Extension officers, Industries) அரசாங்கப் பணியாளர்களாகவும் (Government Staff) அவர்களுடைய சேவை மாநிலக் கதர் கைத்தொழில் போர்டுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது என்றும் கருதப்படுவர் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது. இந்தத் தொழில் வளர்ச்சி அதிகாரிகளின் தேர்வு தமிழ் நாடு பொதுத் துறைப் பணி கமிஷனால் (Madras Public Service Commission) நடத்தப்படும். இதுவரை தொழில் வாணிகத் துறை இயக்குநர் (Director of Industries and Commerce) நியமன அதிகாரியாக இருந்தது போலல்லாமல், இனி கிராம அபிவிருத்தி—தலநிர்வாகத் துறையின், கிராம அபிவிருத்திக் கமிஷனரே (Additional Devolopment Commssioner) இதற்கு நியமன அதிகாரியாகவும் இருப்பார். தொழில் வளர்ச்சி அதிகாரிகள், வட்டார நிலையில், வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கும், மாவட்ட நிலையில் ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டின் கிராமத் தொழில்கள் அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டுப் பணியாற்றுவார்.

தொழில் வளர்ச்சி அதிகாரிகளைப் பற்றிய செலவுகள் ", 43. தொழில்கள்-வழங்கல்" என்ற பிரிவில் பற்று வைக்கப்படவேண்டும். அவர்களைப் பற்றிய வரவு செலவு மதிப்பீட்டை ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்போர்டு தமிழ் நாடு அரசாங்கத்தின் கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறைக்கு அனுப்பி வைக்க வேண்டும். தொழில் வளர்ச்சி அதிகாரிகளின் சம்பளம்-படிச் செலவு முதலான செலவுகளில் 50 சத வீதத்தை இந்திய அரசாங்கத்திடமிருந்து மானியமாகப் பெறுகின்ற பிரேரணைகளையும் ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டு தமிழ் நாடு அரசாங்கத்தின் கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறைக்கு அனுப்ப வேண்டும்.

4. ராஜ்யக் கதர்-கிராமத் தொழில்கள் போர்டு தொழில் வளர்ச்சி அதிகாரிகளைக் கட்டுப்படுத்தவும், மேற்பார்வை செய்யும் நியமிக்கப்படும் அதனுடைய அதிகாரிகளின் அதிகாரங்களை ஆராய்ந்து நிர்ணயிக்கும்.

கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை 1—4—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 964ன் சுருக்கம்.

சமூகக் கல்வி—குடும்பக் கட்டுப்பாடு

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின் பொறுப்பு

ஆரம்பக் கல்வியை பஞ்சாயத்துக்களிடமும், பஞ்சாயத்து யூனியன்களிடமும் ஒப்படைப்பது சம்பந்தமாக கல்வித்துறையில் 1960 செப்டம்பர், 27-ல் வெளியான 2075-ம் எண் ஆணையில் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. இது சம்பந்தமாக பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் ஆற்ற வேண்டிய பணிகளையும் கடமைகளையும் விரிவாகக் குறிப்பிடவேண்டுமென கட்டளைகளும் பிறப்பிக்கப் பட்டுள்ளன. மேற் சொல்லிய கட்டளைகளில் பஞ்சாயத்துக்கள் அமைக்கவேண்டிய பஞ்சாயத்துக் (சமூகக் கல்வி) குழு அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப் பட்டு வருகிறது. பஞ்சாயத்துக் (சமூகக் கல்வி) குழு அமைப்பு அதன் எண்ணிக்கை ஆகியவை குறித்துப் பஞ்சாயத்துக்கள் தீர்மானிக்கவேண்டும். மேற்

சொல்லிய குழு இதர நபர்களோடு பின்வரும் நபர் களையும் கொண்டிருக்கவேண்டும் :—

(i) குழுவின் தலைவராகப் பஞ்சாயத்துத் தலைவர்.

(ii) குறைந்த பட்சம் ஒரு அரிஜன நபர்.

(iii) குறைந்த பட்சம் ஒரு பெண் உறுப்பினர் அவர் பஞ்சாயத்து உறுப்பினராக இருக்கவேண்டும் தேர்ந்தெடுக்கப்பட வில்லை எனில் விரும்பிச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

(iv) சந்தர்ப்பத்திற்கேற்ப மேற்படி பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர்.

(v) மேற்படி பிரதேசத்தில் விசாரணை அதிகாரம் வகிக்கிற கிராமத் தலைவர்.

மேற் சொன்ன குழுவினர் உறுப்பினர் சேர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். மற்றும் பள்ளி செல்லும் வயதுடைய சிறுவர்கள் பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று வருவதையும் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தப் பட்ட வேலையையும் மேற்படி குழுவிடம் ஒப்படைக்க வேண்டுமென அரசினர் கருதுகின்றனர். நான்கு அல்லது நான்குக்கு மேல் குழந்தைகளைப் பெறும் பெற் றோரை வசப்படுத்துவதில் இக்குழு பயனுள்ளதாய் இருக்கும் எனக் கருதப்படுகிறது. கிராம மக்களிடையே சமூகக் கல்வியைப் பரப்பு வதில் இதுவும் ஒரு பாடமாக அமைய வேண்டும். பஞ்சாயத்துக் (சமூகக் கல்வி) குழு உறுப்பினரில் ஒருவரான கிராமத் தலைவர் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை முந்திய மூன்று மாதங்களில் நான்கு அல்லது நான்குக்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றுள்ள பெற்றோர் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அனுப்ப வேண்டும். மேற்படி முழுவினர் இப்பட்டியலை முறைப்படி அறிந்து கொள்ள வேண்டும். பிறகு பெற் றோர்களை அணுகி ஆலோசனை கூறி அறுவை சிகிச்சை செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். பிறப்புப் பதிவேடு சரிவரப் பூர்த்தி செய்யப்பட்டும், எது வும் விடப்படாமலும் இருக்கிறதா எனக் கவனமுடன் பார்த்துக் கொள்ள வேண்டும். பிறப்புப் பதிவேடு நாளது தேதிவரை சரிவர வைத்து வரப்படவேண்டும்.

மேற்படி பஞ்சாயத்துக் (சமூகக் கல்வி) குழுவினரின் பெண் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர் கிராமத்தில் செல்வாக்குடைய வராக இருக்க வேண்டும். அவர் கிராமத்திலுள்ள தாய்மாரை அணுகி குடும்பக் கட்டுப்பாட்டுச் சிகிச்சை முறைகளைப்பற்றிய ஆலோ சனைகளைக் கூறுபவராக இருக்க வேண்டும். இதைப் போலவே குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சை முறைகளைக் குறித்து ஆலோசனை பெற விரும்பும் ஒவ்வொரு கிராமத் திலுள்ள தந்தையருக்கு மேற்படி குழுவில் உள்ள ஆண் உறுப்பினர் ஆலோசனைகள் கூறவேண்டும். சுகாதாரத் துறையில் 1960 மே 31 தேதியன்று வெளியான 1490 எண் ஆணையில் பிறப்பித்த உத்தரவுகளை அனுசரித்துக் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சார வேலை, ஆரம்பச் சுகா தார நிலையங்களில் உள்ள சுகாதாரப் பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் தந்தையருக்குப் போதிய பாடம் புகட்டி அவர்களில் ஆண் உறுப்புத் தையலைச் செய்து கொள்ள விரும்பு வோரை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வேலை குடும்பக் கட்டுப் பாட்டுப் பணியில் போதிய பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. குடும்பக் கட்டுப் பாட்டுப் பிரச் சார வேலையைத் திறம்படச் செய்து முடிக்க மேற் சொன்ன குழு உறுபபினர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்க வேண்டும். இதற்காக வட்டார வளர்ச்சிச் சிப் பந்திகள் பயிற்சி முகாம்களுக்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்து அவர்களுக்குப் போதிய போதனை அளிக்க வேண்டும்.

[இது 1961 ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதி வெளியிடப்பட்ட 266-ம் எண் கிராம அபிவிருத்தித்துறை அரசாங்க ஆணையின் விவரக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இந்த ஆணை "கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையினரின் 1961–62 மானியக்-கோரிக்கை விளக்க உரை" என்ற நூலில் இணைக்கப்பட்டுள்ளது.]

பஞ்சாயத்து யூனியன்களின் நிலைக்குழுக்களைப் பற்றிய அமைப்பு முறையும், குழுக்களுக்கு அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும்

1960-ம் ஆண்டு டிசம்பர்மீ 23-ம் தேதி "பஞ்சாயத்துச் செய்தி" தலையங்கம், கீழ்க்கண்ட பிரச்சினைகளைக் குறிப்பிட்டுள்ளது :—

1. பஞ்சாயத்து யூனியனின் குழுக்களுடைய அமைப்பு நடைமுறைகள் பற்றிய விதிகளை அரசாங்கம் இன்னமும் வெளியிடவில்லை. 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் கூறப்படும் எல்லா விதிகளையும் காலதாமதமின்றி வெளியிடுதல் நலம்.

2. நியமனக் குழுவில் வெளியார்களைச் (Outsiders) சேர்த்துக்கொள்ளுதலைத் தடை செய்யவேண்டும்.

I. இப் பிரச்சினைகளைப் பற்றிய இன்றைய நிலைமை வருமாறு :—

(1) நிலைக்குழுக்களின் அமைப்பும், 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள விதிகளும்:—

1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 53-வது பிரிவின் கீழ், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்குக் குழுக்களை அமைக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கென அரசாங்கம் விதிகளை அமைக்காத போதிலும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 178 வது பிரிவின்படி, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் பல்வேறு விஷயங்களில், விதிகளை வகுக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு அளித்திருந்த போதிலும், அரசாங்கம், எல்லா விஷயங்களுக்கும் விதிகளைப் பிறப்பிக்க வேண்டும் என்கிற கட்டாயமில்லை. சட்டப்படி பார்த்தால், சில விஷயங்களில் விதிமுறைகள் பிறப்பிக்கப்படும் பொழுது, அவை சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள், அந்த விதிகளுக்கு மாறுபடாமல் இருக்கவேண்டும். ஆனால் விதிகளே வெளியிடாமல் இருக்கும்போது, நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் இருந்து கொண்டுதான் வருகிறது. எப்படி இந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம் என்பது பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் நல்லெண்ணத்திற்கு விடப்படுகிறது. இப்படிப்பட்ட விஷயங்களில், ஆரம்பத்திலேயே அரசாங்கம் இதைச் செய்து விடாமல், அந்தந்தப்பகுதிமக்களின் பொது நல ஆர்வத்திற்கேற்றபடி அவரவர்களே அதைச் செய்துகொள்ள விட்டுவிடுவதும், அதனால் விளைகின்ற பலாபலன்களைக் கவனித்துப் பிறகு இப்படிச் செய்வதனால் திட்டவட்டமான நன்மை உண்டு என்று அனுபவபூர்வமாகக் கண்டறிந்த போதுதான், அரசாங்கம் இந்த விதிகளை அமைக்க வேண்டும் என்பதும் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் பற்றிய விதிகளின் முதல் தொகுதி, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்களைப் பொருத்தமட்டில் 1958-ம் வருடத்திய பஞ்சாயத்துக்கள் சட்டத்துடன் முரண்படாதவரை, 1950 வருடத்திய பஞ்சாயத்துச் சட்ட விதிகள் தொடர்ந்து அமுலில் இருந்து வரும். அந்தப்பழைய விதிகள் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ், மறுமுறை பிறப்பிக்கப்பட வேண்டும். இப்பிரச்சினை, இப்பொழுது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

(2) நியமனக்குழுவுக்கு வெளியார்களைச் சேர்த்துக் கொள்ளும் விஷயம் :—

1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 53-வது பிரிவு துணைப்பிரிவு (1) உட்பிரிவு (a) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு நியமனக் குழு இருக்கவேண்டுமென்று கூறுகிறது. இந்த நியமனக் குழுவில், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் தலைவர், கமிஷனர், பஞ்சாயத்து யூனியனால் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினர் ஆகியோர் இடம் பெறுவார்கள். மேற்கண்ட விதியின் துணைப்பிரிவு (2)ன் கீழ், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் துணைப்பிரிவு (1)ன் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர்களை—அவர்கள் எந்தக் குழுவைச் சேர்ந்தவராயினும்—சேர்த்துக்கொள்ளலாம். அப்படிச் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களாய் உள்ள உறுப்பினர்கள், யூனியன் மன்றத்தின் உறுப்பினர்களாய் இல்லாதவர்களாகவும், அப்படிச் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை, குழுவில் உள்ள மன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் போகக்கூடாது என்றும் அந்த விதியில் கூறப்பட்டுள்ளது.

53-வது பிரிவின் துணைப் பிரிவு (2) ல் மிகவும் பொதுப்படையாகவும், நியமனக்குழுவிலும் வெளியார்களைக் கூட சேர்த்துக்கொள்ள பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு அதிகாரம் அளித்திருந்த போதிலும், அந்தப் பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள "சேர்த்துக் கொள்ளும் அதிகாரம்", (Power of Cooption) துணைப் பிரிவு (1)-ன் உட்பிரிவு (b) யில் குறிப்பிட்டுள்ள குழுக்

களில் மட்டும்மே செலுத்தப்படவேண்டும் என்பதுதான் அதனுடைய உட் கருத்தாகும். அதாவது உட்பிரிவு (b)யில் சொல்லப்பட்டுள்ள கல்விக் குழு, (Education committee) பொது அலுவல் குழு, (General purpose committee) மற்ற குழுக்கள் ஆகியவற்றையே இது குறிக்கும். உட்பிரிவு (a)-யின் கீழ் அமைக்கப்படும் நியமனக்குழுவை (Appointment committee) இது குறிக்காது. இந்த உட்கருத்தை, மிகவும் தெளிவாகச் சொல்லும் வகையில், துணைப் பிரிவு (2)-ஐத் தகுந்த முறையில் திருத்தி அமைக்க, நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் துணைப் பிரிவு அவ்வாறு திருத்தப்படும் வரையில், மேலே விளக்கியுள்ள நிலைமையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடந்து கொள்ளும் படியும், நியமனக்குழுவின் உறுப்பினராக எந்த நபரையும் சேர்த்துக்கொள்ளாமல் இருக்கும்படியும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

எஸ். கிருஷ்ணசாமிப் பிள்ளை,
அரசாங்கத் துணைக் காரியதரிசி.

ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகளின் நீக்கம்.
(Removal of objectionable encroachments)

1950-ம் வருடத்திய தமிழ்நாடுப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட புறம்போக்கு நிலத்தின் உபயோகத்தை ஒழுங்குபடுத்தும் விதிகளின்படி, பஞ்சாயத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிலத்தில் நடக்கும் ஆக்கிரமிப்பை நீக்குவதற்குப் பஞ்சாயத்துக்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்துக்கள் நடவடிக்கை எடுக்காமல் புறக்கணிக்குமானால், குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு ஆட்சேபகரமானது என்று ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி கருதும் பட்சத்தில், அதை நீக்குவதற்கு உத்தரவு பிறப்பிக்கும் உரிமையை அவர் பெற்றிருக்கிறார். ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியின் அந்த நடவடிக்கையை எதிர்த்து மாவட்டக் கலெக்டருக்கு அப்பீல் செய்யப்பட்டால், அதன் பேரில் அந்த ஆக்கிரமிப்பு சரியானதா, அல்லவா என்று கலெக்டர் முடிவு செய்வார். அதுவே இறுதியான முடிவாகும். 1950-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்படி, பஞ்சாயத்துக்கள் தம் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான செயல்முறைகளைப்பற்றிய ஒரு விரிவான அறிக்கையை, ரெவின்யூபோர்டு, சம்பந்தப்பட்ட கலெக்டர்களுக்கு அனுப்பியுள்ளது. அவற்றுள் ஆக்கிரமிப்பு நீக்கத்துடன் தொடர்புகொண்ட செயல்முறைகள் பின் வருமாறு :

1. பஞ்சாயத்துக்களால் கட்டுப்படுத்தப்பட்ட புறம்போக்குகளிலும், கிராமத்திலுள்ள பிற புறம்போக்குகளிலும் நிகழ்ந்திருக்கும் ஆக்கிரமிப்புகளைக் கர்ணம் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து பதிவு செய்யவேண்டும். அவர் ஆக்கிரமிப்புப் புறம்போக்குகளின் பட்டியல் ஒன்றினைத் தயாரித்து, ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அதைச் சரி பார்த்த பின்னர், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அந்தப் பட்டியலைக்கொண்டு, 1950-ம் வருடப் பஞ்சாயத்துச் சட்டத்தின் 60 (2) பிரிவின்கீழ் புறம்போக்கு நிலத்தை ஒழுங்குபடுத்தும் விதிகளின்படி, பஞ்சாயத்துக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட கர்ணம் இந்த ஆக்கிரமிப்புகளைக் குறித்த பி. மெமோக்களையும் தயாரித்து வட்ட அலுவலகம் அல்லது எஸ்டேட் மானேஜர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். அந்த அலுவலகம் அவைகளைப் பதிவு செய்து கொண்டு அடுத்த மூன்று மாதத்திற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்கும். அந்தக் கால அளவுக்குப் பின் வட்ட அலுவலகம் (தாலூகா ஆபீஸ்) கர்ணம் அனுப்பியுள்ள பட்டியலில் உள்ள ஆக்கிரமிப்புக்களைப் பற்றிச் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் முடிவை விசாரித்து அறியும். ஆக்கிரமிப்புக்கள் நீக்கப்பட்டதாகப் பஞ்சாயத்துக்கள் அறிவித்தால், அதன் பின் வட்ட அலுவலகம் பி. மெமோக்களை நிறுத்தி வைக்கும். பஞ்சாயத்துக்கள் யாதொரு நடவடிக்கையும் எடுக்காதிருந்தால், ரெவின்யூ அதிகாரிகள் ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பதா இல்லையா என்பது குறித்து முடிவு செய்வர். ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டோ, அன்றித் தான் நேரில் சென்று கண்டறிந்ததன் பேரிலோ தாசில்தார் அல்லது எஸ்டேட் மானேஜர், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கு அவருடைய முடிவினை அறியும்பொருட்டு ஒரு அறிக்கையை அனுப்புவார்.

2. ஆக்கிரமிப்புக்களைத் தடுக்க, 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் இதுபோன்றதொரு சலுகையை அளிக்கிறது. அச்சட்டத்தின் 82 (2) பிரிவின் படி பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குட்பட்ட நில ஆக்கிரமிப்புகளைப்பற்றி அவ்வூர் கர்ணம் ஓர் அறிக்கையைதயாரித்து, பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு (Executive Authority) அல்லது பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு ஒன்றும், ரிவினியூ அதிகாரிகளுக்கு ஒன்றும் அனுப்பவேண்டும். அதன் பின் அரசாங்கம் குறித்துள்ள மூன்று மாதக் கால வரையறைக்குள் ஆக்கிரமிப்பை நீக்கி முடிக்கவேண்டும். மூன்று மாதத்துக்குள் நீக்கப்படவில்லை என்றால் 1905-ம் வருடத்திய சென்னை நில ஆக்கிரமிப்புக்கள் சட்டத்தின்படி, ரெவின்யூ அதிககாரிகள் நடவடிக்கை எடுத்து, உத்தரவு பிறப்பித்து ஆக்கிரமிப்பை நீக்கவேண்டும். 1950-ம் வருடத்திய தமிழ்நாடுப் பஞ்சாயத்துக்கள் சட்டம் அல்லது 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் ஆகிய சட்டங்களின்படி பஞ்சாயத்துக்களுக்குட்பட்ட நிலத்தில் நிகழும் ஆக்கிரமிப்பை நீக்க நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரங்கள் பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்துக்கள் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காதபோதுமட்டிலுமே, ரெவின்யூ இலாகா தலையிட்டு அக்காரியத்தைச் செய்யும்.

எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை,

அரசாங்கத் துணைக் காரியதரிசி (பஞ்சாயத்து),

எழுத்தாளர்களின் கவனத்திற்கு

'கிராம நலத்தில் கதை கட்டுரைகள் எழுதியுள்ள எழுத்தாளர்களுக்கு சன்மானத் தொகை கடந்த ஆறு மாதங்களாக அனுப்பப்படவில்லை. 'கிராம நலம்" பத்திரிகையின் நிர்வாக மாறுதலினாலும், வேறு பல அசந்தர்ப்பங்களினாலும் சன்மானத் தொகையை உடனுக்குடன் அனுப்ப இயலவில்லை. இவை உடனே அனுப்பப்படுவதற்கான ஏற்பாடுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்பட்ட காலத் தாமதத்திற்கு எழுத்தாளர்கள் மன்னிக்கவேண்டுகிறோம்.

எழுத்தாளர்கள் கதை, கட்டுரைகள் அனுப்பும்போது தங்களுடைய முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். அவைகளுடன் சந்தாதாரர்களாக இருப்பவர்கள் சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

ஸ்டாம்பு வைத்து அனுப்பவேண்டாம்.

ஆசிரியர்,
"கிராமநலம்"
(கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை)
சென்னை-9.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.



28-3-61 அன்று சென்னையில் தமிழ்நாடு நகராட்சி மன்றத் தலைவர்களின் ஒன்பதாவது வருடாந்திர மகாநாட்டை முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் துவக்கி வைத்தார்.

21-3-61-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள வட்டாரங்களிடையே நடைபெற்ற விளையாட்டுப் பந்தயங்களில் பரிசளிப்புவிழா.



சர்வதேச சைவ உணவு சாப்பிடுவோர்கள் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ இன்னொசண்ட் 19-3-61-ல் சென்னை மாநகராட்சி மிருகக் காட்சி சாலைக்கு ஒரு குட்டி யானையைப் பரிசாக அளித்தார்.

Regd. No. M. 7277.

©
தமிழ்நாடு அரசாங்கம்
1961

24-3-61-ல் ராஜாஜி ஹாலில் சிறந்த சேவை புரிந்துள்ள ஆசிரியர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கப்பட்டன. மாநிலக் கவர்னர் விருது வழங்கும் காட்சி. [விவரம் 12-ம் பக்கம் பார்க்க.]



28-3-61-ல் சென்னை ராஜாஜிஹாலில் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு உபகர ணங்கள் இனமாக வழங்கப் பட்டன. முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் இந்தப் பொருள் களைப் பார்வையிட்டார்.

அம்மைத் தடுப்புத் திட்டம் 21-3-61-ல் ஆரம்பித்து வைக் கப்பட்டது. மாநில அமைச் சர்கள் அம்மைத் தடுப்பு ஊசி குத்திக் கொள்வதைப் படத்தில் காணலாம்.